Registered No. M. 1514 2 SEP 1941 பிரமோதூத வருஷ கார்த்திகை மீ




*The Progressive Printers,* *17, Coral Merchant Street, Madras.*

# “செங்குந்த மித்திரன்”

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்ற மடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னினும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சீரிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் ‘செங்குந்த மித்திர’னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானால் நமது ‘மித்திர’னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| | | |
|---|---|---|
| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ. பை. | |
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிக்கா ,, | 2—0—0 | ஒன்றுக்கு 0—2—6 |

# “செங்குந்தர் பிரபந்தத் திரட்டு”

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இது கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தர் செய்தருளிய ‘ஈட்டி எழுபது,’ ‘எழுப்பெழுபது’, மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய களிப்போருபது, திருக்கை வழக்கம், பிள்ளைத் தமிழ், கலித்துறை மாலை, தசாங்கம், ஊசல், லாலி, கட்டியம், எச்சரிக்கை, மங்களம் முதலியன செங்குந்த விநாயகர் மாலை, செங்குந்த சிலாக்கியர் மாலை, செங்குந்த வேற் பதிகம், செங்குந்த மரபு விளக்கம், தூறுவளி, திருக்கை வழக்கத்தந்தாதி, செங்குந்த குலமாட்சி ஆகிய 15 பிரபந்தங்களும் அடங்கியது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத்திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

உயர்ந்த பதிப்பு காலிகோ பயிண்டில் பொன் லெட் செய்தது. விலை ரூ. 2-8-0.
தபாற் கூலி பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்கும் இடம்:—

**மானேஜர், ‘செங்குந்த மித்திரன்’ ஆபீஸ்,**

**சேத்துப்பட்டு, சென்னை**

காஞ்சிபுரம் செங்குந்தர் பாடசாலைக் கட்டிட தர்மநிதிச் சீட்டு 377
கடவுள் வணக்கம்:—செங்குந்த குலதிலகர்களாகிய இரட்டையர் பாடிய அம்மானை 378
பத்திரிகாசிரியர் முன்னுரை:—சட்டசபை நியமனம் முதலியன 379
ஆராய்ச்சிப் பகுதி:—நமது புராதன வழக்க ஒழுக்கங்களின் ஆராய்ச்சி 381
புது உலகமும் பழைய உலகமும்:—சுதேசியம் 384
,, ,, ஜப்பான் வர்த்தக நிலை 386
,, ,, கதர் 387
தொழிற் பகுதி:—நெசவும் சாயத் தொழிலும் 388
சீர் திருத்தப் பகுதி:—ஒற்றுமை மணத்தினுயர்வும் செங்குந்த மணங்களிற் சில சீர்திருத்தங்களும் 389
,, பவானியில் மது விலக்கின் மகத்துவம் 391
,, ஒரு கோழிக் கூற்று 392
இளைஞர் பக்கம்:—வறுமையும் முயற்சியும் அல்லது பிகராம் ஜீ பஸ்யாரி 394
சுகாதாரப் பகுதி:—குடியால் விளையும் கேடுகள் 396
மாதர் பகுதி:—செங்குந்த மித்திரன் கும்மி 401
செங்குந்த யாத்திரைவாசி 402
காவல் பகுதி:—மீனாட்சிசுந்தரம் அல்லது விவேகமுள்ளசுந்தரம் 405
நிரூபங்கள் 409
அனுதாபம் 411
வர்த்தமானம் 412
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிருவாகசபைக் கூட்டம் 414
செங்குந்தர் கல்விநிதியின் காப்பாளர் சபையின் அமைப்பும் சட்டதிட்டங்களும் 415
நன்கொடைகள் 416
செங்குந்த மித்திரன் பஞ்சாங்கம் 416


---

## காஞ்சிபுரம் செங்குந்தர் பாடசாலைக் கட்டிட தர்மநிதிச் சீட்டு

சீட்டுவிற்பனை முடிவடையும் தேதி 10-1-31 : பிரைஸ் எடுக்குந் தேதி 18-1-31

மொத்தம் பிரைசுகள் **849** — சீட்டு 1-க்கு அணு **4**.

முதல் பிரைஸ் ரு. **500**

| | |
|---|---|
| (2) 2-வது பிரைஸ் 1-க்கு ரூ. 250 | (6) வது பிரைஸ் 10-க்கு ரூ. 100 |
| (3) 3 ,, ,, 1-க்கு ரூ. 100 | (7) ,, ,, 30-க்கு ரூ. 150 |
| (4) 4 ,, ,, 2-க்கு ரூ. 100 | (8) ,, ,, 100-க்கு ரூ. 300 |
| (5) ,, ,, 4-க்கு ரூ. 100 | (9) ,, ,, 200-க்கு ரூ. 400 |
| | (10) ,, ,, 500-க்கு ரூ. 500 |

1. காஞ்சிச் செங்குந்த மாகாஜன சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் செங்குந்தர் பாடசாலைக்கு ஜில்லாக் கல்வி அதிகாரிகள் பாடசாலைக்கெனத் தனியே கட்டிடம் வேண்டியது அவசியமென வற்புறுத்துவதால் அக்குறைய நீக்க ஓர் இடம் வாங்கிப் பாடசாலையை வைத்து நடத்தலாமென்பது இச்சீட்டு ஏற்படுத்தியதின் முக்கிய நோக்கமாகும்.

2. சீட்டு வாங்கினவர்கள் தகவல் தெரிந்துகொள்ள ரிப்ளைகார்டு எழுதவேண்டும்.

3. உத்தேசித்த தொகை ரூ. 6000 மும் சேராவிட்டால் விகிதாசாரம் பிரைஸ் தொகை கொடுக்கப்படும்.

4. பிரைஸ் எடுத்த 15-நாளைக்குள் வந்தவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

5. இது சம்பந்தமான எல்லாக் கடிதங்களும் "காரியதரிசி, செங்குந்தர் பாடசாலைக் கட்டிட தர்ம நிதிச் சீட்டு நிலயம், பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம்" என்ற விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

திரு. M. சாமிநாத முதலியார், தலைவர்.

திரு. S. லக்ஷ்மண முதலியார், C. அருணசல முதலியார், காரியதரிசிகள்

## செங்குந்த குலதிலகர்களாகிய இரட்டையர் பாடிய அம்மானை

[திரு. R. V. கருப்பண்ண முதலியார் அனுப்பியவை]

(தொகுதி 4, பகுதி 10, 346-ம் பக்கத் தொடர்ச்சி)

நேயமிகு மாயல்வளர் நீலகண் டேச்சுரனார்
ஆயுமவர்க் கெல்லா மருண்மேக மம்மானை
ஆயுமவர்க் கெல்லா மருண்மேகமா மாயின்
காய முழுதுங் கருக்காதோ வம்மானை
கண்டமட்டுத் தான் கறுப்புக் காட்டினதே
[யம்மானை.

மத்தமதி சூடு மயிலைவிரு பாட்சிலிங்கர்
சுத்தவடி வெல்லாஞ் சுடர் வடிவே யம்மானை
சுத்த வடிவெல்லாஞ் சுடர்வடிவே யாமாயின்
மத்த கத்திற்றிங்கள் வயங்குமோ வம்மானை
வயங்கு மிருகண்ணாய் மருவுதலா லம்மானை.

காரமருங் கண்டர் கயிலாய நாயகனார்
பாரறியக் கையிற்பணம் படைத்தா ரம்மானை.
பாரறியக் கையிற் பணம் படைத்தா ராமாயின்
ஊர்தோறும் பிச்சைக் குழல்வதே னம்மானை.
உழலா ரோபங்காளிக் கொப்பித்தா லம்மானை.

பையரவஞ் சூடுதிருப் பட்டீச் சுரநாதர்
தையலாங் கங்கைதனைத் தரித்தா ரம்மானை
தையலாங் கங்கைதனைத் தரித்தா ராமாயின்
மெய்யிற் குளிர்வாத மேவாதோ வம்மானை
மேவுமோ வன்னிகையில் வீற்றிருந்தா லம்மானை.

ஆனபனந் தாளழகிக் கய்யன் வருத்ததனம்
மானத்தனம் வளர்ந்து வாய்த்ததுகா ணம்மானை
மானத்தனம் வளர்ந்து வாய்த்ததே யாமாயின்
வனதனின் வட்டப்பா டிருக்கின்ற தம்மானை;
இடைகுறைந்தால் வட்டப்பா டில்லையோ
[வம்மானை.

பேரான போரூரிற் பிள்ளையார் வேம்படியில்
சீராக வாழுஞ் சிவன்மைந்த னம்மானை
சீராக வாழுஞ் சிவன்மைந்தனா மாயின்
கூரான கொம்பொடிந்த குற்றமே னம்மானை.
ஒடிந்தல்லோ பாரதமு முண்டாச்சு தம்மானை.

அண்டர்புகழ் போரூரி னாறுமுகத் தன்முன்னோன்
பெண்டுகொள்ளமாட்டாதபிர்ம்மங்காணம்மானை
பெண்டுகொள்ள மாட்டாத பிர்ம்மமே யாமாயின்
கண்டவ ரெல்லாங் குட்டக் கணக்குண்டோ
[வம்மானை
குட்டுவார் தங்கள் குறை தீரவம்மானை

பொல்லாத பாவமெல்லாம் போக்குதிருப்
[போரூரில்
வல்லா னிடத்திலுண்டோர் வாழானை யம்மானை
வல்லா னிடத்திலுண்டோர் வாழானை யாமாயின்
நல்லாள் குறத்தி நடுங்காளோ வம்மானை
நடுங்காமற்றானிருவர் நடுவிருந்தா னம்மானை.

மண்டலமெல்லாம் புகழுமா போரூர் வேலவனார்
பெண்டிரண்டு கொண்டபெருமான்கா ணம்மானை
பெண்டிரண்டு கொண்டபெருமானே யாமாயின்
சண்டையிடா ரோவவர் சதாகால மம்மானை
இட்டல்லோ போரூரென் றேற்பட்ட தம்மானை

பெசுபுகழ் போரூரர் பேதைக்குறச்சிறுபெண்
ஓசைதனைக் கேட்டுவனத் தோடிவந்தா ரம்மானை
ஓசைதனைக் கேட்டுவனத் தோடிவந்தா ராமாயின்
ஆசையாய்ப் பெற்ற தவளைமானம்மானை
அம்மான் மகளென்றே யறிந்து கொண்டா
ரம்மானை.

---

சென்ற மாதத்திய அம்மானையில், அதாவது தொகுதி 4 பகுதி 10-ல், முதல் பாட்டில் இரண்டாவது வரியில் 'தம்மானை' என்பதற்கு 'தாமானை' என்றும் ஷை மூன்றாவது வரியில் 'தாமாயின்' என்பதற்கு 'தம்மாயின்' என்றும் இரண்டாவது பாட்டில் 17-வது வரியில் 'தலைக்குவிட' மென்பதற்கு 'தனுக்குவிட' மென்றும் இருப்பதை திருத்தி வாசிக்குமாறு கோருகிறேன்.

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

தொகுதி—௪] பிரமோதூத வருஷம் கார்த்திகை மாதம் [பகுதி—௧௧

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### சட்ட சபை நியமனம்

நமது தலைச் சங்கமும், தமிழ்நாடு, மலையாளம், இலங்கை முதலிய பல நாடுகளிலுமுள்ள நமது கிளைச் சங்கங்களும், மற்றும் நம்மினத்துப் பல பிரமுகர்களும், தந்தி மூலமாகவும் தபால் மூலமாகவும் அரசாங்கத்தாருக்கு மனுசெய்து வேண்டிக்கொண்டும், ஆறு லக்ஷத்திற்கு மேற்பட்ட தொகையினராகிய நம்மவர்களுக்குச் சென்னை சட்ட சபையில் ஒரு பிரதிநிதித்துவமாவது வழங்கப் பெறாமை நம்மவர்களுக்கு மிகுந்த அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறதென்பது மிகையாகாது. சட்டசபை முதலிய ஸ்தாபனங்களுக்கு நியமனம் (nomination) என்பது ஒடுக்கப்பட்ட சமூகம், தேர்தல் மூலம் வரமுடியாத பிற்போக்குடைய சமூகம், சிறுபான்மைச் சமூகம் ஆகியவற்றிற் கெனவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒடுக்கப்பட்ட சமூகத்தவர்க்குப் போதிய ஸ்தானங்கள் சென்னை சட்ட சபையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், இதுவரையில் தேர்தல் மூலம் வரஇயலாததும், நியமன ஸ்தானம் கொடுக்கப்படாததுமாகிய நம் செங்குந்த சமூகத்தைப் போன்றவற்றிற்குப் போதிய முயற்சி செய்தும் பிரதிநிதித்துவம் ஏன் கொடுக்கப்படவில்லை என்பது விளங்கவில்லை. இவ்விஷயத்தில் சென்னை அரசாங்கத்தார் யாதொரு ஒழுங்கான முறையையும் பின்பற்றியதாகத் தெரியவில்லை. உதாரணமாக, ஒரே பத்திரிகாலயத்திலுள்ள இரண்டு நபர்களுக்கும், தேர்தலில் வெற்றியடைந்து வந்துள்ள சமூகத்தவர்க்கும், முன்னரே இரண்டொரு தடவைகளில் நியமனம் (Nomination) பெற்றுள்ள சமூகத்தவர்களுக்கும், நம்மினும் மிகவும் குறைந்த தொகையினராகிய சமூகத்தவர்க்கும், முந்திய சட்டசபையில் நியமிக்கப்பட்டிருந்த சில பேர்களுக்கும் இப்போது நியமன ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. இதனால் அதிகாரத்திலுள்ளவர்கள் தங்கள் மனம்போன போக்கைத் தவிர வேறு எந்த நியாயமான முறையைப் பின் பற்றினார்கள் என்று சொல்லக்கூடும்? இது சம்பந்தமான நம்மவர்களின் வருத்தத்தையும் அதிருப்தியையும் வெளியிட்டு நமது தலைச்சங்கத்தினின்று சென்னை துரைத்தனத்தாருக்கு ஒரு தீர்மானம் போயிருக்கின்றது. அதை மற்றோரிடத்தில் பிரசுரித்துள்ளோம்.

## செங்குந்தர் கல்வி நிதி

செங்குந்தர் கல்விநிதியைப் பராமரிப்பதற்கு ஒரு நிலையான காப்பாளர் சபையினைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிருவாக சபையினர் 9-11-30-ல் நியமித்துள்ளனர். இக் காப்பாளர் சபையின் அங்கத்தினர் பெயர்களையும், அதன் அமைப்பையும் பொறுப்பையும் பற்றிய சட்ட திட்டங்களையும் மற்றொர் இடத்தில் பிரசுரித்துள்ளோம். செங்குந்த மக்களின் சரித்திரத்தில் முதல் முதலில் ஏற்படுத்தப் பெறும் கல்விநிதி இதுவே யாகும். இது நீடூழி காலம் நிலைத்து நமது குலாபிமானிகளின் ஆதரவைப் பெற்று மேன்மேலும் பெருகி நம்மவரிடையே கல்வியாகிய பெருவொளியைப் பரப்புமாக.

## இரண்டாவது மகாநாடு

நம்மவா இரண்டாவது மகாநாட்டினை விமரிசையாகக் காஞ்சியில் நடத்தி வைப்பதற்குக் காஞ்சிபுரம் செங்குந்த மகாஜன சங்கத்தின் காரியதரிசி அவர்களின் வேண்டுகோளின்படி மகாநாட்டு வரவேற்புச் சபையினரோடு ஒத்துழைத்து நமது தலைச்சங்கத்தின் பிரதிநிதியாகயிருந்து மகாநாடு சம்பந்தமான அலுவல்களை ஒழுங்குபெறக் கவனிக்க நமது தலைச் சங்கத்தின் நிருவாக சபை அங்கத்தினர் ஒருவர் வேண்டிக்கொள்ளப் பெற்றிருக்கின்றனர். காஞ்சி நகரவாசிகளும் செங்கல்பட்டு ஜில்லா வாசிகளும் அவர்க்கும் அவரோடு உழைப்பவர்க்கும் போதிய உதவி புரிந்து மகா நாட்டினைத் தமது பேரும் புகழும் நிலைக்கும் வண்ணம் அடுத்த தை மாதத்திலேனும் நடத்திக் காட்டுவார்கள் என்றே நம்புகின்றோம்.

## காஞ்சிபுரம் செங்குந்தர் இரவு பாடசாலைக் கட்டட தருமநிதிச் சீட்டு

தொடங்கிய நாள் தொட்டு வெகு ஊக்கத்துடனும் விடாமுயற்சியோடும் உழைத்து வந்த சங்கங்களுள் முதன்மை பெற்றது காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கம். அதன் ஆதரவில் நடைபெற்று வரும் பாடசாலைக்குக் கட்டடம் ஒன்று சொந்தமாக இருந்தால்தான் அதைத் துரைத்தனத்தார் அங்கீகரித்துப் பொருளுதவி செய்ய இயலுமெனச் சொல்லுகிறபடியால், அதற்கென ஒரு கட்டடம் நிருமாணிக்கக் குறைந்தது ரூ 6000 வசூலாவதற்குரிய ஒரு லாட்டரி சீட்டினைப் போடஷை இரவு பாடசாலையின் அதிகாரிகள் முன் வந்துள்ளனர். அதன் விவரங்களை மற்மொரிடத்தில் காண்க. இப்பாடசாலைக்குச் செய்யும் ஒத்தாசை எவ்விதத்திலும் வீண் போகாது.

## சந்தா அனுப்பவேண்டும்

பதினொரு மாதங்களாயும் நமது மித்திரனுக்கு இன்னும் சந்தா செலுத்தாத அன்பர் பலர் இருக்கின்றனர். சிலர் சென்ற ஆண்டின் சந்தாவையும் செலுத்தாதிருக்கின்றனர். சந்தா உணவின்றி எந்தப் பத்திரிகையும் நீண்ட காலம் பிழைத்திருக்க முடியாதென்பதை அன்பர்களுக்குப் பல முறை எடுத் தெழுதியுள்ளோம். பதினொரு மாதங்கள் பத்திரிகையைப் பெற்ற பிறகும் சந்தா செலுத்த முன் வராது பலர் இருக்கின்றனரே என்பது தான் எமக்கு மிக்க மனவருத்தத்தை யுண்டாக்குகின்றது. சொந்த சாதிப் பத்திரிகையாக இருப்பதால் இவ்வளவு அஜாக்கிரதையாக இருக்கின்றனர் போலும்; அந்நியார்க்கு நடக்கும் உபசரணையில் சொந்தக்காரருக்கு நடக்கும் உபசரணை எங்குமே மட்டாக இருப்பது சகஜமே. ஆயினும் பத்திரிகை விஷயத்திலும் இவ்வாறு நடந்துகொண்டால் அப்பத்திரிகை எவ்வாறு நடைபெறுமென்பதை அவர்கள் உணராமல், இருப்பது விந்தையினும் விந்தை. இனியேனும் அவர்கள் தமது சந்தா தொகையாகிய ரூபாய் ஒன்றரையையும் (பழைய பாக்கிகள் இருப்பின், அவற்றோடு) தாமதிக்காமல் மணியாடர் செய்து எமக்கு அனுப்பிவிடுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம். அந்தந்தக் கிராமங்களின் பிரமுகர்கள் ஆங்காங்கு வசூலாகவேண்டிய சந்தா தொகைகளை வசூலித்து மொத்தமாக மணியாடர் மூலம் அனுப்பிவைத்தால் மிக்க நலமாகவிருக்கும்.

## சர்வ கலாசாலைப் புதுப் பட்டதாரி

திருவ... A. சுப்பிரமணிய முதலி... அவர்கள் ... ஏ. பரீக்ஷையில் தே...ளதைக் கேட்டு ... மகிழ்வுறுகின்றோம். அவரோடு இவ்வாண்டும் சர்வகலாசாலைப் பட்டம் பெற்றுள்ள செங்குந்த இளைஞர் ... நால்வராவர்.



# ஆராய்ச்சிப் பகுதி

## நமது புராதன வழக்க ஒழுக்கங்களின் ஆராய்ச்சி

[திருவாளர். வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்.]

(தொகுதி 4, 323-ம் பக்கத் தொடர்ச்சி)

6. சூரிய நமஸ்காரம்:—புண்ணிய பூமி யெனக் கருதப்படும் நம் இந்து தேசத்தில், நமது பண்டையோர்கள், சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன் சிவ சிந்தனையோடு நித்திரை விட்டெழுந்து, சிறுநீர் கழித்துச் சௌசம் பண்ணி வாய் கொப்பளித்து முகங் கைகால் கழுவி மூன்று தரம் ஆசமனஞ் செய்து வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் நின்றுகொண்டு "சிவ, சிவ," என்று சொல்லி நெற்றியில் விபூதி யணிந்துகொண்டு, பின் தந்தை தாயாரை வணங்கி வெளிச் சென்று மலசலங் கழித்துத் தந்ததாவனஞ் செய்து மாசடை தோய்த்துக் குளிர் நீராடி ஜெபதப அனுஷ்டானாதி கருமங்களியற்றிச் "சூரிய நமஸ்காரம்" செய்யும் வழக்கத்தை மேற்கொண் டிருந்தார்கள். பல ஆன்றோர்கள் மலசலங் கழித்துத் தந்த தாவனஞ் செய்து விபூதி யுத்தூளனமாயணிந்துகொண்டு "சூரிய பூசை, சூரிய நமஸ்காரம்" செய்து முடித்துப் பிறகு ஸ்நான ஜெபதப அனுஷ்டானாதி கருமங்க ளியற்றி வந்தனர். சூரிய பூஜையிலும் சூரிய நமஸ்காரத்திலும் பிரத்தியேகமாய்ச் சில மணி நேரங்களை அவர்கள் செலவழித்து வந்தார்கள். அதனால் பெரும்பலனை அவர்கள் அடைந்தார்கள் என்பதற்கு ஐயமில்லை. ஆனால் வைதிக நெறியை வேப்பங்காயென ஒதுக்கித் தள்ளும் இக்காலத்திலே, "சூரிய பூஜை, சூரிய நமஸ்காரம்" என்னும் பெயரே தலைகாட்டா தொழியத் தொடங்கி விட்டது. காலையில் காப்பி இட்லி பூசையே மலிந்து விட்டது. மதுபான வணக்கமும் பலர் செய்கிறார்கள். வெயிலில் செய்யும் சூரிய நமஸ்காரம் சூரிய பூஜை இவைகள் வெறும் விருதா (பயனின்மை) என்று பலர் வெறுக்கின்றனர். இதற்குக் காரணம் நமது முன்னோர்கள் நம்முடைய சுகாதார நன்மையை யுத்தேசித்து ஏற்படுத்திய சூரிய பூஜை சூரிய நமஸ்காரம் என்பவைகளின் பலனை நம்மவர்கள் நன்குணராததே. ஆதலின் இது விஷயமாகச் சற்று ஆராய்வோம்.

ஒவ்வொரு தினத்திலும் காலையில் பிரம்ம முகூர்த்தத்திற் கடுத்த காலம் ரௌத்திரம் எனப்படும். ரௌத்திரம் என்றால் ருத்திரனுக்குரிய காலமென்பது. இச்சமயத்தில் ஸ்ரீபரமேசுரன் ஆனந்த தாண்டவஞ் செய்தருளுவாரென்று சைவாகம புராணங்கள் கூறுகின்றன. இந்த ரௌத்திர முகூர்த்த காலமே சூரிய நமஸ்காராதி ஜெபதப சந்தியாவந்தன வைதிக கருமங்களுக்குரிய காலம் என நமது முன்னோர்கள் வரையறுத்திருக்கின்றனர். சூரிய நமஸ்காராதி சந்தியாவந்தன கருமங்களால் சேவிக்கப்படுகிற தேவன் சூரியனேயாம். அதனால் அவனிடத்தில் அந்தர்யாமியாயுள்ள பரப்பிரம்மத்தைச் சேவித்ததாகும். சூரிய நமஸ்காரம் பரப்பிரம்ம வணக்கத்தையே குறிக்கும் அதனால்தான் சூரியனைப் பஞ்சப் பிரம்ம சொரூபனென்று வைதிக நூல்கள் கூறுகின்றன. பரப்பிரம்ம வணக்கம் மோட்சத்தை யளிக்க வல்லதென்பது யாவரும் நன்குணர்ந்த சித்தாந்தம். மோட்சத்தை விரும்பும் எவரும் பரப்பிரம்ம வணக்கமாகிய சூரிய பூஜை, சூரிய நமஸ்காரம் என்பவைகளை விடாமல் செய்யக் கடவர்.

தவிர, இந்நமஸ்காரத்தால் நமது உடம்பிற்கேற்ற சுகாதார சாதனங்களான பல நன்மைகளிருக்கின்றன. இதனால்தான் நம்முன்னோர்கள் காலையில் சூரிய நமஸ்காரம் செய்யும் வழக்கத்தை அனுஷ்டான வழக்கில் கொணர்ந்திருக்கிறார்கள். அவசியம் சூரிய நமஸ்காரம் செய்தல் வேண்டும் என்னும் விதியையும் நமது பண்டைய நூல்களில் கூறி வைத்தார்கள்.

இனி இச்சூரிய நமஸ்காரத்தா லேற்படும் சுகாதார நன்மைகள் யாதென ஆராய்வோம். சூரிய வெப்பத்தாற்றான் உலகிலுள்ள பல மாசுள்ள பொருள்கள் உலர்ந்து நீங்கற்றவைகளாகின்றன. மேலும் மனிதர்களால் அழிக்க முடியாத (Bacillus) பாசில்லஸ் என்னும் நுண்ணிய புழுக்கள்கூட அனுதினமும் ஆயிரக் கணக்காய் வெயிலில் மடிகின்றனவென்று பிரகிருதி சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். ம்ருத்துவ நூல் வல்லாரும் வானநூல் வல்லாரும் காலை 9-மணி முதல் 11-மணி வரையில் இருக்கும் வெயிலானது தேகத்துக்கு இதத்தையும் நிறத்தையும் கொடுக்கிறதென்றும், அநேக வியாதிகளைக் கண்டிக்கிறதென்றும் கூறி யுள்ளார்கள். இதனால் தான் இந்த நேரத்தில் சூரிய நமஸ்காரம் செய்யும்படி நமது முன்னோர்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள் போலும். ஆகையால் அந்த நேரத்தில் ஒருவன் தன்னுடைய தேகம் பூராவும் வெயிலில் படும்படி சூரிய பூஜை சூரிய நமஸ்காரம் என்னுமிவைகளைச் செய்வானானல் தேகம் செழித்

வியாதியின்றி வளரும். இயற்கை நிறமும் திரும்பும். மனமாசு நீங்கி உள்ளம் தெளிந்து பரிசுத்தமடையும். இரத்த வோட்டம் (Blood-circulation) சரிவர நடைபெறும். தேகத்திலுள்ள துர்நீர், பித்தநீர், வாயு சம்மந்தமான நீர் முதலிய சகல கெட்ட நீரெல்லாம் சூரிய கிரணத்தினு லாகர்ஷிக்கப்பட்டுத் தூய்மை யடைந்து தேகத்துக்கு மிகுந்த ஆரோக்கியத்தையும் நன்மையையும் உண்டு பண்ணுகிறது. சூரிய கிரணத்தின் வழியாய்த் தேகத்துக்கு உயிர்ச்சார சக்தி (Vital force) ஏறுகிறது. பசி தாகங்கள் ஏற்பட்டு ஜீரணசக்தி உண்டாகின்றது. வியாதிகள் குறைந்து தேகம் நீடித்து நிற்கும் நிலையை யடைகின்றது. உலகிலுள்ள சகல பொருள்களும் கோள்களும் சூரியனிடத்திலிருந்தே அதன் பிரகாசத்தைப் பெறுகின்றன. அவ்வண்ணமே சூரிய நமஸ்கார காலங்களில் அதனை உற்று நோக்கித் தரிசனம் செய்வதால் நாமும் நமது கண்ணொளியையும் தேக காந்தியையும் நன்கு பெற்று நேத்திர ரோகம் கண் கூச்சல் தலைவலி மண்டைகுடைச்சல் முதலிய சகல சிரரோகங்களும் நீங்கப்பெற் றின்புறுகிறோம். புல் பூண்டு செடி கொடிகள் முதலிய தாவரங்களும் புஷ்பங்களும் கூட சூரியனைக் கண்டன்றோ மலர்ந்து விகசிதமடைந்து வளர்ச்சி யுறுகின்றது. பட்சிகளும் மிருகங்களுங்கூட சூரிய கிரணத்தாலன்றோ சந்தோஷ முறுகின்றன. ஆகையால் சூரியனிடத்தில் நமது தேகாரோக்கியத்துக் கேற்ற எத்தகைய உயரிய குணமிருக்கிற தென்பதை யோசித்துப் பாருங்கள். சூரிய நமஸ்காரம் சூரிய பூஜை என்பவைகள் நமது சரீர சுகத்தை யுத்தேசித்தே ஏற்படுத்தப்பட்டவைக ளென்பதை மறக்காதீர்கள். "சூரிய நமஸ்காரம், சூரிய பூஜை" இவைகளை நமக்குரிய கடமையாக விடாமல் அனுஷ்டித்துவர முன் வாருங்கள். இறைவன் திருவருள் கைகூடுவதாக.

7. தெந்து நோக்கிப் போஜனம் அருந்தல்:— நமது முன்னோர்கள் அநேகமாய்த் தெற்கு முகம் நோக்கி யிருந்தே போஜனம் அருந்தும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள். கிழக்கு முகமாக விருந்தும் போஜனம் அருந்துவதுண்டு. வடக்கும் மேற்கும் கூடாதென்பது பெரியோர்கள் கொள்கை. "பூசை வடக்குப் போஜனம் தெற்கு" என்னும் பழமொழி வாக்கியத்தை அவர்கள் கடைப்பிடித் தொழுகினார்கள். ஆனால் நவீன நாகரீகம் பரவும் இக்கலிகாலத்திலே இன்ன திசை உட்கார்ந்துதான் போஜனம் செய்யவேண்டு மென்னும் நியதியே இல்லாமல் போய் விட்டது. விபூதி அல்லது திருமண் அல்லது ஏதோ மதக்குறி பணிந்து கொள்ளாவிட்டாலும், கைகாலலம்பிச் சுத்தஞ் செய்து கொண்டாவது போஜனத்துக்குச் செல்ல வேண்டுமென்பது கூட கஷ்டமாயமைந்து விட்டது. பலர் மேஜையின்மீதும், கட்டிலின்மீதும், நின்று கொண்டும் போஜனம் செய்ய முன்வந்து விட்டார்கள். இதனை ஓர் நாகரீகமென்று இவர்கள் கருதுகிறார்கள். இதற்குக் காரணம் இவர்கள் நம்முன்னோர்கள் ஏற்படுத்திய போஜன விதியின் கருத்தை உற்று நோக்கி ஆராய்ச்சி செய்யாக் குறையே. முகங் கை கால்களைக் கழுவிச் சுத்தஞ் செய்துகொண்டு, பசுவின் சாணத்தால் சுத்தமாய் மெழுகிக் காய்ந்த இடத்தில் தெற்கு முகமாக வேனும் கிழக்கு முகமாகவேனும் அமர்ந்து போஜனஞ் செய்தல் வேண்டுமென்றும், மேற்கு முகம் அவ்வளவு உசிதமானதல்லவென்றும், வடக்கு முகமாக ஒரு போதும் உட்கார்ந்து புசிக்கவே கூடாதென்றும் நமது முன்னோர்கள் நூல்களில் கூறியிருக்கின்றார்கள். இதன் ஆழ்ந்த கருத்தை உற்று நோக்கி யாராய்ச்சி செய்யுமிடத்து இதில் ஒரு இரகசியம் இருக்கின்றது. அதாவது, வடதிசையிலிருந்தே பூமியின் மஹாசக்தி தெற்கு நோக்கிச் செல்கின்றது. இதைத்தான் மின்சார சக்தியென்று கூறுகிறார்கள்; ஆங்கிலத்தில் (Electric-Power) எலக்ட்ரிக் பவர் என்று கூறப்படுகிறது. வடக்கு நோக்கி யுட்கார்ந்தால் அந்தச் சக்தி நம்முடைய வயிற்றில் தாக்கும். அதனால் மந்தம் அஜீரணம் முதலிய ரோகங்கள் உற்பத்தியாகின்றன. இதனைப் பிரத்தியட்ச அநுபவத்தில் காணலாம். சிரார்த்த தினத்தில் பிதுர் ஸ்தானத்திலிருந்து புசிக்கிறவர்கள் மட்டில் வடக்கு முகமாக உட்காருவது வழக்கம். அவர்கள் எவ்விதத்திலும் இரண்டாம் வேளை போஜனம் புசிக்கக்கூடாது. ஒரே வேளை போஜனம்தான் உண்ணவேண்டும். வடக்கு முகம் நோக்கி யுட்கார்ந்தால் ஜீரணம் எளிதிலாகாது. ஆகாரமும் செல்வாக்கிராது. வயிறு மந்தமாகவே இருக்கும். பசி எடுக்காது. ஆனதுபற்றி அவர்களுக்கு மாத்திரம் அவ்விதி விதிக்கப்பட்டது. வடதிசை அல்லது வடகீழ்த் திசையிலிருந்து காற்று வீசும் பருவங்களில் அஜீர்ண சம்மந்தமான வாந்திபேதி காலரா முதலிய கொடிய வியாதிகள் மனிதர்களுக் குண்டாவதே இதற்குப் போதிய சான்று. கிழக்கு முகம் நோக்கி யுட்காருவதில் அந்த மின்சாரசக்தி வயிற்றின்மேல் வேகமாய்த் தாக்காமல் பக்கத்தில் உராய்ந்து செல்லுமாதலால் அவ்வளவு கெடுதியில்லை. எனினும், ஜீரணம் மெதுவாகத்தான் ஆகும். தெற்கு முகம் நோக்கி யுட்காருவதால் அந்தச் சக்தி முதுகின்மேல் படுகிறதாதலால் யாதொரு கெடுதியும் சம்பவியாது. தவிர, தெற்கே யிருந்து வீசும் தென்றல் காற்றின் வாடை இவர்களின் முன் பக்கமாக மேலே தாக்குகின்றது. தென்றற்காற்றின் விசேஷம் யாவரும் அறிந்ததே. அக்காற்று உயிர்த்தன்மையோடு வருவதால் ஜீர்ணத்துக்கு அநுகுணமாகவே இருக்கும். அருந்திய ஆகாரம் சீக்கிரமாக ஜீரணமாகும். இதுபற்றியே சரீர புஷ்டியை விரும்புகிறவன் தெற்கு முகம் நோக்கி யிருந்தே போஜனம் செய்ய வேண்டுமென்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. வேறு ஸ்மிருதிகளில் கிழக்கு முகமாக விருந்து புசிக்கின் ஆயுசு விருத்தியென்றும், மேற்கு முகமாயின் சம்பத்துண்டாகும்



என்றும், தெற்கு முகமாக நோக்கி யிருந்து புசித்தால் கீர்த்தி யுண்டாகும் என்றும், சத்தியத்தை மாத்திரம் விரும்பினவன் வடக்கு முகமாக விருந்து புசிக்கலாமென்றும் காணப்படுகின்றது. ஈண்டு சத்தியமென்பது பிரமத்தை யுணர்த்தும். பிரமத்தியானிகளுக்கு ஒரு வேளை ஆகாரமே விதிக்கப்பட்டமையின் அது உசிதமானது காண்க. எனவே, இதுகாறுங் கூறியவாற்றால் தெற்கு முகம் நோக்கியே போஜனஞ் செய்தல் மிக்க நலம் என்பது பெற்றாம்.

அவ்வாறு போஜனம் செய்வதிலும் சில நியமங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சில வருமாறு:— கட்டில் முதலியவற்றி லிருந்துகொண்டும், வாகனங்களி லிருந்துகொண்டும், படுக்கையி லிருந்துகொண்டும், தனக்கு இடது புறத்தில் வைத்துக்கொண்டும், தலையில் வஸ்திரம் தரித்துக் கொண்டும், மடியின்மீது பாத்திரத்தை வைத்துக் கொண்டும், ஒற்றை வஸ்திரம் தரித்துக் கொண்டும், போஜனம் அருந்துதல் கூடாது' என்பனவாம். ஆகையின் போஜனம் செய்கிறவர்கள் முன் மேலே கூறியபடி முகங் கை கால்களைச் செவ்வையாய்ச் சுத்தி செய்து கொண்டு, நெற்றியில் திருநீ றணிந்து கொண்டு இரட்டை வஸ்திரத்துடனே கழுவப்பட்ட இலையை நன்றாய் மெழுகிக் காய்ந்த இடத்திலே போட்டு, அதன்முன் தெற்கு முகமாகச் சமணங்கூட்டி யுட்கார்ந்து, இலையில் உப்பு, பதார்த்தம், சோறு, பருப்பு, நெய் முதலியன வரிசைக் கிரமமாய்ப் படைக்கப்பட்டபின், சோற்றிலொரு பாகத்தைப் பருப்பும் நெய்யுங் கலந்து பிசைந்து ஆத்ம நிவேதனம் பண்ணிக் கடவுளுக் கர்ப்பித்துக் காக்கைக்கிட்டு, ஒருவருடனும் பேசாமலும், சிரிக்காமலும், வேறொன்றைப் பார்க்காமலும், சிந்திக்காமலும், உணவைச் சிந்தாமல் சிறிது சிறிதாகச் செவ்விதா யுண்ணவேண்டும். உண்ணும்போது இனிப்புள்ள பதார்த்தங்களை முதலிலும் கைப்புள்ள பதார்த்தங்களைக் கடையிலும் மற்றயவைகளை இடையிலுமாக உண்ணுதல் வேண்டும். புளியையும் மிளகாயையும் கூடியவரையில் நீக்கிப் புசித்தலே நலம். வேண்டுமானால் எலுமிச்சம் பழத்தையும் மிளகையும் சிறிது சேர்த்துக் கொள்ளலாம். தாமதமாக நெடுநேரம் புசித்தல் கூடாது. கால் கழுவிய ஈரம் உலருவதற்கு முன்னமே உண்டு முடித்துப் புறத்தே சென்று கையையும் வாயையும் கால்களையும் நன்றாய்க் கழுவி ஆசமனம் பண்ண வேண்டும். சாப்பிட்டு முடிந்தவுடன் இல்வாழ்வோன் தாம்பூலம் தரித்துக்கொள்ளலாம். ஏனையோர் கிராம்பு, ஏலம், சுக்கு, வால்மிளகு ஆகியவற்று ளேதேனு மொன்றை வாயில் போட்டுக் கொள்ளலாம். சாப்பிட்டு முடிந்த பின்னரேயன்றி இடையில் நீரருந்தலாகாது. நீரருந்தும் பாத்திரம் நமக்கென்று தனியாக ஒன்று வைத்திருத்தல் வேண்டும். பிறர் குடித்து உபயோகித்த பாத்திரத்தை நாம் உபயோகித்தல் கூடாது. ஏனெனில், பிறரால் தொடப்பட்ட பாத்திரங்களில் அவர்களுடைய சரீராம்சம் கலந்து நிற்பதால் அநேக கெடுதிகளுண்டாகும். அப்பாத்திரங்கள் வெள்ளி தங்கம் இவைகளால் செய்யப் பட்டவையானால் மிக்க சிலாக்கியமுடையன. தாகத்துக்கு வெந்நீர் அருந்தலே மிக்க விசேஷம். போஜனத்துக்கு வாழையிலையே மிக உத்தமமானதாகும். மா, பலா, புன்னை, தாமரை, இலுப்பை, ஆல், சுரை முதலியவற்றின் இலைகள் மத்திமம். கலங்களில் உண்பது அதமம். பொன் வெள்ளி இவைகளாற் செய்யப்பட்ட கலங்களுக்கு எச்சிலில்லையென்று சிலர் கூறுகிறார்கள். இது அறியாமையிலும் அறியாமையே யாகும். சிவதீட்சை பெற்றுள்ளோர்கள் கலங்களிலுண்பது மாமிசம் புசித்தலை யொக்கும். ஆகையின் நம்முன்னோர்கள் விதித்தபடியே போஜனக் கிரமாதிகள் சரிவர அமைத்து ஆசார சீலராய் விளங்கி, தெற்கு முகம் நோக்கியே உணவருந்தும் வழக்கத்தை மேற்கொண் டொழுகுவீர்களாக. இதுவே மிக்க சிறப்புடைத்து.

8 உண்ணுங்கால் பேசக் கூடாதென்பது :— போஜனம் அருந்துகையில் பிறரொருவருடனும் பேசாமல் வேறு சிந்தனையின்றி ஆகாரத்தின்மேல் வைத்த நாட்டத்தோடு உண்ணவேண்டு மென்பது பெரியோர்கள் இட்ட கட்டளை. உண்ணுங்கால் பேசக் கூடாதென்று பெரியோர்கள் அடிக்கடி புத்தி சொல்வதையும் நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். இதில் ஓர் ஆன்ற உண்மை கிடக்கக் காணலாம். வாயின்கண் ஆகாரஞ் செல்வதற்கோர் குழாயும் (Eosophegus) சப்த மெழுவதற்கோர் குழாயும் (Voice Box) இருக்கின்றன. ஆகாரஞ் செல்லுங் குழாய் மூடப் பெறுமலிருக்கும், சப்தக் குழாயோ சப்தமெழும் அமையத்தைத் தவிர, மற்ற நேரங்களில் மூடியிருக்குந் தன்மையது. இத்தகைய வாயில் ஆகாரம் மென்று தின்னுமிடத்துப் பேசினால் சப்தக் குழாயிலும் தவறி ஆகாரஞ் செல்வது அதிசயமல்ல. அக்குழாயின் வழி சென்ற ஆகாரம் சிறிது நேரத்தில் அவனை அநேக இடையூறுகளுக்குள்ளாக்கிப் பெரிய ஆபத்தை விளைவித்து விடும் சில சமயங்களில் மரணத்தையுங்கூட உண்டுபண்ணிவிடும். இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் பெருமைதான்; இன்றேல் சிறுமையே. இத்தகைய துன்பங்களினின்றும் அபாயங்களினின்றும் விடுபடவே (இடருறாதிருத்தற்கே) உண்ணுங்கால் பேசக்கூடாதென்று பெரியோர்கள் விதித்திருக்கிறார்கள். ஆகையின் இவ்விதியை யாவரும் அநுசரித்தொழுக முன் வருவீர்களாக.

9. வலக்கை விரல்களில் மோதிர மணிதல்:— சகோதரர்களே! நம்மிலனேகர் இன்னும் தங்கப் பவுத்திரம், ஐம்பொன் மோதிரம், அல்லது வெள்ளி மோதிரம் முதலியன வலக்கை விரல்களில் 'அணிந்து வருகின்றனர். இது சாஸ்திரோக்தமானதென்று கூறப்படும். இக்காலத்தில் பலர் விரல்கள் நிறைய மோதிரமணிவது வீண் செலவென்றும் ஆபாசத்துக் கிடமாயிருக்கின்றதென்றும் எண்ணுகிறார்கள். ஆதலின் இதனுண்மையைச் சற்றுக்




# சுதேசியம்

[ஆவணிப் பித்தனில் கண்டது]

[திரு. சு. சுப்பிரமணியம், பி. ஏ., அவர்கள் எழுதியது]

இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் சாமான்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பஞ்சுத் துணி | 62·3 | கோடி ரூ. |
| 2. | சர்க்கரை | 16.2 | ,, |
| 3. | கம்பளம் (உல்லன்) | 4·5 | ,, |
| 4. | காகிதம் | 4·3 | ,, |
| 5. | பட்டு | 3·7 | ,, |
| 6. | கண்ணாடி சாமான்கள் | 3·1 | ,, |
| 7. | ரப்பர் சாமான்கள் | 2·8 | ,, |
| 8. | சிகரெட் முதலியன | 2·7 | ,, |
| 9. | சோப்பு | 1·6 | ,, |
| 10. | உப்பு | 1·5 | ,, |
| 11. | சிமெண்ட் | 0·7 | ,, |
| 12. | தோல் சாமான்கள் | 0·7 | ,, |
| 13. | தீப்பெட்டி | 0·2 | ,, |
| | மொத்தம் | 104·7 | கோடி ரூ. |

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மூலப்பொருள்கள்

| | | |
|---|---|---|
| பஞ்சு | 66 | கோடி ரூபாய்கள் |
| கம்பளி | 5 | ,, |
| ரப்பர் | 2 | ,, |
| புகையிலை | 13 | ,, |
| தோல் வகையரா | 1·2 | ,, |
| எண்ணெய் விதைகள் | 3·3 | ,, |

பல கோடி ரூபாய்கள் மதிப்புள்ள மற்ற மூலப் பொருள்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மேலே கொடுத்துள்ள ஜாபிதாவில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது தொன்றிருக்கிறது. அதாவது, நாம் இறக்குமதி செய்வனவெல்லாம் கைத்தொழிற் பொருள்கள் (Manufactured goods.) ஏற்றுமதி செய்வனவெல்லாம் மூலப் பொருள்கள் (Raw goods). அமெரிக்கா தேசம் முன்னேற்றமடைந்த நாடுகளுக்குள் திலகமாய் விளங்குவதற்குக் காரணம் என்னவென்றால், அத்தேசத்தினர் தங்கள் நாட்டில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு தங்களுக்கு வேண்டிய சாமான்களைச் செய்து கொள்ளுவதுடன் பிறநாடுகளுக்கும் தங்கள் சாமான்களை ஏற்றுமதி செய்து வியாபாரம் செய்து வருவதே. அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மூலப் பொருள்களெல்லாம் அவர்கள் உபயோகித்ததுபோக மீதமே. நாமோ மூலப்பொருள்களையெல்லாம் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு நமக்கு வேண்டிய ஒவ்வொரு சாமானுக்கும் பிறரை எதிர்பார்த்து நிற்கின்றோம். இதனால் இப்பொருள்கள் செய்யப்படுவதற்கு வேண்டிய கூலிகள், அதிற் கிடைக்கும் லாபம் முதலியன எல்லாம் அந்நியர் கைக்கொள்ள நம்நாட்டு மக்கள் ஒரு வேளை கஞ்சிக்கும் வழியில்லாதவர்களாய்த் தவிக்கிறார்கள்.

ஆம், இந்தியா மிகவும் வளம் பெற்ற நாடுதான். ஆனால் அந்நாட்டில் வசிக்கும் நம் நிலைமையென்ன? நம்மினும் ஏழை மக்கள் உலகத்தில் யாருமிலர். நூறு கோடி ரூபாய்க்கு மேல் ஒரு நாட்டை விட்டு வருஷா வருஷம் போய்க்கொண்டிருந்தால், அந்நாடு க்ஷீணதிசை அடைவதில் ஆச்சரியமுமுண்டோ? ஆகையால் இந்தியாவின் ஏழ்மைக்கு முதற் காரணம் நாம் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்து நமக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் நம் நாட்டிலேயே நமது கூலிகளைக் கொண்டு செய்துகொள்ள முன் வராததே.

இந்தியாவின் ஏழ்மை நிலைமையை நீக்கி, பொருளாதார வளர்ச்சியை உண்டாக்கவே, வங்காளப் பிரிவினைக்குப் பிறகு சுதேசிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அது எவ்வாறு வளர்ச்சியுற்று வந்தது, அதற்கு ஏற்பட்ட தடைகள் என்ன, என்பன யாவரும் அறிந்த விஷயங்களே. இச்சுதேசிய இயக்கத்தின் காரணமாகத்தான் திரு. டாடா என்பார் பெயர் பெற்ற தமது இரும்புத் தொழிற் சாலையை ஸ்தாபித்தார். பிறகு இந்தியர்களுக்கே சொந்தமான ஒரு கப்பற் கம்பெனி இருக்கவேண்டுமெனத் தீர்மானித்து "சிந்தியா கப்பற் கம்பெனி" என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அக் கம்பெனி ஏற்படுத்தப்பட்டவுடன் ஐரோப்பிய கப்பற் கம்பெனிக்காரர்கள் யாவரும் திகில் கொண்டார்கள். ஆகையால் இந்தப் புதுக் கம்பெனியை எப்படியாவது தொலைத்துவிட வேண்டுமெனக் கங்கணங் கட்டிக்கொண்டனர். கல்கத்தாவிலிருந்து ரங்கூன், ஹாங்காங், ஷாங்கேய் முதலிய இடங்களுக்கு மூட்டைகள் ஏற்றிச் செல்வதே அக்கப்பல்களின் முக்கிய வேலையாக இருந்தது. இங்கிலீஷ் கம்பெனியார் ஒரு டன்னுக்கு 13-ரூபாய் சத்தம் இருந்ததை இரண்டு ரூபாய்க்குக் குறைத்து விட்டார்கள். அப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்ட இந்தியக் கம்பெனி மற்ற பழைய கம்பெனிகளுடன் போட்டிபோட முடியாமல் கடைசியாக முளையிலேயே நசுக்கப்பட்டு விட்டது. இதைப்பற்றி நாம் பெரிதும் கவலைப்பட வேண்டியதில்லை. இன்னும் கொஞ்சம் காலத்துள் பல கப்பற் கம்பெனிகள் நாம் ஏற்படுத்தலாம். வியாபாரக் கப்பல்களைக்கொண்டு மூட்டைகள் சுமப்பது மட்டுமல்ல; வேறு நாடுகளுக்குப் பிரயாணிகளைக் கொண்டு செல்லக்கூடிய கப்பல்கள் ஏற்படுத்தப்பட்டு, அவைகள் இந்திய மாலுமிகளால் ஓட்டப்படுவதை நாம் கண்டு களிகூறுவோமென்பதிற் சந்தேகமில்லை.

இனி 'சுதேசியம்' என்றால் என்ன? அதை நாம் ஏன் கைக்கொள்ள வேண்டும்? அதை அநுஷ்டிக்கும் வழிகளென்ன? என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். நடை உடைபாவனைகளில், தன் சுய நாட்டின் வழக்கங்களைக் கொள்வதே சுதேசியத்தின் அகப்பொருள். இதனால் நாம் பிறநாட்டு வழக்கங்கள் ஒன்றையும் அநுசரிக்கக் கூடாதென்பதில்லை. எந்நாட்டு வழக்கமாயிருப்பினும் சரி, அது நல்லதாயிருப்பின், நாம் அதைக் கைக்கொண்டு நம் நாட்டு ஆசாரங்களுடன் அதையும் சேர்த்துக் கொள்வோம். நாம் பிறநாட்டு வழக்கங்களால் மாற்றப்பட்டு அவைகளுக்கு அடிமைப்படாமல் அந்த வழக்கங்களை நம்மவையாகச் செய்ய வேண்டும். நம்நாட்டுச் சாமன்களை உபயோகப்படுத்துவது சுதேசியத்தின் ஒரு பகுதியே யாகும்.

நாம் ஏன் சுதேசியத்தைக் கைக்கொள்ள வேண்டும்:—நமது நாட்டுச் செல்வம் வெளியில் போகாதிருக்கவும், நமது நாட்டுச் செல்வம் பெருகவும், நமது நாட்டுக் கைதொழில்கள் முன்னேற்றமடையவும் சுதேசியம் அவசியம். தொழில் இல்லாமல் தவிக்கும் ஏழைச் சகோதரர்கள் பிழைக்கும் வழி இதுவே. விவசாயம் செய்வோர்கள் நூல் நூற்பது சற்றுச் சம்பாதிக்கும் வழியாகும்; நமது நாட்டுவளம் பெருகும். ஜனங்கள் சுகவாழ்க்கை நடத்த முடியும். சராசரி வருமானம் அதிகப்படும். நோய், பிணி முதலியவைகளில் இறப்பவர் தொகை குறையும்; குழந்தைகள் இறப்பதும் குறையும். வயிற்றுக்கு இல்லாமல் நிமிஷமொன்றுக்கு 20 பேர் மாள்கின்றனர். இக்கொடிய பஞ்சத்தை ஓட்டுவது நம் கடமையன்றோ? அதற்குச் சுதேசியமே வழி. இவை மட்டுமல்ல; சுதேசியத்தினால் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி யேற்படும்; அதனால் சுயராஜ்யத்திற்கு வழியேற்படுகிறது. சுருங்கக் கூறின் சுதேசியமின்றிச் சுயராஜ்ஜியம் கிடையாது.

சுதேசியத்தை அநுஷ்டிக்கும் முறைகள் :— ஆச்சார்ய பி. சி. ராய், பாம்பாயில் சுதேசியகண்காட்சிச் சாலையைத் திறந்து வைத்துக் கூறியதாவது.—"சுதேசியம் என்றால் நம் நாட்டுச் சாமான்களை வாங்கி உபயோகிப்பது மட்டுமல்ல, அந்தச் சாமான்களைச் செய்வதும் நமது கடமையேயாகும். * * * உதாரணமாக, கதரையெடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் தனக்கு வேண்டிய நூலைத் தானே நூற்றுக்கொள்ள முயற்சிக்கவேண்டும். இப்படி எல்லாரும் செய்ய முன்வருவார்களேயானால் சுயராஜ்யம் ஒரு நாளில் வந்துவிடும்." ஆகையால் சுதேசியத்தை அநுஷ்டிக்கும் முறை இருபான்மைப்பட்டதாகிறது. ஒன்று சுதேசிய சாமான்களை உபயோகப்படுத்துவது, இரண்டாவது அச் சாமான்களைச் செய்வது. இவைகளில் இரண்டாவதே மிகவும் முக்கியமானதெனக் கருத வேண்டியதாயிருக்கிறது.

கதரைப் பற்றி இங்கு கூறுவது மிகையாகும். அதனுடைய உபயோகத்தைப்பற்றியும், நூல் நூற்கும் அவசியத்தைப்பற்றியும் அறியாதார் இல்லை. ஆகையால் அதை விடுத்து வேறு சில கைத்தொழில்களைப்பற்றி ஈண்டு சிறிது கவனிப்போம்.

முதன் முதலாகச் 'சிகரெட்' முதலிய புகையிலை வஸ்துக்களைப்பற்றிக் கூறுவோம். நாம் வருஷமொன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் பெறுமான சிகரெட்டுகளை அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். இப்பொழுது வங்காளத்தில் 'பீடிக் கிளர்ச்சி' ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதாவது ஒருவரும் அந்நிய சிகரெட்டை உபயோகப்படுத்தக் கூடாதென்றும், அதற்குப் பதிலாகப் பீடியையே

[383-வது பக்கத் தொடர்ச்சி]

கவனிப்போம். பொன், வெள்ளி முதலிய உலோயங்களிடத்து மனிதனுடைய சரீர சுகத்துக்கு வேண்டிய சில சக்திகளும் வியாதிகளைப் போக்கடிக்கக்கூடிய அபூர்வ குணமும் அமைந்திருக்கின்றன. உண்ணுங்காலும் மேற்கூறிய மோதிரங்களை நாம் அணிந்துகொண்டிருக்கிறோம். நாளடைவில் இம்மோதிரங்களினுடைய சத்துச் சிறிது சிறிதாய் ஆகாரத்துடன் உட்சென்று விடுகிறது. அதனிமித்தம் தேக புஷ்டியும் சரீர வன்மையும் யும் தேஜஸும் நீடித்த ஆயுளும் நாம் அடைகின்றோம். தங்க பற்பமாதி அயத்தங்க திராவகத்தின் மகிமையை நோக்குங்கள். அவைகள் உடம்புக்கு எவ்வளவோ சுகத்தைத் தருபவையாயிருக்கின்றன. தற்கால ரஸாயன சாஸ்திரங்களும் இவ்வுண்மைகளை ஆமோதிக்கின்றன. ஆதலால் வலக்கை விரல்களில் தங்கப் பவுத்திரமாதி மோதிரங்களணிதல் நமது சரீர சுகத்துக்கென்றே யென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (தொடரும்.)

உபயோகிக்க வேண்டுமென்பதே. வங்காளத்தில் தற்போது சிகரெட் உபயோகிப்பவர்களின் தொகை நூற்றில் ஒரு பங்குதான் இருக்குமெனச் சொல்லப்படுகிறது. இதனால் அங்கு பீடி சுற்றும் கைத்தொழிலொன்று ஏற்பட்டு, இதற்கு முன் சோற்றுக்கு வழியில்லாது சோம்பித் திரிந்த பலர் இப்போது பீடி சுற்றிப் பிழைக்கிறார்களாம். வங்காளத்தில் ஏற்பட்டிருப்பது போலவே இந்தக்கிளர்ச்சி நம் தமிழ் நாட்டிலும் உதிக்கவேண்டும். இது முக்கியமாகப் பட்டணங்களில் வாழும் மாணவர்கள் கையில்தானிருக்கிறது. இவர்கள் பீடி குடிப்பது அகௌரவமென நினைத்து விலையுயர்ந்த அந்நிய நாட்டுச் சிகரெட்டுகளை வாங்கி உபயோகிக்கிறார்கள். என்னே இவர்கள் மனப்பான்மை! வங்காள வாலிபர்களுடைய தேசிய நடக்கையைக் கண்டாவது நம் தமிழ் நாட்டு வாலிபர்கள் கண்திறப்பார்களென நம்புகிறோம். இன்றே இனிமேல் ஒருகட்டு சிகரெட்கூட வாங்குவதில்லையென ஒவ்வொருவரும் பிரதிக்ஞை செய்து கொள்ளட்டும். தமது நண்பர்களையும் இந்த நல் வழியில் திருப்புவதென கங்கணங் கட்டிக் கொள்ளட்டும். இதனால் இவர்கள் பல ஏழைகள் வயிற்றுக்குக் கஞ்சியளித்த பலனை அடைவார்கள். இந்தியாவின் சுயராஜ்யத்திற்கு வழி தேடினவராவார்கள்.

அடுத்தபடியாக, நாம் ஏற்றுமதி செய்யும் தோலைப்பற்றிக் கவனிப்போம். இத்தோல்களைப் பதனிடும் வேலை நமது தமிழ் நாட்டில் முக்கியமாகச்சக்கிலியர்கள் என்று சொல்லப்படும் ஜாதியார் கையிலிருக்கிறது. அவர்கள் பழையகால முறைகளையே இன்னும் கையாண்டு வருகிறார்கள். படித்துவிட்டு வேலையில்லாது திண்டாடும் நாம் இவ்வேலையை மேற்கொண்டு பதனிடுவதில் புதிய முறைகளை உபயோகித்தால் நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தோலின் மதிப்பு அதிகப்படும். இதனுடன் நில்லாது நாம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் சாமான்களை நாமே செய்துகொள்ளும்படியாகத் தொழிற்சாலைகளையேற்படுத்தவேண்டும்.

இந்தியாவிலிருந்து வெல்லம் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. சர்க்கரை ஏராளமாக உற்பத்தி செய்யப்படும் நாடுகளில் இந்தியா ஒன்றாக இருந்தும், வருஷமொன்றுக்கு 16-கோடி ரூபாய் பெறுமான சர்க்கரை (ஜீனி) நாம் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறதென்றால், இதைவிட வெட்கக் கேடான காரியமொன்றுண்டோ? இது எக்காரணத்தால்? சர்க்கரைத் தொழிலை நாம் விருத்திசெய்யாத காரணமேதான். ஆம், அது மிகவும் கஷ்டமான காரியந்தான். ஆனால் கஷ்டமின்றிச் சுகமேது, லாபமேது?

ஒவ்வொரு கைத்தொழிலைப் பற்றியும் இவ்வாறே கூறலாம். கீழ்க்கண்ட கைத்தொழில்களை நாம் கூடியவரையில் முன்னேற்றமடையச் செய்யலாம்.

1. காகிதம் செய்தல்.

இந்தியாவில் இப்பொழுது அநேக இடங்களில் காகிதம் செய்கிறார்கள். இன்னும் அதிகமாகச் செய்வதற்கு வேண்டிய பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தல் வேண்டும்.

2. கண்ணாடி சாமான்கள் செய்தல்
3. ரப்பர் சாமான்கள் ”
4. சோப்பு ” ”
5. உப்பு ” ”
6. சிமெண்ட் ” ”
7. தீப்பெட்டி ” ”

கேவலம் தீப்பெட்டியுங்கூட அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இம்மங்கும் காலம் நீங்கிப் பொங்குங்காலம் பொலிவதென்னாளோ?

## ஜப்பான் வர்த்தக நிலை

### பருத்தி ஏற்றுமதியில் 425 லக்ஷ ரூபா குறைவு

(திராவிடனில் கண்டது)

அமெரிக்க வியாபாரமும் சீன வியாபாரமும் ஜப்பானுக்கு எவ்வளவு முக்கியமோ அது போல் இந்திய வியாபாரமும் முக்கியமானதாகும். இவ்வருஷத்தின் முதல் 7 மாதங்களில் ஜப்பானின் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் குறைந்ததன் பயனாக ஜப்பான் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் அரசியல் கிளர்ச்சியும், அந்நிய நாட்டுச் சாமான் பகிஷ்காரமுமே அதற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

இவ்வருஷத்தின் முதல் 7 மாதங்களில் ஜப்பான் 634 லக்ஷம் ரூபாய்க்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. சென்ற வருஷத்தைவிட 164 லக்ஷம் ரூபா குறைவு அதாவது, சென்ற வருஷத்துக்கு இந்த வருஷம் 100-க்கு 20%குறைவு. ஆனால் ஜூலைமாதத்தில் சென்றவருஷத்தைவிட 100-க்கு76% குறைவு. தரிநூல்களில் மட்டும் 132 லக்ஷம் குறைந்திருக்கிறது. இவ்வருஷத்தின் முதல் 7 மாதங்களில் மொத்தம் 310 லக்ஷம் ரூபாய்க்குத் தரி நூல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன.

இவ்வருஷம் இந்தியாவுக்கு 38 லக்ஷம் ரூபாய்க்குப் பாதகவசதிகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது, சென்ற வருஷத்தைவிட 7 லக்ஷம் ரூபாய் குறைவு. ஆனால் பட்டுத் துணிகள் மட்டும் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. மொத்தம் இவ்வருஷம் $5\frac{3}{4}$ லக்ஷத்துக்குப் பட்டுத் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அத்தகைய சாமான்கள் மொத்தம் 58 லக்ஷத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஜூன் மாதம்வரை பட்டுத் துணிகள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஆனால் ஜூன் மாதத்தில் 66%ம், ஜூலையில் 83%ம் குறைந்துவிட்டது. ஜூன், ஜூலை மாதங்களிலும் பாதகவசதிகளின் ஏற்றுமதியும் குறைந்துவிட்டது கவனிக்கத்தக்கது.

### இறக்குமதி குறைவு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாமான்களும் அவ்விதமே குறைந்திருக்கின்றன. இவ்வருஷத்தில் முதல் 7 மாதங்களில் இந்தியாவிலிருந்து மொத்தம் 969 லக்ஷத்துக்கு இறக்குமதி செய்யப்பட்டன. அதாவது, சென்ற வருஷத்தைவிட இவ்வருஷத்தில் 525 லக்ஷம் ரூபாய்க்குக் குறைவாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. ஜப்பான் இறக்குமதி குறைந்ததற்குச் சுத்தம் செய்யப்படாத பருத்தி இறக்குமதி குறைந்ததே காரணமாகும். சுத்தம் செய்யப்படாத பருத்தி மட்டும் சென்ற வருஷத்தை விட இவ்வருஷம் 100-க்கு 27% குறைவாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு, ஜப்பானில் வியாபாரக்குறைவு ஏற்பட்டதும், ஜப்பான் நூல்களின் விலையும் துணிகளின் விலையும் குறைந்து விட்டதுமே காரணமாகும்.

இந்தியச் சரக்குகளின் இறக்குமதி சென்ற வருஷத்தை விட இவ்வருஷம் 9% குறைந்து விட்டதானால், ஜப்பான் சரக்குகளின் விலை 34% குறைந்து விட்டதை கவனிக்கத்தக்கது, இவ்வருஷம் இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு $73\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய்க்கு சுத்தம் செய்யப்படாத பருத்திகள் இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் சென்ற வருஷ இறக்குமதியில் 41 லக்ஷம் குறைவு. இந்தியாவிலிருந்து சுத்தம் செய்யப்படாத பஞ்சுகள் இவ்வளவு குறைவாக இறக்குமதி செய்யப்பட்டது எந்தக் காலத்திலுமில்லை.

இந்திய வியாபாரம் குறைந்ததால் ஜப்பான்வியாபாரிகள் பெரும் திகிலடைந்திருக்கின்றனர். இந்திய வியாபாரத்தைப் பெருக்க அவர்கள் ஏற்றுமதி வியாபாரிகள் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இந்தியாவுக்குப் பட்டுத் துணிகளையும் பருத்தித் துணிகளையும் ஏற்றுமதி செய்வதுடன், தரிமெஷீன்கள், ஐஸ் தயாரிக்கும் மெஷீன்கள், சோப்புகள், கோதுமை மாவு, மெழுக்கு வர்த்திகள், பாய்கள், புகையிலை முதலியவைகளின் ஏற்றுமதியையும் அதிகரிக்கச் செய்யலாமென அவர்கள் நம்புகின்றனர்.

ஜப்பானின் மற்ற நாட்டு வியாபாரங்களும் குறைந்துகொண்டு வருகின்றன. அமெரிக்காவில் ஜப்பான் பட்டுகளுக்கே தேவையில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. ஜப்பான் பட்டுத் துணிகள் இப்போது பாதிவிலைக்கே விற்கப்படுகின்றன.

## கதர்

ஆவணிப் பித்தனில் கண்டது

இந்தியக் கிராமங்கள் இன்றை அடைந்துள்ள வறுமையை முன் எந்நாளிலும் அடையவில்லை; பின் எந்நாளிலும் அடையப் போவதில்லை. பாரத மக்களில் மிகப் பெரும்பான்மையோர் கிராமவாசிகள். ஜனத் தொகையில் நாலில் மூன்று பேர் நிலத்தை நம்பியே பிழைப்பவர்கள். பழைய காலத்தில் விவசாயிகளுக்குத் துணைத் தொழில்களாக இருந்தவை யெல்லாம் இப்போது மறைந்து போயின. அவர்களுக்கு வருஷ முழுவதும் விவசாயத்தில் வேலை யிருப்பதில்லை என்பது அனைவரும் ஒப்ப முடிந்த ஒரு விஷயம். இந்நிலைமையை மனதில் கொண்டு நாம் பார்ப்போமாயின் நம் தேச மக்களின் மகத்தான வறுமைக்கு வேறு காரணம் தேடமாட்டோம். கிராம வாசிகளில் பெரும்பான்மையோர் செய்யக்கூடிய துணைத் தொழில்கள் நூற்றலும் நெய்தலுமே.

உணவுக்கு அடுத்தபடியான தேவை யாகிய உடையின் மூலப் பொருள் பருத்தி இந்தியக் கிராமங்களில் ஏராளமாக விளைகிறது. கிராமத்தார் உண்டது போக மீதியான உணவுப் பொருள்களையே விற்கிறார்கள். அது போலவே உடைக்கு வேண்டிய பருத்தி போக மீதிதான் கிராமத்தை விட்டு வெளிக் கிளம்புதல் நீதி. இவ்வரிய நீதியைக் கிராமத்தார் அடியோடு மறந்து பயிரிடும் பருத்தி முழுவதையும் வெளியிடத்தாருக்கு விற்று விடுகிறார்கள். அந்தப் பருத்தி வெளியிடங்களில் உடையாக வேண்டுவதற்கான சகல செலவுகளையும் தாங்கி லாபமும் பெற்றுக்கிராம வாசிகளுக்கு உடை ரூபமாக விற்கப்படுகிறது. கதரியக்கத்தின் ஒரு உயரிய இலட்சியம் பருத்தி விளையுமிடத்தில் உடையும் தயாரிக்கப்பட வேண்டு மென்பதே.

இவ்வித மனப் பான்மை கதரை ஆலைத்துணியுடன் போட்டியிட இழுக்காது. இராட்டையில் நூற்றல் வீட்டில் சமையல் செய்வதைப் போன்றாகிவிடும். அதில் வியாபாரப் போட்டி ஏற்படுவதற்கு இடமில்லை. ஹொட்டல்களினால் வீட்டுச் சமையலை எப்படி நிறுத்த முடியாதோ அதுபோல் இயந்திரத்தினால் வீட்டுக்கு நூற்றலையும் நிறுத்த முடியாது. இராட்டினம் இயந்திர சக்தியுடன் போட்டியிட்டு வெற்றிபெற முடியுமா என்ற கேள்விக்குப்

# தொழிற் பகுதி

## நெசவும் சாயத் தொழிலும்

### (Cottage Industry)

[சேயாறு தாலூக்கா போர்டு ரூரல் சூபர்வைசர் - திரு. மே. சக்கரவர்த்தி நயினர்]

'செய்யுந் தொழில்களில் நெய்யுந் தொழிலே சிறப்புடைத்து' என்பது தமிழ் நாட்டில் நெடும் பகலாய் வழங்கி வரும் ஒரு நன்மொழியாகும். குடிசைத் தொழில் வரிசைகளில் இது தலை சிறந்த தொழிலாகும். இத்தொழிலில், ஆங்கிலேயரும், ஜப்பானியரும் விசேஷ கவனஞ் செலுத்தி உலகம் போற்றும் ஆதிபத்தியத்தை அடைந்திருக்கின்றார்.

நமது நாடும் பண்டைக் காலத்தில் நெய்யுந் தொழி லொன்றினாலேயே உலகத்திற்கு அறிமுக மாயிற்று. ஆனால் தற்பொழுது இத் தொழிலில் கவனஞ் செலுத்தாததனாலேயே நமது நாடு வறுமைக்குட்பட்டது; பொருளாதாரம் நிராதாரமாயிற்று; தொழிலாளர்கள் வறுமை வாய்ப் பட்டனர்.

ஆயினும், இப்பொழுது நமது நாட்டுப் பெரு மக்கள் சுதேசித் தொழில்களில் விசேஷ கவனஞ் செலுத்த ஆரம்பித்து விட்டனர். இதனால் நெய்யுந் தொழில் பண்டுபோல உயரிய நிலைமைக்கு வருவதற்கான அறிகுறிகளைக் காட்டுகின்றன. இது சமயத்தை நழுவ விடாது செங்குந்த மரபினர்கள் நெய்யுந் தொழிலில் விசேஷ கவனஞ்செலுத்த முற்பட வேண்டும். இத்துறையில் ஈடுபடுவது மரபு முன்னேற்ற மடைவதற்கும் பொருளாதாரம் பெருகுவதற்கும் தக்க சாதனமாயிருக்கும்.

முதலாளிகளும் தொழிலாளிகளும் கூட்டுறவாகச் சேர்ந்து தொழிற் பெருக்கத்துக்கான வழியை ஆராய வேண்டும். தேச மக்களின், கால வர்த்தமானங்களுக் கேற்ப ஆடைகளைத் தயாரிப்பதற்கான ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும். இதற்காகச் செங்குந்த மரபினர், ஒரு மத்திய நெசவு கைத்தொழிற் சாலையைக் காணவேண்டும். கைத்தொழிலில் ஈடுபட்ட சிறுவர்களுக்குச் சிறந்த முறையில் நெசவுப் பயிற்சி கொடுக்கவேண்டும். நெசவு நிபுணர்கள் ஆராய்ச்சிக் கூடத்திற் கூடி மக்களுடைய மனக் கவர்ச்சிக் கேற்ற மாண்புடைய சித்திர ஆடைகளைத் தயாரிப்பதில் கவனஞ் செலுத்த வேண்டும்.

இதற்கு அனுபந்தமாக, தேசீய சாயத் தொழிற் சாலை அமைதல் வேண்டும். அதில் நமது நாட்டு மூலப் பொருள்களிலிருந்து சாயம் இறக்குவதற்கான ஆராய்ச்சியில் இறங்கவேண்டும். நமது நாட்டில் விலை மலிவில் கிடைக்கும் மூலப் பொருள்களிலிருந்து கண்ணைக் கவரும் பிரகாசமான கெட்டிச்சாயங்களைத் தயாரிக்கலாம் — இப்பொழுது வட நாட்டிலும் தென்னாட்டிலும் பலரஸாயன நிபுணர்கள் நாட்டுப் பொருள்களிலிருந்து விதம் விதமான நிறச் சாயங்களைத் தயாரிப்பதற்கான முறைகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

உதாரணமாக, மயில் துத்தத்தைப் பொடி செய்து தண்ணீரில் கலந்து காய்ச்சி இறக்கிக் கொள். சுண்ணாம்பைக் கரைத்து ஒரு பாத்திரத்தில் வடிகட்டிக்கொள். சாயந் தோய்ப்பதற்கான ஆடையையோ, அல்லது நூலையோ அழுக்குப் போக்கி, முதலில் மயில்துத்த கஷாயத்தில் 10 நிமிஷம் ஊறவை. பின்பு சுண்ணாம்புக் குழம்பு ஜலத்தில் 5 நிமிஷம் ஊறவை. இங்ஙனம் இரண்டு மூன்று தடவை திருப்பித் திருப்பி அவைகளின் மாற்று. நல்ல ஆகாய நிறம் கிடைத்ததும் (வெண்மை கலந்த நீலம்) ஜலத்தில் அலசித் உலர்த்தி எடுத்துக்கொள். இது தேசீய சாய முறைகளில் ஒன்றாகும். இதுபோல், மயில் துத்தம், காசிக்கட்டி, வெங்காய ஆடை, மாதுளம் பட்டை ஆடை, வத்தங்கி மரத்துண்டு, நீலிக்கட்டி, ஜாபர விதைகள் முதலியவைகளைக் கொண்டு வண்ணாத்திப்பூச்சி போன்ற பல அழகிய வர்ணங்களைத் தயாரிக்கலாம்.

நெய்யுந் தொழிலில் ஈடுபட்ட எவரும் இது போன்ற முயற்சியில் ஈடு பட்டு நாட்டு வளப்பத்தைப் பெருக்குவார்களாக.

குறிப்பு:—இவ்வியாச கர்த்தர் நாட்டுச் [illegible] கள் தயாரிக்கும் நிபுணர்க [illegible]

[387-வது பக்கத் தொடர்ச்சி]

பதில், நாடெங்கும் நூற்றல் தொழில் உயர்பிடிக்க முடியுமா என்பதைப் பொறுத்திருக்கிறது. தேசத்தில் நூற்றல் தொழிலுக்குரிய வசதிகள் ஏராளமாக உண்டென்பது வெளிப்படை. கிராமவாசிகளிடம் வேண்டுவதெல்லாம் மன ஊக்கம். ஊக்கமிருந்தால் கதரியக்கம் உயிர் பெறல் வெகு எளிது. விலைக்கு வாங்கிக் கதர் கட்டுவதென்னும் வீரா வேசம் நம்மில் பெரும்பான்மையோரிடமிருந்து வெகு சீக்கிரத்தில் போய்விடுகிறது. பின் பிடிவாதத்தால் கதர் கட்டிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.



# சீர்திருத்தப் பகுதி

## ஒற்றுமை மணத்தினுயர்வும் செங்குந்த மணங்களிற் சில சீர்திருத்தங்களும்

[திரு. ஐ. க. பெருமாள்சாமி முதலியார் அவர்கள், பவானி.]

(தொகுதி 4 பகுதி 10, 361-வது பக்கத் தொடர்ச்சி)

### ஒரு சேலை கட்டி நீர்வார்த்தல்

என்னுஞ் சடங்கும் நம்மவர் மணங்களிடையே நடைபெற்று வருகின்றது. இச்சடங்கானது சதிபதிகளின் ஒற்றுமையைக் காட்டவே ஏற்படுத்தப் பட்டதெனக் கூறலாம். அதாவது எத்தகைய இன்னலாயினும் தரித்திரமாயினும் வரினும் அக்காலத்திலும் கூட நாம் இணை பிரியாதிருப்போம் எனக் காட்டவேயாகும். முற்காலத்தில் திருவள்ளுவனும் அவ்வாறே யிருந்தார் என்றதைக் காரணமாகக் கொண்டும், அதனை ஒரு சடங்கிலேனும் காட்டலாமென இச்சடங்கை ஏற்படுத்தியு மிருக்கலாம். அக்காரணம் யாதாயினுமாகுக. நமது முன்னோர் காலங்களில் சதிபதிகட்கு ஒரே துணி கட்டி நீர் வார்த்தும் வந்திருக்கலாம். ஆனால் நாகரீகம் பரவப் பரவ இக்காலத்தில் அந்த அநாசாரம் ஒரு சிறிதே நீங்கிப் பதியின் வேஷ்டி மூலையைப் பெண்ணின் இடையில் செருகி நீர்வார்த்து விடுகின்றனர். ஆனால் அதற்கும் 'ஒரு சேலை கட்டி நீர் வார்த்தல்' என்ற பெயரேதான் வழங்குகிறது. இந்தச் சடங்கின் பெயரைக் கேட்ட அளவிலேயே பிறமதத்தினர் பெரிதும் இகழ்ந்து பரிகசிக்கின்றனர். பிறர் பரிகசிக்கத் தக்க செயல் நம்மிடையில் ஏன் நிகழவேண்டும்?

### மாமன் பெண் தூக்குதல்

என்ற பழக்கமும் குக்கிராமங்களில் நடந்து வருகிறது. தற்கால வாலிபர்கள் அந்தச் செயலுக்கு இடந்தருவதில்லை. மாமன்மார்கள் பக்குவப் பெண்களை (பெரிய பெண்களை)க் கஷ்டப்பட்டுத் தூக்குவதால் வரும் பலாபலன் என்ன? கற்பிலக்கணப் படி இன்னொருவனுக்கென நிச்சயிக்கப்பட்ட ஒரு பெண்ணை உறவினனேயாயினும் அந்நியன் தீண்டலாமா? இவ்வாறு மாமன்மார் பெண் எடுப்பது என்ன காரணமெனிலோ, மாமன் வீட்டில் சம்பந்தஞ் செய்வது என்ற குறிப்பைக் காட்டுவதற்கேயாம். ஆனால் மாமன் மார் பெண்ணை இக்காலத்தில் கையைப் பிடித்து மணையைச் சுற்றுகின்றனர். மாமன் வீட்டில் சம்பந்தஞ் செய்வது என்ற குறிப்புக்காக இவ்வழக்கம் ஏற்பட்டதே யாயினும், இக்காலத்து அம் முறைகள் சமயத்திற்குத் தக்கவாறு கையாளப்படும். முறைக்கு மாறிய விடத்தில் பெண் கொள்ள வேண்டியிருக்குமே யானால் வேறு விதத்தில் சொந்தத்தை (மாமன் முறை) ஏற்படுத்தி மணஞ் செய்துவிடுகின்றனர். ஆதலின் அவ்வழக்கம் வேண்டப்படாததே.

### அருகம் பொன் எடுத்தல்

என்ற பழக்கத்தையும் சிறிது ஆராய்வோம். 'அருகம் புல் எடுத்தல்' என்ற தொடரே நாளடைவில் அருகம் பொன் எடுத்தல்' என வழங்கப்பட்டது என நாம் அபிப்பிராயப்படுகிறோம். அருகம் பொன் எடுப்பது என்னுஞ் சடங்கு நடைபெறுவது எப்படி யென்றால், ஒரு தாம்பாளத்தில் செந்நீரிலிருக்கும் வெற்றிலையைக் கிள்ளி இரு கையிலும் எடுத்து, முழங்கால், தோள், தலைகளில் வைத்து ஆசீர்வதிப்பதாகும். இவ்வாறு மணமகளுக்கும் மணமகனுக்குஞ் செய்வதுண்டு. முற்காலத்தில் அருகம் புல்லையே எடுத்து ஆசீர்வதித்து வந்தனர். அதுகொண்டேதான் அச்சடங்குக்கு 'அருகம் புல் எடுத்தல்' என்ற பெயர் ஏற்பட்டதெனக் கூறலாம். அவ்வாறில்லையேல், 'அருகு' என்ற பதம் அச்சடங்குக்கு ஏற்படவேண்டிய அவசியமேயில்லை. அருகம் புல்லை எடுத்து ஏன் ஆசீர்வதிக்கவேண்டுமெனிலோ, அருகுபோல் தழைத்துச் சதிபதிகள் வாழவேண்டும் என்ற குறிப்பைக் காட்டவேயாம். நாளடைவில் அருகம் புல்லும் பச்சைதானே, வெற்றிலையும் பச்சைதானே என்ற அபிப்பிராயத்தால் அதற்குப் பதிலாக வெற்றிலையை அச்சடங்குக்கு உபயோகித்து வந்தனர். அருகம்புல் கிடைக்காத ஊர்களும் இருக்கலாம். இருக்குமானாலும் அதனை அக்கரையாய்க் கொண்டு வந்து வைப்பதற்கின்றிச் சமயத்திற்கு வெற்றிலையை உபயோகித்திருக்க

[388 - வது பக்கத் தொடர்ச்சி]

தொழில் மாணவன்" என்னும் நூலை நான்கணா விலையில் வெளியிட்டிருக்கிறார். (நூல் கிடைக்குமிடம்: மானேஜர், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 199 தம்பு செட்டி வீதி, சென்னை.) இந்நூலில் தேசீய சாயங்கள் தயாரிக்கும் முறையையும், துணிகளுக்கு அச்சிடும் முறையையும், அச்சிடுவதற்கான மைகள் கூட்டும் முறையையும் விவரித்திருக்கின்றார். இம்முறைகளெல்லாம் எல்லாரும் செய்யக் கூடியனவாகும். [ப - ர்.]

லாம். அதுவே வழக்கமாக வந்துவிட்டது. சரி, இதனுல் கெடுதலென்ன என்பீரேல், ''கெடுதல் அதிகமில்லை. மற்றெந்தச் சடங்கினுலும் அதிகமான கெடுதல்கள் இல்லை சில சடங்குகள் மூடத்தனமாயிருக்கலாம், சில சடங்குகள் ஒருபொருளைக் (குறிப்பைக்) காட்டுவதாயுமிருக்கலாம். •அவ்வாறு மூடுமந்திரமாய்க் குறிப்புப் பொருளைக் காட்டுவதை விட்டுவிட்டு, யாவருக்குந் தெரியுமாறு பகிரங்கமாய் இனிய தமிழ் மொழியில் பல ஆசிகளைப் பகரலாமே'' என்பதுதான். ஆனுல், மணமக்கள் உயர்ந்த உடைகளைத் தரித்து மணக்கோலத்துடனிருக்கும்போது அவ்வுடைகளில் அருகம் பொன் எடுக்கும்போது செந்நீர் பட்டு அவ்வுடையே கெட்டுவிடுகிறது. இது ஒரு சிறிய கெடுதலெனவே நாம் கூறுகிறேம்.

## மஞ்சள் நீராடல்

மஞ்சள் நீர் ஆடல் என்பது கல்யாண முடிவு காலத்தில் சந்தோஷம் கொண்டாடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வழக்கமாகும். சந்தோஷம் கொண்டாட வேண்டியதுதான் ஆனுல் எவ்வித முறையில் கொண்டாட வேண்டும். ஏதோ ஒரு வகை நாகரீக முறையில் கொண்டாடுவதே தற்காலத்திற்கேற்றதாகும். மஞ்சளும் சுண்ணும்பும் கலந்து அதில் எண்ணெயும் விட்டுச் செந்நீர் ஆக்கி அந்நீரைக் கேலிக்காக ஒவ்வொருவர் வேஷ்டிகளிலும் ஊற்றிவிடுகின்றனர். எண்ணெய் ஊற்றுவதால் அந்த நிறம் சீக்கிரம் மாறுவதில்லை. அப்படி ஊற்றுபவர்கள் கொஞ்சமாக ஊற்றுகிறார்களா? இல்லை, இல்லை 'அதோ அவர் நல்ல துணி கட்டி வருகிருர். அதில் ஊற்றவேண்டும்' என நல்ல உடைகளில் அதிகமாகக் கொட்டிவிடுகின்றனர். அவர்கள் பேசாமலிருப்பார்களேயானுல் அவர்களைச் செந்நீராலேயே குளிப்பாட்டிவிடுகின்றனர். இன்னும் சிலர் ஜர்மன் சாயப் பவுடர்களை நீரில் கலந்து ஊற்றிவிடுகின்றனர். அந்த நிறம் சீக்கிரம் போவதில்லை. இதனுல் வேஷ்டி ஷர்ட் முதலியவைகளைக் கெடுத்துக்கொண்ட பலர் சண்டைக்கு ஆரம்பித்து விடுகின்றனர். இவ்வாறு சண்டைகள் பல இடங்களில் ஏற்பட்டிருத்தலைக் கண்டிருக்கிறேம். திருவிழாக் காலங்களிலும் இம் மஞ்சணீர் விளையாட்டில் கலகங்கள் ஏற்படுவதுண்டு. மஞ்சணீருக் கஞ்சிப் பலர் ஒளிந்து திரிவதையுங் காணலாம். இவ்விளையாட்டால் கலகத்தை ஏற்படுத்திக்கொள்வதைவிட வேறு வகையால் குதூகலம் கொண்டாட முடியாதா?

## இதர சடங்குகள்

'எதிர் கோண்டு சம்பந்தம் செய்தல்' என்னும் வழக்கமும் ஒன்று இருந்து வருகிறது. பெண் வீட்டுக்காரரை மாப்பிள்ளை வீட்டுக்காரர் எதிர் கொண்டு அழைத்து வருவது. அப்படி அழைக்குங் காலத்தில் நடுமத்தியில் ஓர் எல்லையை ஏற்படுத்திக் கொண்டு 'நீங்கள் வாருங்கள் எனப் பெண் வீட்டுக்காரரை மாப்பிள்ளை வீட்டார் கூப்பிடுவதும் இடையில் இரண்டொருவர் அவர்களைக் கொஞ்ச தூரம் (2 அடி 3 அடி) வரும்படி செய்வதும், இப்படிப் பல முறை செய்வதும், அதற்குள் 'நீ வா, நீ வா' என்ற சப்தமும் (நாங்கள் வெகுதூரம் 'அதாவது எல்லைக்குச், சமீபமாக வந்து விட்டோம், நீங்கள்தான் வரவேண்டு'மெனக் கூக்குரல் இடுவதும், மிகுந்த கேலிக்கு இடமாகத்தான் இருக்கிறதெனப் பலதடவை பிறஜாதியினர் கூறுவதைக் காதாரக் கேட்ட நான் கூருமல் விடுவதற்கில்லை. இவ்வாறு சம்பந்தஞ் செய்வதை விட்டு விட்டுப் பெண் வீட்டார் இறங்கியிருக்கும் இடத்திற்குச் சென்று க்ஷேமலாபம் விசாரித்து மிகுந்த ஆடம்பரத்துடன் அழைத்து வரலாமே. செய்கையில் கேலி செய்வதா? வார்த்தைகளில் கேலி செய்வதா?

'நாடு வழங்குதல்' என்பதும் ஒரு வழக்கமே. இந்த வழக்கத்தில் பலமான விவாதங்கள் நடைபெறுகின்றன. சிற்சில காரியக்காரர்களோ பெரியதனக்காரர்களோ தப்பித் தவறி தாம்பூலத்தை முறை தவறி வழங்கிவிட்டால் முறைப்படி தாம்பூலம் பெருதவர் 'எப்படி அவ்வாறு தாம்பூலம் வழங்கலாம்; நான் இந்தக் கல்யாணத்திற்கு வரமாட்டேன்' என எழுந்து விடுவதும், அதனுல் மணமக்களின் பெற்ருேர் வருத்தத்தை யடைவதும் இக்காலத்திய மணங்களில் பெரும்பாலும் நடைபெறுவதைக் காணலாம். காரணம் என்னவென்ருலோ—இக்காலத்திய காரியக்காரர்களில் சிலர் முறையை நன்கு தெரிந்து கொள்ளாததே. சில காரியக்காரர்களுக்கு வரிசைக் கிரமமான நாடுகள் எவை என்பது தெரியவாராதெனவே கருதுகின்றனன். (ஈண்டு காரியக்காரர்கள் என்னைக் கோபிப்பது வேண்டாம். அப்படிப்பட்ட காரியக்காரர்களும் சிலர் இருப்பதால் அவ்வாறு எழுதலாயிற்று). இத்தகராறுகளால் சில கலியாணங்களும் தடை பட்டு நிறைவேருமல் போயிருக்கின்றன. இவ்வாறு செய்வதை விடுத்துப் பொதுவாகச் சபையில் வைத்துவிட்டு இன்னருக்குத்தான் முதலில் கொடுப்பதென்னும் எண்ணத்தை நீக்கி யாவருக்குஞ் சமமாகக் கொடுப்பதே சிறந்ததாகு மல்லவா? தேவாலயங்களிலும் இவ்வித வழக்கம். இன்னருக்குத்தான் முதலில் விபூதி கொடுப்பது என்ற வழக்கம் இருந்து வருவது பின்னர் அத்தேவலாயத்திற்கே ஒரு பெருங் கேட்டை விளைவிக்கின்றதென்பதை யாவரும் சகஜமாய் அறிந்திருக்கலாம். இதனுல் கோர்ட் விவகாரங்களும் நடை பெற்றுப் பூஜையின்றிக் கோவில்கள் பல நாட்களாகப் பூட்டப்பட்டிருப்பதையும் நாம் பார்க்கலாம். ஆகவே சமபாவனையை யுண்டாக்கி அதன் மூலம் காரியாதிகளை நடத்தி வருதல் சிறந்ததன்ருே?

இன்னும் சில்லரைச் சடங்குகள் பல இருக்கின்றன. அவைகளை யெல்லாந் தனித்தனி ஆராய்புகின் நமது கட்டுரை முடிவுபெற நாள் செல்லும். ஆகவே, இன்னுஞ் சில விஷயங்களையும் இதனைப் பற்றிய நமது முடிவுரையையுங் கூறி



விட்டு நமது திருமணச் சீர்திருத்தக் கட்டுரையை முடிப்போம்.

காலத்தை யனுசரித்து நடக்கவேண்டுமென்பது யாவருா் ஒத்துக்கொள்ளத் தக்கவிஷயம் என நாம் கூறவேண்டியதில்லை. எற்கனவே பழைய வழக்கங்களை விட்டு நம்மவர் மணங்களில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னுந் தனவந்தர்கள் முற்றிலும் ஆடம்பரமான செலவுகளைச் செய்து விடுகின்றனர். அதனுல் அதை ஒட்டியே சிறிது சிறப்பாக நாமும் கலியாணத்தைச் செய்யவேண்டுமென ஏழைகளும் கடன் பட்டுக் கல்யாணத்தை முடித்து அக்கடனை மணமகன்மேல் சுமத்திவிடுகின்றனர். இக்காலத்தில் சதிபதிகள் தங்கள் வாழ்நாளைச் சந்தோஷத்தில் கழிப்பதற்கின்றி மனவருத்தத்துடன் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும்போது கடனை எவ்வாறு கட்டிக்கொண்டு இன்பமாக வாழமுடியும்? மணமகன் தானேசம்பாத்தியஞ்செய்து குடும்பத்தை நடத்துந் திறமைவாய்ந்தவுடன் அவனுக்கு மணஞ் செய்விக்காமல் பலவித காரணத்தை முன்னிட்டு (ஏதோ அசம்பாவிதமான காரணங்களை முன்னிட்டு) சிறிய வயதிலேயே மணத்தை முடித்து விடுகின்றனர். இதைப்பற்றித் தனிக் கட்டுரை விடுப்பாம். எவ்வளவோ ஆடம்பரமான நாகரீக கல்யாணங்களிலும். இவ்வித சடங்குகள் நடைபெற்ருல், எத்தகைய மேம்பாடான நாகரீகமான கல்யாணங்களா யிருந்தபோதிலும், அக்கல்யாணங்கள் சிறப்பினையடையா. இன்னும் கல்யாணங்களை 3, 4 நாட்கள் நீடித்து வைத்துக் கொண்டு அதனுல் ஏராளமான பணத்தையும் செலவழிக்கின்றனர். இப்படிச் செலவு செய்வதை மீத்து வைத்து அத்தொகையைச் சதிபதிகளுக்கு மூலதனமாக வைத்தால் அவர்கள் இன்பகரமாகத் தங்கள் வாழ்க்கையை நடத்தமாட்டார்களா?

இன்னும் 'மோழி வைத்தல்' என்னும் வழக்கம் ஜனங்களுக்குப் பெரிதும் கஷ்டத்தைக் கொடுக்கின்றது. முகூர்த்த காலங்களில் ஏழைகள் செலவைக் கவனித்து ஒரே முகூர்த்தத்தில் பல கலியாணங்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். மொழி வைப்பவர்கள், இதற்கு முன் தாங்கள் மணமியற்றிய காலத்தில் தங்களுக்கு எவ்வளவு ரூபாய் மொழி வைத்தார்களோ அதைவிட இரட்டிப்போ அரைப்பாகமோ அதிகமாகச் சேர்த்து மொழி வைக்க வேண்டியிருக்கிறது. சாதாரணமான மனிதன் கூட ஒவ்வொரு முகூர்த்த காலங்களில் சுமார் 20, 25, ரூபாய்க்குக் குறைவில்லாமல் மொழி வைக்க வேண்டியிருக்கிறது. வழியில்லையேல் திகைத்து அதிக வட்டிக்குக் கடன் வாங்கி அதனுல் வட்டி கொடுக்க முடியாமலும் கஷ்டப்படுகின்றனரல்லவா? இக் கஷ்டங்களைக் கவனித்துச் சென்னிமலை முதலிய இடங்களில் மொழி 1 ரூபாய்க்கு மேல் வைக்கக் கூடாதென முடிவு கட்டியுள்ளது மிகவும் மெச்சத் தகுந்ததே.

## நமது முடிவுரை.

ஆதலால் சடங்குகளை அதிகமாக்கி அந்தச் சடங்குகளைச் செய்யக் காலத்தை அதிகப்படுத்திப் பொருட் செலவையும் அதிகமாக்கி வீண் கஷ்டம் எடுத்துக் கொள்வதை நீக்கிக் குறைந்த காலத்தில் சிக்கனச் செலவில் நாகரீக முறையில் மணவினையை முடிப்பதே காலத்திற்கும் நன்மைக்கும் ஒத்ததாகும். ஆகவே, சடங்குகளை நீக்கிப் புரோகிதம் ஒழித்து, நமது பெரியார்களைக் கொண்டு பெண் வீட்டாரை நேர் சென்று அழைத்து வந்து, வேண்டியவர்களை அழைத்து, இனியதும் தாய்ப் பாஷையுமான தமிழ் மொழியில் ஆசீர்வாதங்களையும் மணமக்களின் உறுதி மொழிகளையும் மற்றவைகளையும் முடித்து, வந்த கனவான்களுக்கும் மற்றவர்களுக்கும் விருந்தொன்றை நடத்தி மண விழாவினை முடித்து விடுவதே போதுமான தென்பது நமது அபிப்பிராயமாகும். அன்றியும் இம்முறையே சாலச் சிறந்ததுமாகும்.

சுபம். சுபம்.

---

## பவானியில் மதுவிலக்கின் மகத்துவம்

நம்மவர்களுக்குள் மதுப்பழக்கம் இருந்துகொண்டுதான் நமது மக்களில் பெரும்பான்மையோரைக் கேவல நிலைமைக்குக் கொண்டுவருகிற தென்பதை உணர்ந்த பவானிச் செங்குந்தர்கள் ஆவணிமீ அமாவாசையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். "இனிமேல் யாரும் மதுவிலக்கை ஆதரிக்கவேண்டும். யாரேனும் மதுவை உபயோகித்தால் அவர் அதற்காக 10-ரூபாய் அபராதமும், மதுவை உபயோகித்ததை ருசுப்படுத்தியவருக்கு 2-8-0ரூபாயும் கொடுக்கவேண்டு" மென்னுந் தீர்மானத்தை நிறைவேற்றினர். அதன்படியே இதுவரை அந்தக் கட்டு நிலைத்து நிற்கிறது. ஆனுல் ஓர் வதந்தி என்னவென்ருலோ, சிலர் இரகசியமாக மதுவை உபயோகித்து வருகின்ருர்களென்பது. இது பொய் வதந்தியாயிருக்கலாமோ என எண்ணவேண்டியிருக்கிறது. அப்படி இருப்பினும், அறிந்தவர்கள் இனியும் அவ்வாறு செய்யமாட்டார்களெனவே நினைக்கிறேம். இன்னும் இவ்வூரில் வேறு சில சாதியார்களும் மதுவிலக்கை ஆதரித்து, இனிக் குடிப்பதில்லை என முடிவு செய்திருக்கிருர். இந்தப் பவானியின் சுற்றுப்புறங்களில் நெசவுத் தொழிலும் கூலியும் இல்லாதிருக்கும் இக்காலத்தில் மதுவிலக்கானது ஜனங்களுக்கு ஆகாரவசதிக்குத் தகுந்த உதவியாயிருக்கிறது. இக்காலத்தில் ஜனங்கள் மதுவிலக்கைச் செய்யாவிடின் ஆகாரத்திற்கு வழியின்றி அலைய நேரிடுமென்பது உறுதி. எனவே ஆகார வசதியை அளிக்க நேர்ந்த மதுவிலக்கை நாம் மிகவும் போற்றுகிறேம். அம் மதுவிலக்கின் மகத்துவத்தால் ஏழைகளுக்கு வயிருர உண்ண உணவும், உடுக்க உடையும் கிடைக்குமென்பதில் ஐயமே இல்லை. ஆகவே நம்மவர்கள் சங்கங்களும் நம்மவர்கள் வதியும் கிராமங்களும் மதுவிலக்கை ஆதரித்துச் செய்கையில் காட்டிவருமென எதிர்பார்க்கிறேம்.

B. S. குழந்தைவேல் முதலியார், பவானி

# ஒரு கோழிக் கூற்று

[திரு. ந. செம்பண்ண முதலியார் அவர்கள், நாகிரெட்டிபாளையம்]

ஓ சுப்ரமண்ய! அபயம், அபயம்! ஏ கழுகுமாமலை மீது வாழும் காருண்ய மூர்த்தி! குறவர் குலத் தோகைக்காகத் துறவி வடிவெடுத்தாண்ட சுந்தரேசா! வாரண முகத்தோன் பின்வரு பாலா! கார்த்திகைப் பெண்கள் கையினில் வளர்ந்த கார்த்திகேயா! கண்ணன் மருகா! எம்மையும் எமது இனத்தாரையும் ஆட்கொண்ட வள்ளலே! உமை தருபாலா! உத்தம சீலா! அறுமுக வேலா! அரகர முருகா! அசுரர்களது இடுக்கண் தீர்த்த சுந்தர வதனு! செங்குந்தர் மரபு சிறக்கச்செய்திடும் தேவாதி தேவா! எமது துயர் களைய வாராயோ? என்னே இம்மாந்தர் இயற்றும் இன்னல்கள்! நாங்களும் பறப்பன வகையிற் சேர்ந்த பக்ஷிகள் தாமே? ஏன் மற்ற பறவைகளைப்போல் நாங்களும் விண்ணில் விரைந்து பறந்து, எம்மிச்சைப்படி கூடிக் குலாவி ஆடிப்பாடி கூவிக் கொக்கரித்து உண்டு களித்து, எங்குவேண்டுமானுலும் திரிந்துகொண்டிருக்கக்கூடாது? ஆனல் சுயநலமொன்றையே பெரிதுங் கருதித் தம்முயிர்போற் பிறவுயிரைக் கருதாதொழுகும் மதியிலா மாந்தர்கள், எங்களைப் பிடித்துக் கூட்டினிலடைத்து, எங்களுடைய இயற்கைத் தன்மைகளை மாற்றிச் சுதந்தர வாழ்வைப் போக்கி, கடைசியில் பதறப்பதறப் பற்றி வதைத்து, எங்களைத் தமக்கு இரையாக்கிக் கொள்கின்றனர். நாங்களென்ன செய்வது? எங்ஙனம் உய்வது? இம்மனித கணங்களாலேயே நாங்கள் பறக்கும் சக்தியை இழக்கப் பெற்றவ ராகிவிட்டனம். எங்களுக்கு இரைகொடுத்துப் போஷிக்கிருர்களாம்; விரோதிகளிடமிருந்து காப்பாற்றுகிருர்களாம்; இதற்கென்றே எங்களுக்குத் தனி வீடாம். என்னே இம்மாந்தரின் போலிக் கருணை இருந்தவாறு! எங்களைத் தின்று ஊனைப் பெருக்கச் செய்துகொள்வதற்காகவன்ருே இத்தனைச் சூழ்ச்சியும்? ஆடு நனைகிறதற்குக் கோனய் குந்திக் குந்தி அழுததாம் என்ற பழமொழியை யன்ருே இம்மானிடர் கருணை ஒத்திருக்கின்றது.

நாங்கள் இம் மானுடவர்க்கத்தாருக்கு எவ்வகையில் தீங்கிழைத்தோம்? எல்லாப்படியாலும் எண்ணிறைும் பலவிதத்திலும் நன்மை செய்கிருேமென்பதே எமது துணிபு. தினமும் "வைகறைத் துயிலெழு" என்ற ஔவையார் வாக்கின்படி வைகறையில் சோம்பலின்றி எழுந்து மனிதர் தத்தம் கடன்களைச் செய்ய நேரமாய் விட்டதென்று எச்சரிக்கை செய்கிருேம். மேலும், மானிடருக்கும் மிருகராசிகளுக்கும் பலவிதமாய்த் தொந்தரவு கொடுத்துவரும் துஷ்டக் கிருமிகள், கொசுமலங்கள் முதலியவற்றைப் பறித்துப் பறித்து எடுத்துத் தின்று நிலத்தை நிர்மலமாக்குகிருேம். இங்ஙனமிருக்க, ஏன் எங்களுக்கென இத்தனை விரோதிகளைச் சிருஷ்டித்து விட்டனை? ஏ முருகேசா! கழுகுக் கூட்டங்களென்ன, கருடக் குழாங்களென்ன, இன்னும் அந்தோ! ஆறறிவு படைத்தும் அறவழியை அறவே விட்ட மனிதர்களென்ன, இத்தனை விரோதிகளிடமிருந்தும் தப்ப மார்க்கம் எதும் இலதே.

ஓ பழனிவேலா! நாங்களென்ன நினது வழிபாட்டில் பிசகினவரா? நாங்கள் கூவுவதே ஓகோ முருகா என்று கதறும் தொனிபோன்றிருக்கவில்லையா? எனினும் இவ்வேழைகள் படும்பாடு உன் திருவுளச் சம்மதமோ? இது தகுமோ? இது முறையோ? இது தருமந்தானே? இன்னும் நாங்கள் வீரத்தில் குன்றினவர்களா? நாங்கள் கத்தி பிடித்து அஞ்சாநெஞ்சோடு சண்டையிடுவதை எவரும் பார்த்திருப்பரே. மேலும் எங்கள் வீரசூர பராக்கிரமத்தைக் கண்டு மெச்சித்தானே, சூரசம்ஹாரா நினது சூரத்தன்மைக் கேற்ப எம்மை நின் கொடியில் கொண்டு ஆண்டருளியது? மேலும் எம்மிடம் ஒழுக்கக் குறைவேதேனுமுளதோ? சுருக்கிச் சொல்லுமிடத்து, வைராக்கியம் நேரும்போது எப்பாடு பட்டேனும் அதைச் சாதிக்க வேண்டுமென்பதும், வைகறைத் துயிலெழவேண்டுமென்பதும், எவனும் தன் மனைவியிடம் அன்பு கொண்டு அவளுக்கு யாதொரு விதமான வருத்தமும் வாராமற் பாதுகாக்க வேண்டுமென்பதும், சுற்றத்தாருடன் கூடி யுண்ணுதலே அழகென்பதும், ஆகிய பலவித நற்குணங்களை எங்களிட மிருந்தல்லவோ மாந்தர் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாகின்ருர்கள்?

இங்ஙன மிருக்க எங்களுக்கு வந்திருக்கும் துயர்களை எத்தனை என்று சொல்வது? ஏடும் இடங்கொள்ளாது. ஆயிரம் நாவு படைத்த ஆதிசேடனும் எடுத்துரைக்க முடிவுருது சோர்வுறுவன். பண்டிகைகள் வரினும், குட்டிச் சுவாமிகளுக்குப் பொங்கல் வந்துவிட்டாலும், புலாலையே அமிர்தமெனக் கருதும் மாந்தர்களுக்குச் சந்தோஷக் கேடு வந்துவிட்டாலும் சரி, வந்துவிட்டது எங்கள் உயிருக்கு எமன். ஆடி நோன்பென்றும், தீபாவளி யென்றும், கரி நாளென்றும் வந்து விட்டால் ஆயிரக் கணக்கான ஆடு கோழிகளைக் கொன்று மாய்க்கின்றனர். இந் நோன்புகளுக்கும் எங்களுக்கும் ஜன்ம விரோதம் போலும். நோன் பென்பது கொன்று தின்னுமை என்னும் நீதி வாக்கியத்தையும் மறந்துவிடுகின்றனர். எங்கு ஓடி ஒளிந்து தப்பித்துக் கொள்ளவும் எங்களுக்கு மார்க்கமில்லை. சில்லரைத் தேவதைகளுக்குப் பொங்கலென்ருல் எங்கள் உடலும் உயிரும் நடுங்குகின்றன. கூற்றுவன் ஒருவனைத் தவிர உயிரைக் கொள்ளை கொள்ளும் விருப்பம் எத்தெய்வத்துக்கும் இல்லை யென்று சுருதிகள் முறையிடுகின்றனவே. சூழ்ச்சியுள்ள இம் மக்கள் தம் அவாவைக் கடவுளர் மீதேற்றி வதைத் துண்கின்றனரே: இவர்களை மாக்க



ளென்று ஏன் கருதக் கூடாது? ஒரு தெய்வத்துக்குப் பூசை யென்ருல் கணக்கற்ற உயிர்கள் எதற்காக மாளவேண்டும்? அப்படியும் பூசை யேற்கும் தெய்வம் ஒன்றுளதேல் அதனிடம் உள்ள தெய்வத் தன்மைதான் என்னவோ?

நிற்க, கொல்லாமையாகிய விரத மன்ருே மானிடருக்கு மோக்ஷ சாதனம். எத்தனையோ மகான்கள் "கொல்லாவிரதமொன்று கொண்டவரே நல்லோர் மற்றல்லாதா ரரோ அறியேன் பாராமே" "உயிருடம்பைக் கடித்துண்ணுங் கருத்தெலங் குருவாணை யெமது சிவக் கொழுந்தாணை ஞானியெனக் கூறுணுதே" என்றும், "அம்மா வென வலற ஆருயிரைக் கொன்றருந்தி" இம் மானிடரெல்லாம் இன்புற்றிருக்கின்ருர். "அம்மா வெனுஞ் சத்தம் கேட்கின்ற ஞானிகட்கும் பொய்யாமணிரய மென்ருல் புசித்தவர்க் கென் சொல்லுவதே?" என்று பாடிக் கொண்டு போவதை நாங்கள் காடுகளில் இரை மேய்ந்து கொண்டிருந்த காலங்களில் கேள்வியுற்ற துண்டு. இன்னம் உலகத்தில் எத் தருமத்திற்குத் தாழ்வு வறினும் வருக வென்று, கொல்லாமையாகிய சிறந்த தருமத்தை நிலை நாட்டுவதையே முக்கிய நோக்க மெனக் கொண்டு சகலவித போக பாக்கியங்களும் நிறைந்த ராஜ்ஜியாதிகாரத்தைப் புறக்கணித்து விட்டு உலக விஷயாதி சுகங்களை வெறுத்துத் தள்ளித் துறந்து உண்மை ஞானந் தெளிந்து உலகத்தார் ஈடேறும் மார்க்கத்தை வெள்ளிடை மலையெனத் தெள்ளிதில் காட்டிய தெய்வத் தன்மை வாய்ந்த பௌத்த மகா முனிவர் கூறிப் போந்த மொழிகள் யாவும் அவலமாயினவே.

எங்களைப் பலியிடா விட்டால் கடவுளர் சீற்றம் பிடிப்பர் என்று கூறுகின்றனரே; இக்கட்டுரை தங்கள் இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ள மாந்தர் ஏற்படுத்திய சூழ்ச்சியேயாகும். பூவுலகத்தாருக்குத் தமிழ் வேதமென்று கூறப்படும் குறளில் "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா வுயிரும் தொழும்" என்று பொய்யா மொழிப் புலவர் கூறிப் போந்தமையும், ஆடுகோழி பன்றி அருந்துவோர்க்கெல்லாம் வீடில்லை யென்று வேதங்கள் கூறின வெல்லாமும் நிராகரித்து எங்களைப் போன்ற பக்ஷிகளையும் மற்ற விலங்குகளையும் மாய்த்து அவற்றின் ஊனைத் தின்று ஊனைப் பெருக்குகின்றனரே. இவ்வறியாமையுள்ள மாந்தரிடம் எப்படி நாங்கள் தப்புவது? ஓ வேலாயுதா! நினது வம்ச பரம்பரையினரான செங்குந்தர்களில் பலரும் எங்களை வதைத்து மாமிச பட்சணம் செய்கின்றனரே. இது நினது அடியர்களான செங்குந்தருக்கடுத்த செயலாகுமா? கேள்வி முறையில்லையா? நின் காது கேளாததோ? சொல்லையா. இனியேனும் எங்கள் மாட்டுக் கருணைகூர்ந்து நாங்கள் உய்யும்படி அருள் செய்ய வேண்டியது நினது கடமையாகும். இத்துடன் எனது கூற்றினைப் பூர்த்தி செய்கிறேன். ஸ்ரீதண்டாயுதபாணி துணையாகவும்.

சுபம். சுபம்.

---


# மகாநாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள்,

தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்

40-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணு 8 தபாற் செலவு அணு 3

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,

கீழ்ப்பாக்கம், சென்னை.




# வறுமையும் முயற்சியும்

அல்லது

## பிகராம் ஜீ மலபாரி

[E. V. பழனிவேல், லண்டன் மிஷன் உயர்தரப் பாடசாலை, கோயம்புத்தூர் ]

கஷ்டப்பட்டு உழைப்பின் எந்த ஏழை மாணவனும் பெருமையையும், கியாதியையும், சிறப்பையும் அடையலாம். "முயற்சி திருவினையாக்கும்", 'முயற்சியுடையோர் முன்னேற்ற மடைவார்' என்பதின் உண்மை ஈண்டுக் குறிக்கப்படும் சரித்திரத்திலிருந்து நன்குவிளங்கும். பொறுமையும், உழைப்பும், விடாமுயற்சியும், எவ்வளவு கஷ்டங்களையும், நீக்கி ஜயத்தையே கொடுக்கும் என்பதைப் பிகராம் ஜீ மலபாரி என்னும் பார்சி கனவானுடைய ஜீவிய சரித்திரத்தைப் படித்தால் தெள்ளிதில் உணரலாம். அவர் ஒவ்வொரு இந்திய மாணவனும் பின்பற்றக் கூடிய லக்ஷிய புருடன்.

கிபி 1853-ம் வருடத்தில், அதாவது இன்றைக்கு 80 ஆண்டுகளுக்கு முன்னர் பரோடா இராஜ்யத்தில் ஓர் ஏழைக்குடியில் பிறந்தவர் அவருடைய தந்தையார் கெய்க்வார் அரசாங்கத்தில் ஒரு குமஸ்தவாக 20 ரூபாய் சம்பளத்தில் அமர்ந்திருந்தார். பிகராம்ஜீக்கு 6-வது வயது நடந்து கொண்டிருக்கும் போது அவர் மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தினர். தாயும் பிள்ளையும் வெகு ஏழ்மை நிலையில் தன்னந் தனியாக விடப்பட்டனர் அவர்களுடைய சமுதாயக் கொள்கைகள் அவ்வம்மையாருக்கு மறுமணம் செய்துகொள்ள இடம் கொடுத்ததனால் குழந்தையின் க்ஷேமத்தைக் கருதி மறுகலியாணம் செய்துகொண்டார்.

பிகராம்ஜீயைப் போஷிப்பதற்கு அவருடைய இரண்டாம் தந்தை யிருந்தார் (ஏற்பட்டார்). பிகராம்ஜீயும், மற்று மிருபது சிறுர்களும் சூரத்தில் உள்ள ஒரு சிறு பாடசாலைக் கனுப்பப்பட்டனர். அப்பாடசாலையை நடத்தி வந்த கிழப்பார்சி உபாத்தியாயருக்குத் தெரிந்ததையெல்லாம் பார்சி பாஷையில் உள்ள சில மத சம்பந்தமான பாடல்கள் தான். அவற்றைக் குருட்டுருப் போட்டு ஒப்பிக்கத்தான் அவர் பிள்ளைகளுக்குப் போதித்தது. உபாத்தியாருக்காவது பிள்ளைகளுக்காவது அவர்கள் ஒப்பிப்பதின் அர்த்தம் ஒன்றுமே தெரியாது. ஆனால் அவர் ஒரு விஷயத்தில் மட்டும் மிகவும் கெட்டிக்காரர். பையன்கள் ஏதாவது ஒரு சிறு பிசகு செய்து விட்டாலும் சரி, அதற்காக அவர்களை நன்ருகத தடிப்புக்காணப் புடைப்பார். இப்பாட்டுப் படிப்பதில் சிறிது களைப்பு ஏற்பட்டால் பிள்ளைகளை நூல் நூற்கச் செய்வார். இந்தவேலை அவர்களுடைய படிப்புச் செலவிற்குச் சரியாக இருக்கும்.

இரண்டு வருடங்கள் அப்பள்ளியில் படித்த பிறகு அவன் தாய்ப்பாஷை கற்றுக்கொள்ள மற்ற ஒரு பள்ளிகூடத்திற்கு அனுப்பப்பட்டார். அவருடைய புதிய உபாத்தியாயர் ஒரு பிராமணர். அவர் படிப்புச் சொல்லிக்கொடுக்க யாதொரு சம்பளமும் வாங்குவதில்லை. ஏதோ சிற்சில சமயங்களில் மாணவர்கள் கொடுக்கும் தானியத்தையும், புஷ்பங்களையும் வாங்கிக் கொள்வார். இதுவும் கொடுக்கச் சத்தியற்றவர்கள் அவர் வீட்டில் வேலை செய்வார்கள். ஒருவன் சமையல் செய்வான். இன்னொருவன் விறகு பிளப்பான். மற்ருெருவன் தண்ணீர் கொண்டு வருவான். மற்ருெருவன் வீடு கூட்டிச்சுத்தி செய்வான். ஒரு சிறிய அறையில் தான் அவர்கள் படிப்பது. அதுதான் அவர்கள் பள்ளிக் கூடம். அதில் பெஞ்சுகளும் நாற்காலிகளும் கிடையா. ஒவ்வொரு பையனும் நிலத்தில் உட்கார்ந்து கொண்டு தன் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் மணல் போட்ட பலகையில், எழுத்துக்களையும், சித்திரங்களையும் வரைந்து கொண்டிருப்பான். இன்னும் அவர்களுக்குச் சிலேட், பென்சில், புத்தகம் முதலியவற்றில் ஒன்றும் கிடையாது.

எட்டாவது வயதில் பிகராம் ஜீ சூரத்தில் உள்ள மற்ருெரு பள்ளிக்குச் சென்ருர். அப்பள்ளி



உபாத்தியாயர் வெகு முரடர் கொஞ்சமேனும் ஈவிரக்க மற்றவர். பிள்ளைகளை ஆடு, மாடு முதலிய மிருகங்களைப்போல் நையப் புடைப்பார். அதனால் அவருக்குப் " பிள்ளை மேய்ப்பவன் " என்று பெயர் வந்தது. ஒரு சிறு குற்றத்திற்கும் சாட்டைவாரைக்கொண்டு பளீர் பளீர் என்று வெளுப்பார். ஒரு பையனை அவ்வாறு அடிக்கும்போது அவன் அழுகை வெளியிலிருப்பவர்களுக்குக் கேட்காதிருக்கும் வண்ணம் மற்றவர்களைப் பார்ஸி தோத்திரங்களை உரக்கப் பாடச்செய்வார். இளையவனை பிகராம்ஜீக்கு முதலில் அது கஷ்டமா யிருந்தது. ஏன் என்றல் அக்கொடிய உபாத்தியாரைச் சந்தோஷிப்பிக்க முடியவில்லை. அவருக்கிருந்த சந்தோஷமும், மனச் சமாதானமும் அவருடைய தாயிடத்தில் தான். அநேக சமயங்களில் வீட்டுக்குச் சென்றவுடன் தாயின் மடியில் படுத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டே உறங்கிவிடுவார். தாயும் அன்போடு தட்டிக் கொடுத்து உபசரிப்பாள். அவருடைய பள்ளி விஷயங்களை எல்லாம் வெகு பிரியத்தோடு கேட்டு அவரைப் பொறுமையோடும், விடாமுயற்சியோடும் படித்துவரவேண்டுமென்று ஊக்கப்படுத்துவாள். தன் குழந்தைக்கு கடவுளிடத்துப் பயந்தும் பக்தியுடனும் இருக்கும் படியாயும், உண்மையே எப்போதும் பேசவேண்டுமென்றும் சொல்லிக் கொடுப்பாள்.

அந்தப் பள்ளிக்கூட உபாத்தியார் மிகக் கொடிய கல் நெஞ்ச முடையவரா யிருந்த போதிலும் பார்ஸி பாஷை நன்ருக ஐயம் திரிபு அற உணர்ந்திருந்தார். பிகராம்ஜீ அவரிடத்திலிருந்து சகநாமம் என்னும் பெரிய பார்ஸியக் காவியக் கவிகளைச் சந்தேகமில்லாது ஓதி உணர்ந்தார். பிகராம்ஜீ வெகு கெட்டிக்காரர். அதனால் அவருக்குப் படிப்பின் மேல் அதிகப் பிரியம். பழய காவியங்களையும் (படிப்பதற்கு அதிகப் பிரியமானதால்) அதிகப் பிரியத்தோடு படிப்பார். அக்கதைகளில் கூறப்பட்டுள்ள அரும் பெருங் காரியங்களைச் செய்த அரசர்களில் அல்லது வீரர்களில் தன்னையும் ஒருவனுகப் பாவித்துக் கொள்ள ஆசைப்படுவார்.

பன்னிரண்டு வயதாகும் போது அவருடைய அருமை யன்னை அவரை விட்டு எமபுரமேகினுள். அவர் யாருமற்ற அநாதை யானுர். அவருடைய சிறிய தந்தை அப்போது பரம ஏழையாய் இருந்தார். அதனால் அவருக்கு எவ்வித உதவியும் செய்ய மறுத்துவிட்டார். இவ்வளவு சிறு வயதில் அவர் உலகத்தில் தனிமையாகத் தம்மைத் தாமே காத்துக் கொள்ளும்படியாக விடப்பட்டார். என்ன செய்வார் பாபம். வயதிலோ சிறியவர், நிலைமையோ ஏழ்மை; உதவிக்கோ உற்றுர் ஒருவரும் இல்லை. அச்சிறிய பிகராம் ஜீ சிறு பிள்ளைகளுக்குப் பாடம்சொல்லிக்கொடுத்து ஏதோ கொஞ்சம் சம்பாதித்தார். அவர்களில் சிலர் அவரைவிடப் பெரியவராயிருந்தனர். ஒரு தயாள சிந்தையுள்ள பாதிரியார் அவருடைய ஏழ்மை நிலைமையையும் ஊக்கத்தையும், நுண்ணறிவையும் கண்டு அவரைச் சூரத்திலுள்ள ஒரு ஆங்கில மிஷன் பள்ளியில் சம்பளமில்லாத மாணுக்கராகச் சேர்த்தார். அச்சிறிய வயது பாலகர் காலை ஏழுமணியிலிருந்து ஒன்பது மணிவரையும், மாலை ஆறுமணியிலிருந்து எட்டுமணி வரையும், தம் மாணுக்கர்களுக்குப் பாடம் கற்பிப்பார். தாம் பத்துமணியிலிருந்து நான்கு மணிவரை ஆங்கிலப் பள்ளிக்குச் சென்று படித்து வந்தார். நேரமிருந்த போதெல்லாம் தம்முடைய சாப்பாட்டைத் தாமே சமைத்துக் கொள்ளுவார். அவருடைய ஆங்கிலப் புத்தகத்தை இரவில் அதிக நேரம் வரை அதிக சிரமப் பட்டுப் படித்து வந்தார். ஒரு போதும் பிகராம்ஜீயைப் போல அவ்வளவு சிரமப் பட்டுப் படித்த மாணவர்களில்லை.

அதிக கஷ்டத்துடன் அம் மிஷன் பாடசாலையில் உள்ள கல்வி முடிந்ததும் தம்முடைய பதினைந்தாவது வயதில் பார்சி வாலிபன் பம்பாயிக்குச் சென்று காலேஜில் படிக்க எண்ணம் கொண்டார். தமக்குக் கிடைத்த சொற்ப வருமானத்தில் சிறுபாகத்தைச் சேமித்து வைத்திருந்தார். அவருடைய அன்புள்ள பாதிரி ஸ்நேகிதர் அவருக்கு ஏதாவது உதவி வேண்டுமாயின் செய்யத் தயாராய் இருப்பதாகச் சொன்னுர். இந்த உதவியை பிகராம்ஜீக்கு ஒருபோதும் பிரயோஜனப் படுத்திக் கொள்ள அவசியம் ஏற்படவில்லை என்பதைக் காணுவோம். ஒரு கஞ்சனுன லேவாதேவிக்காரனும் இவ்வாலிபருடைய கல்வி அவாவைக் கண்டு பிகாராம் சூரத்தை விட்டுப் போகும் போது இருபது ரூபாய்களை அவர் கையில் திணித்து, "ஒருபோதும் வருந்தாதே பிள்ளாய்! இதை எடுத்துக் கொள், உன்னுடைய நிஷ்களங்கமான முகம் என்னுடைய பணத்திற்குத் தகுந்த உத்திரவாதி " என்று கூறினுன். கொஞ்ச காலம் கழிந்ததும் இந்த ரூபாயில் ஒவ்வொரு பைசாவும் பாக்கி யில்லாது திருப்பிக் கொடுத்து விட்டார் என்று சொல்லவேண்டுவதில்லை.

பம்பாயில் வெகு சீக்கிரத்தில் மலபாரிக்கு ஒரு வேலை கிடைத்தது. பார்சிப் பள்ளி ஒன்றில் அவரை உபாத்தியாயராக இருபது ரூபாய் சம்பளத்தில் அமர்த்தினுர்கள். அது சீக்கிரத்தில் அறுபது ரூபாய் ஆயிற்று. சீக்கிரத்தில் தாம் பணக்காரனுவதை அறிந்தார். அவர் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் பையன்களுக்குப் பிரத்தியேகமாகப் பாடம் சொல்லிக் கொடுப்பதில் சம்பாதித்தார். இதற்குள் அவருக்கு ஆங்கிலபாஷையில் மிக்க நிபுணத்துவம் ஏற்பட்டது. அவர் ஓர் ஆங்கிலப் பாட்டுப் புத்தகம் எழுதி வெளியிட்டார். அதனுடைய சிறப்பை கவிச்சக்ரவர்த்தி லார்டு டென்னிசனும் (Lord Tennyson) கூடப் புகழ்ந்து கூறியிருக்கின்றுர்.

அக்காலத்திலிருந்து மலபாரி வெகு சவுக்கியமாக வாழ்ந்து வந்தார். அவர் புத்தகமெழுதுவதினுல் ஏராளமான திரவியம் சம்பாதித்தார்.




## குடியால் விளையும் கேடுகள்

[திரு. ப. அங்கமுத்து முதலியார், சிகிச்சாஞான பண்டிதர், சத்திய மங்கலம்]

அன்பர்களே! நமது, செங்குந்த குலத்திற்கோர் செழுஞ்சுடராய் விளங்கும் ஞானத்தனுகிய மித்திரன் குடியால் விளையும் கேடுகளைக் குறித்து எழுதுமாறு விரும்பியுள்ளா னென்பது யாவரும் அறிந்ததே. இத்தகைய கேடுகளை எழுதிப் பூரணமாக்குவதென்றால், சாமான்ய காரியமன்று.

ஆயினும், நமது நாட்டின் மக்கள் இக்கொடிய குடியால் மயங்காதிருக்கும்படி என்னால் இயன்ற வரை எழுதி முடிக்கிறேன். இதனைக் கண்ணுற்றேனு மிக்கொடிய குடியை விரும்பாதிருக்குமாறு வேண்டுகிறேன். அன்பர்களே, இக்குடியானது ஆதியில் இந்நாட்டின்கண் இருந்திருக்க மாட்டாதென்று உறுதியாகக் கூறலாம். எதனுலென்றால், முன் இந்நாட்டைப் பரிபாலித்து வந்த அரசர்கள் சிவாகமநீதிவழுவாதவர்களும் பக்தி விசுவாச முள்ளவர்களும் சைவசாரவொழுக்க மேற்றவர்களும் ஆலயப்பகுதி யாற்றி அமுதருந்தும் குணசீலர்களாகவும் கல்விக் களஞ்சியங்களாகவும் கவிமணிகளை ஆதரிக்கும் குதூகல முள்ளவர்களாகவுந் திகழ்ந்து ஆட்சிமுறை பிறழாது மக்களை ஆதரித்திருக்கின்றனர். இவ்வாட்சியில் அடங்கியமக்களும் ஆகமநீதி சைவாசாரம் பிறழாது நடந்திருக்கின்றனர். இதற்கு ஆதாரம் அவர்களால் கட்டப்பட்ட ஆலய விசேடங்களும் தலப்பெருமைகளும் மடாதி வைபவங்களும் ஆகம நூலாராச்சிகளும் மானிய விஸ்தாரங்களும் இன்னும் இதைப் போன்ற அனந்தங் காரியங்களுமே சான்றாகும். மேலும் குடியென்னும் கொடிய பழக்கத்தைச் சைவ சித்தாந்திகள் பிராமணர்கள் கோமுட்டிச் செட்டிமார்கள் தெலுங்கச் செட்டிமார்கள் வாணியச் செட்டிமார்கள் தொண்டமண்டலத்தார்கள் பவுத்தர்கள் வைணர்கள் முதலிய வகுப்பினர்கள் நாடுவதே கிடையாது. மீறி ஒருவன் குடித்து விட்டால் சாதிவிட்டு நீக்கி விடுகின்றனர். அதனை எவ்விடத்தும் கண்கூடாகக் காண்கின்ரும். உதாரணமாக, மேல்கண்ட வகுப்பினர் வியாபாரம் விவசாயம் உத்தியோகம் கல்விச்சாலை முதலிய மேலான தொழிலைப் பெறுவதுந் தவிர, நல்ல விவேகிகளாகவும் விளங்குகின்றனர். பின் இந்நாட்டிற்குக் குடி எவ்விதம் வந்தது? யார் பழக்கினர்கள்? அவர்கள் எம்மதத்தைச் சார்ந்தவர் என்று பார்ப்போமானல், அதுதான் 'கபாலி, கபாலி, கபாலி' என்று கூறப்பட்ட மதமாகின்றம் புகிறது. அவர்கள் எப்படி இந்நாட்டின்கண் கால் நீட்டினர்கள்? அதற்கொரு பழங்கதை எம்மனேரால் தெரிந்துள்ளேன்.

---

[395-வது பக்கத் தொடர்ச்சி]

அவர் அநேக புத்தகங்கள் எழுதினர். அவற்றுள் சிறந்தது "குஜராத்தும் குஜராத்தியரும்" என்றதே. அவர் அநேகம் பத்திரிகைகட்குக் கட்டுரை எழுதிவந்தார். அவரே சொந்தமாக "இண்டியன் ஸ்பெக்டேட்டர்" (Indian Spectator) என்று மேற்கு இந்தியாவில் பிரதான பத்திரிகையை நடத்தி வந்தார். அக்காலத்தில் அவர் அநேக ஏழை மாணவர்களுக்கு உண்டி உடை, சம்பளம் முதலியன கொடுத்துதவினர்.

தன்னுடைய கியாதி ஓங்கி யிருந்தகாலத்தில் இதைவிட்டுத் தன்னுடைய காலம் முழுமையும் எழுதும் திறமையையும் தன்னுடைய வாழ்க்கையையும் ஆதரவற்ற பரிதாபமான இந்திய விதவைகள் நன்மைக்காகத் தத்தம் செய்து விட்டார். அவர் என்றென்றும் இந்திய சமுதாய சீர்திருத்தக்காரருள் மிகவும் மேலானவரென்றும், உண்மை உழைப்பாளி யென்றும் கருதப்படுவார்.

மாணவ சகோதரர்களே! இச்சிறிய உண்மைச் சீவிய சரித்திரத்திலிருந்து வறுமையால் வாடினும் முயற்சியுடன் முனைந்து கல்வித்துறையில் உழைத்தால் எவ்வளவு எளிய கேவலமான நிலையிலிருப்பினும், கல்வியினுல் நம் மலபாரியைப் போல் முன்னுக்கு வரலாம். நமது மித்திராசிரியரின் கல்வி ஊக்கத்தையும் உழைப்பையும் கியாதியையும், நாம் ஓர் எடுத்துக் காட்டாக வைத்துக் கொண்டு கல்வி பயில்வோம்.

குறிப்பு:—இது போன்ற சில உண்மைக் கதைகளை எனது மாணவ சகோதரர்களுக்குத் தொடர்ந்து மித்திரன் மூலமாக அறிவிக்கத் துணிந்துளேன்.



சிருஞ் சிறப்புஞ், செல்வமுங், கல்வியும், நீர் நிலவளப்பமும், நேர் வழி ஒழுக்கமும், தேர் வழி ஆலயம் தெளிவுள பக்தியும், ஆறொடு குளம் நதி அழகிய சோலையும், பேர்பெரு தானியம் பெரும்புகழ் ஊதியம் கூர்ந்திடு மறிவொடு கொண்ட சைவாகமம் பார்தனில் எங்கும் பரவிடவோங்கு அன்பொடு ஈகை அடக்கமின் சொல்லும், பொறையொடு நீதி பொருந்திய நாட்டிடைக் குடிவரக் காரணம் கூறுவேன் கேண்மின், அன்பர்களே! இத்தியாதி வைபவமுள்ள நமது நாட்டினிடமாகக் கபாலி மதத் தலைவன் நுழைய ஆரம்பித்தான். அப்பொழுது இந்நாட்டின் சைவாகம பக்தி சிரத்தையானது அவனை நாடவிடாது தடுத்தற்கேதுவாய வழியை நாட்டியது. இதனை யுணர்ந்த கபாலி எவ்விதத்தினும் இந்நாட்டில் நுழைய வேண்டுமென்ற மதமீறி அனேக பூதங்களைத் தனது வயமாக்கிக்கொண்டு ஊர்களுக்கப்புறம் கூடார மடிப்பதும், தனது பாவ நிவர்த்திக்காக அவ்வூர் அன்பர்களுக்கு அமுதிட வேண்டுமென்பதும், என்னால் இடப்பட்ட அமுதை ஊர் ஜனங்கள் ஒரு வேளையேனும் ஏற்றுக்கொள்ள எல்லைக்கப்புறம் என தில்லத்திற்கு எழுந்தருள வேண்டு மென்பதுமான சூட்சிகளைச் செய்து வயப்படுத்திக் கொள்ளுவான். இதனை அறியாத நமது மக்கள் அவனில்லத்திற்கு நேம நிஷ்டையுடன் அமுதருந்தச் செல்வார்களாம். அப்பொழுது கபாலி தனது கூடாரத்தில் இலைகளைப் பரப்பி ஒவ்வோரிலைக்கும் ஒவ்வோர் பூதத்தை நிறுத்தி இவர்கள் இலை யருகில் உட்கார்ந்த பின் பூதத்தை உச்சாடனஞ் செய்து இலையில் மது மாம்ச பக்ஷணங்களைப் படைப்பானும். இதனைக் கண்ணுற்ற பக்த சிரோன்மணிகள் திகைத்து மதிமயங்கித் திடீரென எழுந்திருக்க முயன்றால், இலை யருகில் மாய்கையாய் நிற்கும் பூதமானது இவர்களை அமிழ்த்திப் பயமுறுத்துகின்றதாம். பாவம் என்செய்வார்கள்? பயத்துக் கஞ்சிச் சிவருகளையும் சிந்திக்க நிலைதடுமாறி அக்கொடிய உணவை அருந்தித் தங்கள் தங்கள் சைவாகமங்களுங் கெட்டு வெளிவருவார்களாம். இவ்விதக் கொடுமைகளை ஒவ்வோர் ஊர்களிலும் பரவச்செய்து மக்களிடையே ஊன்றி நின்ற சைவாகமங்களையும் கெடுத்து விடுவானும். இப்படிச் செய்து வருபவன் நமது செங்குந்தத் தலைவர்கள் வாழும் ஊர்களுக்குச் சமீபத்தில் வர ஆரம்பிக்கையில், இவர்கள் சுத்த சைவாதி நீதி குன்றாதவர்களாயும் சூரபதுமராதிகளை வென்றவர்களாயு மிருப்பதால், கபாலியின் மனதும் அவனால் ஏவப்பட்ட பூதங்களும் நிலைகுலைந்து மதிமயங்கிக் கிடந்து விட்டனவாம். இதை உணரச் சக்தியற்றவனும் நாளடைவில் மனதைத் தேற்றிக்கொண்டு மையொன்று தயாரித்துத் தனது கையில் தடவிப் பார்த்தானும். அதில் நமது செங்குந்த மக்கள் வாழும் வீட்டின் நிலம்வகுத்து இருபுறத்திலும் ஒருபுறம் கணேசரும் மற்றொருபுறம் குமரேசரும் வீற்றிருந்தனரம்மா. இதனை யுணர்ந்த கபாலி நாளாவட்டத்தில் இவர்களை விசுவாசித்து எல்லோரையும் ஏமாற்றினது போலவே இவர்களையும் மதிமயக்கி மதுமாம்ச பக்ஷணங்களை உண்ணச் செய்துவிட்டானும். அதினுல் நமதுகுல அண்ணலராகிய கணேசரும் குமரேசரும் நமது மக்களின் வீட்டைவிட்டு அகன்றனராம். இவர்கள் கபாலி இடப்பட்ட மதுமாசம்சங்களை அருந்து முன்னமே நமது குலவண்ணலாகிய இருவரையும் நினைத்திருந்தால் கபாலியும் அவனால் ஏவப்பட்ட பூதங்களும் நாஸ்தி யாயிருக்கும்.

### வேதாந்த முடிவினும் சித்தாந்த முடிவினும் குடியை வெறுப்பதே தகுதியெனப் பிரமாணம் கூறியுள்ளார்.

அன்பர்களே, இக்கபாலி மதத்தினர் இந்நாட்டில் நுழைந்த பிறகுதான் நமது மக்களிடைக் கல்வி அறிவு ஊக்கம் அந்தஸ்து சக்தி விசுவாசம் சைவாகம ஆசார முறைகள் முதலியவற்றில் குறைவேற்பட்டுக் காட்டுத் தெய்வம் வீட்டுத் தெய்வம் காளி கூளி கறுப்பராயன் சங்கலிக் கருப்பன் சாமுண்டி பிடாரி பேச்சி பெத்தண்ணன் பெரியண்ணன் செல்லியாத்தா ஒண்டிமுனி சண்டிமுனி ஓங்காளி காத்தவராயன் மதுரவீரன் மக்காளி கருமுனி செம்முனி காட்டிருளன் மாடன் மல்லியாத்தா கோட்டை முனி குன்றுக்கருப்பன் வன்னிமாடன் மலையாள தெய்வம் மாரியாத்தா வனதேவதை என்னும் பலவித பூத பிரேதங்களை வைத்துக்கொண்டு அவற்றிற்கு வருடா வருடமும் மத்தியகாலத்திலும் ஆடு கோழி பன்றி எருமைக்கடா முதலிய உயிர்களைப் பலி யிடுவதும் கள்ளுச் சாராயங்களைக் குடங் குடமாகவும் புட்டி புட்டியாகவும் வைத்துப் படைப்பதும் கஞ்சாவினால் ரொட்டி சுங்கானீர் புகையுஞ் செய்து வைப்பதும், பின் இவைகளைப் பூதப்பிரேதங்களுக்கு ஆகுதிகொடுக்க ஆரம்பிக்கையில் இவர்களுக்குச் சுவாமி வந்து விடுகிறது. அன்பர்களே, கவனியுங்கள்: "ஏ நான் கொல்லிமலை விட்டுக் குதித்தோடி வந்தேன்டா; பொன்னுமலை விட்டு புறப்பட்டு வந்தேன்டா; தங்கமலை விட்டுத் தவித்தோடி வந்தேன்டா; மஞ்சாடு சோலைவன மேவுங் கருப்பன்டா; ஆலம்மரத்தடியில் அமர்ந்தாசு செய்தேன்டா; புங்கமரத்தடியில் பொருந்த வரசாண்டனடா; காளியுங் கூளிகளுங் கை கட்டி நிற்பரடா; பூதங்களென்னைப் புகழ்ந்து குதித்தா மடா; இப்படியாக இருந்தரசு பெருவேன்டா காட்டிருளன் மாடன் கடுஞ்சுடலைச் சாத்தானும் எட்டி லடங்காத இவனெனக்குக் காவலாடா; மட்டி லடங்காத மலையான தேவதையும் குட்டிகளு பேயினங்கள் கூடத் தொடர்ந்துவர வனவேட்டையாடி வருகின்ற வேளையிலே, அடே, நீங்களிட்ட ஆகுதிகள் நேராக நின்றதடா; கற்பூர வாடையங்கே கடுவனத்தைச் சூழ்ந்ததடா; வருந்தி அழைத்த சத்தம் வானம் பிளந்ததடா; பொருந்தி அழைத்த சத்தம் புவிவிளக்கக் கேட்டதடா எழுந்து நடந்தமடா எல்லோருமொன்றாக, கடு

கடந்ததினால் காலமர்ந்து போகுதடா; பூசைமுகம் காடிப் புறப்பட்ட எங்களுக்கு ஆடுகளுங் கோழிகளும் ஆண் சலவைப் பன்றிகளும் எமனேறும் வாகனமு மெங்களுக்குப். போராது; எழு குடங்கள்ளு மிருப்புட்டி சாராயம் கஞ்சாவின் ரொட்டிகளும் கனத்த புகைச் சுங்கானும் முன் பூசை போடுங்கடா. அதைக் குடித்து எப்பம் விட்டு அப்பா வரமளித்து உங்களுக்கு மலையேற வேணுமடா; வந்து வெகு நேரமாகுது; மந்திரியே மலையேறிப்போக வழி விடுங்கள் இன்னேர" மென்று ஓய்ந்துவிட்டு, மதுவைக் குடித்து மாம்சங்களை விலாப்புடைக்கத் தின்று காலில் சதங்கை அணிந்துக்கொண்டு சவுக்காலும் சாட்டையாலும் அடித்துக்கொண்டு பம்பை உடுக்கை பறைமேளத்தின் இசை தவறாது ஆட்டபாட்டங்களைச் செய்து அல்லோகல்லலோலமாய் ஆர்ப்பரித்துத் திரிகின்றனர். இவ்வித ஆர்ப்பாடங்களை மேலே கூறியுள்ள தேவதைகளுக்குப் பூப்போட்டிருக்கும் பொழுது எந்த நாட்டிலும் பிரத்தியக்ஷமாய் இன்றுங் காணலாம்.

இத்தகைய கபாலி மதத்தையும் அதின் கொள்கைகளையும் வேர் களைந்து நமது நாட்டின் மக்களைக் கல்வி அறிவு ஊக்கம் அந்தஸ்து பக்தி விசுவாசம் சைவாகம ஆசாரங்களில் நுழையச் செய்ய வேண்டுமானால், ஆண்மையென்ற இரதமேறி அறிவென்னும் வில் பிடித்துக் கருணையென்ற நாண் பிணித்துக் கல்வியென்னும் அம்புகளை எட்டுத் திக்கினும் மட்டுப்படாமல் ஆகாயம் பூமி அளாவ சந்து பொந்து மூலை முடுக்குகள்தோறும் 'கபாலி எங்கே? கபாலி எங்கே? அவன் கொள்கைகளெங்கே? எங்கே?' யென்று சரமாரி பொழிந்து இத்தகைய கொள்கைகள் என்றும் நமது நாட்டை எட்டிப்பாராதபடிச் சுட்டுச்சாம்பலாக்கி விட்டாலொழிய மற்றபடி கபாலியின் சூட்சியால் விளையும் கொடிய குடியைத் தவிர்ப்பது அரிதென்றுதான் உண்மையாகக் கூறுவேன். இதற்காக இந்நாட்டின் கல்விக் களஞ்சியங்களாயுள்ள அன்பர்கள் முயன்று எழுந்தார்களேயானால், கண்மூடி விழிக்குமுன் கபாலி மதமும் அவன் கொள்கைகளும் மாண்டுவிடும். மற்று அவர் எழுவது அடங்கித் திகைப்புக்கிடமாகி விடும். எப்படியெனில் கல்விக் களஞ்சியங்களுடைய அம்புராப்பொதியானது அர்ச்சுனன் அம்புராப்பொதிக்குச் சமானமாகும்; மற்றவர் அம்புராப்பொதி அஸ்வத்தாமன் அம்புராப் பொதிபோல் சமயத்தில் வறண்டுவிடும். அர்ச்சுனருக்கு அப்படி ஒருகாலமும் வறள்வதில்லை. அன்பர்களே, விஷயம் இப்படி யிருக்க? நமது ஜார்ஜ் மகிபரும் சட்டசபை மெம்பர்களும் என் செய்வார்கள்? அவர்களைக் குறைகூறுவதில என்ன லாபம்? அவர்களியற்றும் சட்டதிட்டங்களுக்கு அஞ்சிக் குடியர்கள் சத்தியத்திற்கஞ்சிய சர்ப்பம் போல் இருக்கின்றனர். இல்லையேல் இவர்கள் இருக்கும் ஊரில் நல்லோர் குடியிருப்பதே நடுக்கத்திற் கிடமுண்டாகுமெனக் கூறலாம். கபாலி மதக்கொள்கையால் விளையுங் குடியும் அதன் கொள்கையும் கல்வியென்னும் அம்பினால் கருக்கவேண்டுமே யொழிய. மற்றெதினாலும் வெல்லுவதரி தென்பது உண்மை,

இதன்மேல் குடியால் விளையும் கேடுகளையும் கூர்ந்து கவனிப்பீராக:—

அன்பர்களே! மனிதனென்றுள்ள அங்கத்தின் கண் மெய், வாய், நாவு, நாசி, கண், காது, குதம், குய்யம், மனம், புத்தி, சித்தம், அறிவு பகிர்வாசயம், அமர்வாசயம், மலவாசயம், சலவாசயம், சுக்கிலவாசயம், நுரையீரல், ஜீரணக்கருவி, இரத்தப்பை, பித்தப்பை, சுவாசப்பை, சிறுகுடல், பெருங்குடல், தலை, மூளை, நாடி, நாம்புகள் முதலிய அவயவங்களைக் கெடுத்து ஒளி மழுங்கச் செய்து அதனதன் தொழிற்களையும் மாற்றி வைப்பதுடன், சிறுத்தல், பெருத்தல், இருத்தல், நடத்தல், படுத்தல், உண்ணல், உறங்கல், விழித்தல், வளர்தல், என்னும் இதற்குக் காரணமாய் உள்ள சப்த தாதுக்களையும் வாதபித்த சிலேத்தும மென்னும் தொழிற் கருவிகளையும் சுபாவ உணர்ச்சிகளையும் மாற்றி வைப்பதற்கும் கெடுப்பதற்கும் கொடிய குடியை அன்றி வேறெதுவுமே இல்லை யென்று உண்மையாகக் கூறலாம். எவ்விதமெனில் குடியால் மெய் சோர்ந்து விடுகிறது; வாய் வறளுகிறது; நாத் தடுமாறுகிறது; நாசி காகரத்து வாசனை யற்றுத்தூருகிறது; கண் கிருகிருத்து விழி பிதுங்கிச் சிகப்பேறுகிறது; காது இன்சொற்களற்று அடைக்கச் செய்கிறது; குதம் தன்னால் மலத்தை வெளியாக்குகிறது; குய்யம் நீரை அதிகப்படுத்துகிறது; பகிர்வாசயம் நடுக்கமுற்று உமட்டுகிறது; அமர்வாசயம் அழுக்கேறுகிறது; மலவாசயம் நாற்ற மதிகரித்துக் கிருமி உற்பத்திக்கு இடமாகின்றது: சலவாசயம் தளர்ந்து விடுகிறது; சுக்கிலவாசயம் நீர்த்துவிடுகிறது; நுரையீரல் பெருத்துப் புளிப்படைகிறது; ஜீரணக்கருவி அசைவற்று விருத்தி குறைகிறது: இரத்தப்பை விரிந்து துர்நீர் சேர்கிறது; பித்தப்பை சுவரிசிரசிற்கேறி மூளையைக்கலக்குகிறது; சுவாசப்பை பெருத்துப் பெருமூச்சடைகிறது; சிறுகுடல் பெருங்குடல் கொதிப்பேறி அதனுள் அடங்கியுள்ள ஆகாரத்தைக் கலங்கச்செய்து நாளடைவில் சுருங்கி அக்கொதிப்பை அஸ்திக்கேறச் செய்கிறது; நாடி நரம்புகள் தளர்ந்து கலகலத்து விடுகின்றன; சிறுத்தல், பெருத்தல், இருத்தல், நடத்தல், படுத்தல், உண்ணல், உறங்கல், வளர்தலுக்குக் காரணமாயுள்ள சப்த தாதுக்களையும் வாத பித்த சிலேத்தும மென்னும் தொழிற் கருவிகளையும் ஒன்றுக்கொன்று பேதப்படுத்திப் பலவித நோய்க்கிடமாக்குகிறது. அன்பர்களே! மனிதனென்றழைக்கப்படும் அங்கத்தினிடமாக இத்தியாதி கொடுமைகளைச் செய்துவிட்டு இன்னும் என்ன செய்ய ஆரம்பிக்கிறது? அன்பர்களே! கவனித்து இக்கொடிய குடிப்பழக்கத்தை அறவே ஒழிக்க முயர்சிசெய்யும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். கவனியுங்கள்: கண் விழித்துப் பாருங்கள். இக்கொடிய



குடியானது மனிதனைப் பள்ளமென்றும் மேடென்றும், குழியென்றும் குன்றென்றும் தண்ணீரென்றும் சாக்கடை யென்றும், காடென்றும் குப்பையென்றும், கல்லென்றும் முள்ளென்றும், கட்டுத்தறை முற்றமென்றும் பேதந்தெரியாமல் பிணம் போல் சாய்ந்து கிடக்கச் செய்கிறது; தான் வேறு துணி வேறுமாகிச் சகல புலன்களிலும் ஈ எறும்பு நுழைவதுந் தெரியாமல் தனக்குத்தானே பேசிக்கொண்டு தடம்வழி நடப்பவர் காரி உமிழ்ந்து தூற்றும்படி செய்கிறது; நுண்ணறி விழந்து வாய் மதம் பேசி வழி யலப்பதினால் நூஸன்சு கேசுகளுக்கு அகப்படுத்துகிறது. ஊரென்றும், உறவென்றும், உற்றார் பெற்றோரென்றும், பெண்டு பிள்ளைகள் பெரியோர் சிறியோரென்றும், பேதந் தெரியாமல் கண்டபடி பிதற்றிக் கால்மாடு தலைமாடாய்க் காமப்பற்று வார்த்தைகளைப் பேசித் தில்லால டோமரி தெம்மாங்கென்னும் பாக்களைச் சரமாரியாய்ப் பொழிந்து, தண்டு முண்டு சண்டைகள் விளைவித்துத் தன்னகந் தெரியாத் தானத்தில் ஆழ்த்தி விடுகிறது. புலையருக்கேனும் பொய் சாக்ஷிகூற இரண்டணா நாலணா எதிர்பார்ப்பதும், வழி பறித்துண்ணவும் சதியென்னும் கொலைபாதகஞ் செய்யவும், கன்னங் களவுகளைக் கருதவும், கசடர் சண்டாளர்களை விசுவாசிக்கவும் குடியென்பது வழிகாட்டித் தருகிறது; இன்னும் தனது சொத்துச் சுகம் வேஷ்டி சேலை நகை பாத்திரம் வீடுகளையுங்கூட எளிய தொகைக்கு அடவு வைத்தோ அல்லது விற்றோ தொழிலற்றுத் தூக்கமின்றி ஆகாரம் வெறுத்துச் சூதென்னும் எட்டுச் சீட்டுப் பூராக் கட்டுந் தொழிலை விரும்பச் செய்கிறது; அதினால் அளவற்ற துன்பத்திற்கும் ஆளாக்கி விடுகிறது. இன்னும் குலவொழுக்கத்திலும் கூட்டுறவு வியாபாரத்திலும் நம்பிக்கையின்றி நாசமாக்கி விடுகிறது. அழகு, அன்பு, ஆசாரம், தொழில், ஈகை, அடக்கம், இன்சொல், பொறுமை, கல்வி, அறிவென்னு மிவைகளைவிடுத்து, ஆணவம், மலம், காமக்குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடம்பம், ஆங்கார மென்னும் இவைகளை விருத்தி செய்கிறது. அன்பர்களே! துர்க்குணங்களை விருத்தி செய்யும் நாசகாலக் குடியால் மயங்கித் திரியுங் குடும்பங்களைக் கவனிப்போமானால், அதில் பெண்டுபிள்ளைகள் உடுக்கத் துணியற்று உண்ண உணவின்றி நகை நாணைய பூணுதிகளின்றி நாணமுற்றுத் தொழிலற்றுக் கல்வி குன்றி அழகும் ஐஸ்வரியமும் போய் நோய்வாய்ப்பட்டு நலிந்து நாகரீகமற்று ஏங்கிக் கிடக்கும் பெண்டு பிள்ளைகளைக்கண்டால், எவர்தான் கண்ணீர் வடிக்காதிருப்பர்? இவர்கள் எங்ஙனம் உணர்வேற்பட்டு உலகத்தின் முன்னேற்றத்தைக் கருதி உழைப்பதற்கு ஊக்கத்துடன் வெளிக்கிளம்புவர்? இவர்களுக் கறிவெங்கே? ஆர்வமெங்கே? திடபுத்தியெங்கே? தேசபக்தி யெங்கே? சைவாகம நீதியெங்கே? சமயவொழுக்க மெங்கே? கவனியுங்கள். கண் விழித்துப் பாருங்கள். கல்வியென்னும் அம்பைக் கையோயாமல் பிரயோகியுங்கள். கபாலிமதக் கொள்கையாம் மிகபடு, வஞ்சகம், சூது, கொலை களவு, காமம், பொய் இவைகளைக் கண்டவிடமெல்லாம் சுட்டுக் கருக்கிச் சாம்பலாக்கிச் சுடர், விட்டோங்கும் நமது தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தலைவர்களாம் செங்குந்த சிலர்களுக்குப் பாத காணிக்கையாக வைத்து, மித்திரன் ஆசிரியர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ. எல். டி. அவர்களின் அன்பினின்றொழுகும் நீரைக் கறந்து அபிஷேகித்துத் திரு. பி. சே. மாணிக்கப் பெருந்தகையாரின் மனம் பூத்த விபூதியைப் புனைந்து, சபாபதி வள்ளலாரின் கருணை மிகுந்த கர்ப்பூரங் கொளுத்தி முதல் மகா நாட்டிற்குத் தலைமை வகித்த திரு. முத்தைய முதலியாரின் மொழிகளையே பாசுரம்பாடி எங்கும் புகழ் தங்கும்படி இடை விடா முயற்சியால் நாமெல்லோரும் மித்திரன் தலைப்பில் அமைந்துள்ள பிரபல குந்தத்தைப் பின் வாங்காது ஆராதனையாற்றிப் பணிவோமாயின், கர்ண கடூரமாகிய கொடுஞ் செய்கைபுரியும் கபாலி மதக் கொள்கையென்னுங் குடியானது கருவற்று மாண்டு விடுமென்பதில் ஐயமின்று.

அன்பர்களே, இன்னுங் கொடிய குடி யாது செய்கிறது? உண்ணப்பட்ட உணவுகளில் பாய்ச்சி பல்லி ஈ எறும்புகள் கிடப்பினும் அறியாதருந்தச் செய்கிறது; களங்கமற்ற பந்து ஜனங்களைக் கட்சிப் பிரதி கட்சியாக்கிறது; நியாயங்களை லஞ்சத்தின் பேரில் தீர்ப்புச் செய்து மனஸ்தாப முண்டாக்கிறது. குடிக்கப் பணங் கொடுப்பவனைக் குலத்திற் சேர்ப்பதும் அஃதில்லாதவனைப் புறம்பாக்கவுஞ் செய்கிறது. ஊர்ப் பொதுப் பணங்களையும் உற்சவ வரிப்பணங்களையும் குடிக்கிரைத்துவிட்டுக் கோலாகலமாகிய நோன்பை முடிக்கிறதுந் தவிரப் பொய்க் கணக்குக்கும் பொருமை வார்த்தைக்கு மிடமாக்குகிறது. காத வழியேனும் வேகமான கள் விற்கிறதென்றால், எத்தொழில்களையும் விடுத்தேகச் செய்கிறது. குடிப்பதற்கென்று இரண்டணா கொடுத்து விட்டால், அவனிடம் தன் குலம், தொழில், பெருமை, வீரம், அந்தஸ்து, பொருள் வருவாய், இருப்பு, பெண்சாதி பிள்ளைகளின் யோக்கிதை, கொடுத்தவிடம் கட்டினவிடம், தன் பிழைப்பு சம்மந்தி பிழைப்பு, வீட்டில் சமைக்கும் சாதம் கறிகாய் குழம்புகள், மனைவியை அடித்து மன்றாடுவது, அவளிடம் மருவிச் சுகிப்பது, உற்றார் பெற்றோர் உறவு பகை, ஊரில் நடக்கும் சமாச்சாரங்கள், தான் பிறவிமுதல் செய்துவந்த ஞாயம் அநியாயம், இனிமேல் செய்யப் போகுங் காரியங்கள் யாவுங் கூசாமல் சொல்லுதற்கு இடமாகிறது. வெறி மீறினால் தாயென்றும் தமக்கை யென்றும் பிள்ளை யென்றும் பிறர் மனைவி யென்றுந் தெரியாமல் மாற்றி விடுகிறது. பலவந்தத்திற்கேனும் சண்டையிட்டு வல்லோரிடத்தில் உதைபடச் செய்கிறது. இருட்டுச் சாமத்திலும் எங்கும் பயமின்றி, சந்து பொந்து மூலை முடுக்குகளிலும் அறிவின்றி வெறி நாய் போல் அலையச்செய்கிறது. சில சமயங்களில் வீட்

டில் சமைத்துள்ள அன்ன பளுதிகளையும்பாத்திரத்துடன் வெளியே கொண்டு வந்து உடைக்கச்செய்கிறது. மலமூத்திராதிக்ளும் வேஷ்டி துணி தேகங்களில்ஆகிறதுந் தெரியாது தெருவிலேனும் வீட்டிலேனும் வாந்தி செய்து கிடக்கச் செய்கிறது. பெண்டு பிள்ளைகளை அடிப்பதும் பேசுவதுமாக வீட்டில் பெருங் கலகத்தை விளைவிக்கின்றது. தனது மேனியில் காயம் படுவது கால் கை பிசகுவதுந் தெரியாது கலகம் விளைவிக்கிறது. அன்பர்களே, இத்தைய கொடூரஞ் செய்து விட்டு இன்னும் என்ன செய்கிறது கவனியுங்கள். குறைவற்ற மேனியில் குட்டநோய் குறைநோய் எலும்புருக்கி எங்ககாசம் அதித்சார அன்னத்துவேஷம் அழுகக் கட்டி சொறி சிரங்கு சோம்பல் பல வீனம் பல் நோய் ஈறு கரைதல் கண்ணொளி மங்கல் கைகால் ஓய்தல் சோகை முதலிய நோய்களால் தாழ்ந்து ஊர்ந்து செல்லும் நிலையில் ஈ எறும்புகள் மொய்க்கப் பார்த்தவர்கள் நகைத்துப் "பாழில் கிடந்தவன் செய்த அக்கிரமம் விடுமா? பழனியாண்டவன் நேருக்கு நேர் காட்டி விட்டானல்லவா? கொஞ்சமான ஆட்டம் ஆடினை? அனுபவிக்கட்டு" மென்று தூற்றச் செய்கிறது. இத்தகைய நோய்களானவை பண்டிதர் பரீக்ஷிக்கும் மருந்துக்குங்கூட அசைவதில்லை. மனிதருருவைக் கெடுப்பது பாம்பின் விஷமும் பாஷாண மருந்துகளுமென்பர். இஃது குடியால் விளையுங் கேடுகளுக்குக் கோடியி லொருபங்கிராதெனக் கூறலாம். எப்படி யெனில், விஷ பாஷாண மருந்துகளின் வேகத்தைத் தலை மூலிகையினுல் வென்றுவிடலாம்; குடியால் விளையுங் கேடுகளை வெல்லுதற்கு மருந்தில்லாது மயங்குகின்ருேம். ஆனுல், அதினுல் உண்டாகும் நோய்கள் சில நிவர்த்தியா மென்ருலும், மறுபடியுங் குடித்தாலதுவுமியலாது. ஆனுல் மற்றையோருக்கு இவ்வித நோய்கள் வருவதில்லையோ வென்று சந்தேகிக்கலாம். இல்லை, இவன் புனர்ஜன்மத்திலேனு மிகக்கொடிய பாவத்தைத் தரும் குடியை விரும்பி யிருந்தால்தான் இந்த ஜன்மத்தில் அனுபவிக்க வேண்டி வருமே யொழிய வேறில்லை. பொய் கொலை களவு காமத்தினுல் வருமென்னும் அதுவு மிகக் குடியின் பாவத்திற் கிணையில்லை யென்றே கூறலாம். உதாரணமாகப் பாருங்கள், குடியை யொழிக்க வேண்டுமென்று உலகத்தில் எத்தனை கோடி மக்கள் பாடுபடுகின்றனர்? கொஞ்சமேனும் நசிந்துளதா? இல்லை. விருத்தியடைந்து கொண்டேதான் வருகிறது. என்? அஸ்வத்தாமனைப்போல் முளைந்து விழுந்துவிடுகின்றனர். அருச்சுனனைப் போல் எக்கமற்ற மனதும் என்றுங் குறையாத அம்புராப் பொதியும் பெற்ருரில்லை. அப்படியிருந்தா லிக்கொடிய குடியைச் சுட்டு எரிக்கலாம். அது தான் இதற்கு என்னுல் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துமாகும். ஆனதால் மேலே காட்டியபடி இரதத்தைப் பூட்டி முனைந்து கல்வியென்னும் அம்பைக் கூசாது விடுக்கும்படி விரும்புகிறேன். அரசாங்கத்திலும் இதற்குத் தகுந்த ஆதரவு அளிப்பாரென நம்புகிறேன். குமரன் துணைபுரிவாராக. காம் புண்டோன் சிறியகுலம்; கனியுண்டோன் பெரிய குலம்; மணியுண்டோன் பிர்மகுலம் மஹா முத்த ஜீவகமே.

---


# கண்கட்டு வித்தைகள்

## நான்கு பாகங்கள் ரூ. 2

கண்கட்டு வித்தையால் கற்பம், வசியமும், கொள்ளை, சொக்குத்தூள், குறிசொல்லு மூலிகை, புருஷவசியமுதல், ஸ்திரீ வசியமும், வரிசை வழங்குதல், வாத்தியஜாலம், மூலிகை ஜாலம், மோகனஜாலம், தீவர்த்திஜாலம், மயேந்திரஜாலம், மாம்பழஜாலம், சமுத்திரஜாலம், சங்கிலிஜாலம், அமேத்தியஜாலம், அக்கினிஜாலம், வாத்தியஜாலம், மாடன் மந்திரம், எக்காளைஜாலம், எலுமிச்சைவித்தை, கோகர்ணஜாலம், நவில் ஜலஸ்தம்பனம், பத்திரகாளி வசியம், செப்பிடுவித்தை, பாதாள அஞ்சனம், பார்வைமை, குறிசொல் இத்தனை ஜால வித்தைகள் கற்கலாம.

தி ஸவுத் இந்தியன் புக் டிபோ, நெ. 17, பவழக்காரத் தெருவு, சென்னை.







158593

## செங்குந்தமித்திரன் புகழ்க் கும்மி

[திரு. நா. குமரகுரு முதலியார், தமிழ்ப் புலவர், கலியாணம் பூண்டி]

(1) கும்மியடிப் பெண்கள் கும்மியடி உடல்
குனிந்து நிமிர்ந்து கும்மியடி
நம்மையாளுஞ்சிவ கண்முகதேவனை
நாடிக்கும்மி யடியுங்கடி

(2) வீரவாகுதேவர் சந்ததியாரென்று
மேதினிஎங்குமெய்ப் பேரோங்கும்
தீரனுங்கூத்தரின் ஓர்கலையம்சத்தின்
செங்குந்தமித்திரனைப் பாருங்கடி (கும்மி)

(3) இத்தரையில்மிக நித்திரைசெய்திடும்
இனத்தவர்தம்மை எழுப்பிடவே
சித்திரமாககம் சென்னைஉதித்தெழும்
செங்குந்தமித்ரனைப்போற்றிடுவோம்(கும்மி)

(4) மாதமுதல்வெளி யாகியே நங்குல
மாந்தரைச்சந்தோஷப்படுத்திச்
சீதமதியென நல்லறிவூட்டிடும்
செங்குந்தமித்திரன் சீருரைப்போம்(கும்மி)

(5) பாரில் பருத்திப் பயிராக்கிப் பஞ்சைப்
பக்குவமாய்க்கொட்டி ராட்டினத்தில்
சீருடனூற்றுடை லாக்கியுடைநெய்யும்
சேதியறிவித்த மித்திரனே (கும்மி)

(6) அன்னியர்நாட்டை எதிர்பாராவணம்
ஆடையாதிசரக் காக்கிடற்கும்
உன்னதநன்னிலை என்றுநாடெய்தவும்
ஓதிடவந்தநம் மித்திரனே. (கும்மி)

(7) பர்மா, காசி, பரிவி நாட்டார் மணி
பத்திரிகைவாங்கியே படித்து
ஜெர்மா வளர்க்கும் வகையறிவிக்க
சீக்கிரம்வந்த நம்மித்திரனே!

(8) கொல்லாவிரதங் குவலயத் தோங்கக்
குறித்த பெரியோர் குதூகலிக்க
வெல்லாரும் புலால் மாமிசமின்றுவிட்
டிஷ்டராவீர்! என்ற மித்திரனே!

(9) கஞ்சாவபினிக் கள்ளுசாராயமுங்
கணவருண்ணுமைக் கண்டித்துப்பின்
னிஞ்சொல் கூறிமிகுந்த பொற்காசினை
யண்ணிடற் கேற்ற இம்மித்திரனே

(10) மக்களைப் படிக்கவைத்திடுவீர்! சுசி
வன்மையறிவு புகட்டிடுவீர்!
இக்கணம்பம்பாயி னேந்திழையர் போல்வீ
ரென்றுரைக் கவந்த மித்திரனே!

(11) பாரதமாதர்கள் கல்விபயின்றறும்
யாலரை நாதனைப் பல்வகைநற்
சீரதணித்துறை பற்றொழில் செய்திடச்
செப்பிடவந்த நம் மித்திரனே!

(12) மங்கைரிங்கிதந் தங் கிடினுங்கண்
மணாளன் மகவுமவா றெனவே
செங்குந்த மித்திரன் சீருக்கொண்டுமே
சென்னையில் தோன்றல் சிறப்புடைத்தே

(13) மாலைப்பொழுது மறைந்து மதியமும்
வானத்தெழுந்து மிருள கலாக்
காலைப் புனிதக் கதிரெழுந்தானுங்
கணவர்க்குரைசெயுங் கன்னியர்காள்!

(14) வீரர்மனைவி நாமெய்யாகில் முன்
விரத சுகிர்தம் பலிப்பாகில்
பாரிலாறுலட்சம் பேருமொரு மிக்கில்
பட்சமாய் வாழலாம் பாக்கியரே!

(15) தென்னிந்திய சென்னை செங்குந்தர் சங்கமும்
தேசிகர் வாழி! தினம் செலவாம்
பொன்னிந்தாரு மென்று வகையினீந்தவர்
பூவினில் வாழி! புகழ் மிகவே! (கும்மி)

# செங்குந்த யாத்திரைவாசி

(369-ம் பக்கத் தொடர்ச்சி)

## தருமராஜன் விசாரணைப் படலம்

வீர:—(ஆத்திரத்தோடு எழுந்து, தம்பிமாரை நோக்கி, ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி,) முன்னர்த் தருமராஜனை வரவழைக்க வேண்டும். நாரதரே! விசாரணை முடியும் வரையில் இவ்விடத்திலேயே இருக்கவேண்டும்.

நார:—நன்றாயிருக்கிறது! நான் போவேனா விசாரணை முடிகிறவரையில்!

அறுமுகப் பெருமான் திருக்குறிப்பை அறிந்த ஒரு பூதகணத் தலைவன் தென்திசை நோக்கி ஓடினான். சில நிமிஷங்களுக்குள் கோர தந்தங்களும் பயங்கரமான பெரிய மீசையும், காம்பீரமான தோற்றமும், சுருசுருப்பும் உடைய ஒரு கரிய பெரிய உருவம் குமாரக் கடவுள் திருமுன் தோன்றி வணங்கி நின்றது. இவ்வுருவமே தருமராஜனாக இருக்கவேண்டும் என யான் யூகித்துக்கொண்டேன்.

முரு:—இனி, கேட்கவேண்டியவற்றைக் கேட்கலாமே.

வீர:—ஐயா, தருமராஜனே! யாம் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதில் கூறவேண்டும்.

தருமராஜன்:—என் தாதையின் பகைமையைத் தகர்ந்த தயாளுவே! அவ்வாறே காத்துக்கொண்டிருக்கிறேன்.

வீர:—பூலோகத்தின் திருமுகம்போல் விளங்கும் தென் தமிழ் நாட்டிடைச் செங்குந்தர்கள் என்ற ஓர் இனத்தவர் இருப்பது உனக்குத் தெரியுமா?

தரும:—வீரர்கள் போற்றும் வீர! உப்பிட்டவர்களை உள்ளவரையில் மறக்கலாமா? திருச்சீரலைவாயில் பெருமானும் தாங்களும் பூதகணங்களோடு சென்று தங்கியது முதலாக எண்ணிறந்த போர்க்களங்களில் அடியேனுக்குப் பெருவிருந்தளித்தோர் செங்குந்தரன்றோ? அன்னவரை யான் எவ்வாறு மறக்க இயலும்? 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்னும் மறைவாக்கை யான் மறப்பேனா!

வீர:—அச் செங்குந்தர்களுள் சென்ற 50 வருஷங்களாக நரகத்திற்குச் சென்றவர்கள் எத்தனை பேர் இருக்கும்?

தரும:—எண்ணிக்கை அதிகமாயிருக்கிறபடியால் உடனே சொல்ல இயலாது. வருஷா வருஷம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதோ சித்திர குப்தனைக் கணக்கோடு தருவிக்கிறேன்.

தன் பின்னே நின்ற ஒரு கோர உருவத்தை நோக்கினான். அவன் 'இதோ வந்துவிட்டேன், சாமி' என்று சொல்லிக்கொண்டே ஓடினான்.

வீர:—(முக வாட்டத்தோடு) காரணம் என்ன?

தரும:—சில வருஷங்களுக்கு முன் செங்குந்தர்களுக்கும் அஞ்ஞானமென்னும் ஓர் வல்லரக்கனுக்கும் யுத்தம் நடந்தது. அநேக இடங்களில் ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிட்டார்கள். கடைசியாகச் செங்குந்தர்கள் முறியடிக்கப்பட்டார்கள். படவே பகைவன் எல்லாச் செங்குந்தர்களையும் பற்றிச் சிறையிலிட்டு அடிமைகளாக்கினான். பின்னர் ஆங்காங்கு சிறைப்பட்டுள்ள அடிமைகளையெல்லாம் ஒருங்கே கூட்டி அவர்களோடு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள முயன்றான். செங்குந்தர்களும் அதற்கிசைந்தார்கள். உடன்படிக்கைப் பத்திரத்தை ஜெயித்தவனே தன்னிஷ்டப்படித் தயாரிக்கவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. அப்பத்திரத்தில் எல்லாச் செங்குந்தர்களும் கையொப்பமிட்டார்கள்.

வீர:—அப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகள் யாவை?

தரும:—அதன் முக்கியாம்சங்கள் பின்வருமாறு:-

1. இன்று முதல் நாங்கள் எங்கள் பிள்ளைகளைக் கல்வி கற்க விடுவதேயில்லை.

2. இன்றுமுதல் நாங்கள் எவ்விடத்திலும் ஒற்றுமையோடு வாழ்வதில்லை. யாதாமொரு காரணத்தால் ஒன்றுபட்டாலும், உடனே பல கக்ஷிகளாகப் பிரிந்துவிடுவோம்.

3. எங்கள் மூதாதையராகிய நவவீரர்கள் ஏற்படுத்தி வைத்த நாட்டுத் திட்டங்களை இன்றே தகர்த்தெறிவதோடு, நாட்டாண்மைக்காரர்களுக்கும் பெரியோர்களுக்கும் அடங்கி நடக்கமாட்டோம். எங்களில் நாட்டாண்மைக்காரர்களாயுள்ளவர்கள் பொது நலத்தை அடியோடு விட்டுவிட்டுச் சுயநலப் பூணையே பூண்டு கொள்வோம்.

4. பிற இனத்தவர் எவராயினும் கௌரவப்படுத்துவோம். ஆனால் எங்களினத்தவர் மேலான தகுதி வாய்ந்தவராயிருப்பினும், அவருக்கு எங்களால்இயன்றவரையில் கெடுதியையே செய்து அகௌரவப்படுத்த எங்கள் முழு பலத்தையும் உபயோகிப்போம்.



(சபையிலுள்ளோர் அனைவரும் கைதட்டி நகைத்தார்கள். நவவீரர் மீசைகள் துடித்தன. வீரவாகுதேவர் வெட்கத்தால் தலை குனிந்தார்.)

5. ஊரிலோ நாட்டிலோ பல்லினத்தவர் சம்பந்தப் பட்ட பொதுக் காரியங்களில் நாங்கள் தலையிடுவதே இல்லை. பிற இனத்தவர் சொல்லைக் கனவிலும் தட்டமாட்டோம்.

6. கோயில்லா ஊரில் ஒரு நாளும் குடியிருக்கமாட்டோம். கோயில் சம்பந்தமாகவே பெரும்பாலும் எங்கள் கக்ஷிகளையும் சண்டை சச்சரவுகளையும் உண்டாக்கிவரிவைத்துப் பணம் வசூல் செய்து ஆயிரக்கணக்காகச் செலவிடுவோம். சிவாலயங்கள் மூலமாக எவ்வளவு பாவத்தைத் தேடிக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் தேடிக்கொள்வோம். அன்றியும் தனித்தனி நபர்களுக்கு உண்டாகும் மனஸ்தாபத்தை முன்னிட்டே கக்ஷிகள் உண்டாக்கி ஊர் முழுதும் கெடுப்போம்.

(சபையோர் மறுபடியும் கைத்தட்டி நகைத்தார்கள். பிரளயகால ருத்திரனைப்போல் விளங்கிய வீரதேவர்—"போதும்; போதும். நிறுத்தும். பிறகு நடந்தவற்றைக் கூறும்.)

தரும:—செங்குந்தர்கள் அன்றுமுதல் உடன்படிக்கைப் பிரகாரம் சிறையினின்று விடுபட்டதைத் தவிர அடிமைத் தனத்தினின்று எவ்விதத்தினும் விடுபட்டாரில்லை. ஆகையால் அவன் ஏவியவாறு சிவாபராதம், குலத்துரோகம், உயிர்க்கொலை, மதுவுண்ணல், அற்பத்தனமான சுயநலச் செய்கை முதலிய மகத்தான பாபங்களைச் செய்து வருகிறார்கள்.

வீர:—சிவாபராதம் செய்கிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளவே மாட்டோம். கோயிலில்லாவூரில் செங்குந்தர்கள் குடியிருப்பதுண்டா? அவர்கள் தொண்டாற்றாத சிவாலயங்களும் உண்டா?

தரும:—கோயிலில்லா ஊரில் குடியிருப்பதில்லை என்பதும் உண்மைதான். சிவாலயத்தொண்டும் அடியார் தொண்டும் செய்கிறார்கள் என்பதும் உண்மைதான். பயனென்ன? அவை யாவும் யானையுண்ட விளாங்கனியையே ஒக்கும். கோயில்களின் அருகே வசித்துச் சிவாபராதத்தையே தேடிக்கொள்ளுகிறார்கள். பாபம் அதிகரிக்கிறது.

வீர:—செங்குந்தர்கள் பரிபாலனத்தில் இருந்து வரும் கோயில்கள் எத்தனை?

தரும:—எண்ணிறந்தன. அதனால்தான் அவர்களுக்குப் பாபம் பெருகுகிறது.

வீர:—நீர் பேசுவது விளங்கவில்லை கலியுகம் ஏற ஏற உமக்கும் அதன் வாசனை அடிக்கிறாற்போலிருக்கிறது. கோயில் பரிபாலனத்தால் பாபம் பெருகுமா? ஈதென்ன விந்தை வருஷந்தோறும் கோயில்களுக்காக எவ்வளவு செலவு செய்கிறார்கள் தெரியுமா?

தரும:—தங்கிய புகழ்பெற்ற வீரர் தம்முள் தானே முன் எண்ண வரும் தலைமையாளா! தங்களைப்போன்ற பெரியோர்கள் கடாக்ஷமிருக்கையில் கலி என்னை எவ்வாறு பீடிக்கும்? அவ்வாறு ஒருகால் நிகழுமேல் அந்நாளே எனக்கு அவதிநாளாகுமன்றோ? என் ஆசனத்தின் மேலும் கீழும் இருப்பது மயிரில் முடிந்த மலையும், அக்கினி யாறுமன்றோ? உதாரணத்தோடு கூறுகிறேன் தயவு செய்து கவனித்துக் கேளுங்கள்.

செங்குந்தர்கள் சிவபரம்பரையினர் என்றும், சிவபக்தர்கள் என்றும், சூரன் வல்லான் முதலியோரை வென்றவர்கள் என்றும், கட்டுப்பாடுடையவர்கள் என்றும் பலவிதமாகத் தங்கள் பழம்பெருமைகளைப் பேசித் தங்களைத் தாங்களே மேன்மையானவர்கள் என்றும் எண்ணி மனப்பால் குடிக்கிறார்களேயொழிய, அவற்றுள் ஒன்றையாவது இப்போது அவர்களிடத்தில் காண முடியாது. யாராவது குற்றங்களை எடுத்துக் காட்டி அவற்றையொழித்துச் சீரடையுங்கள் என்று சொன்னால் புளியங்காய்க்குப் புளிப்புக் குத்தவேண்டுமோ? 'எங்களுக்கு இதுவரையில் இல்லாத பெருமையை இனி உண்டாக்கப் போகிறீரோ' என்று மௌடீகமாகப் பேசி மனப்பால் குடிக்கிறார்கள்.

வருஷந்தோறும் ஒவ்வொரு கிராமத்திலும் கடவுள் பெயராலும் கோவில் பெயராலும் நூறு நூறாகவும், ஆயிரம் ஆயிரமாகவும் வகையறியாது செலவிடுகிறார்கள். இதனால் பூலோகத்திலாவது பெருமையடைகிறார்களா? அதுவுமில்லை.

## சிவகைங்கரியப் படலம்

ஒரு செங்குந்த கிராமத்தில் சிவபெருமான், அறுமுகப் பெருமான், ஐங்கரப் பெருமான் ஆகிய மூன்று மூர்த்திகளுக்கும் கோயில்கள் தனித்தனியே இருக்கின்றன. கோயில் இறைவனை வணங்க வரும் யாவருக்கும் பொதுவான இடம். இம்முறைப்படிச் செங்குந்தர்கள் பரிபாலனத்திலுள்ள இக் கோயில்களுக்குப் பிற இனத்தவரும் சென்று வழிபாடு அபிஷேக ஆராதனை முதலிய செய்வதுண்டு. ஆனால் ஒருகக்ஷிச் செங்குந்தர் கோயிலுக்கு மற்றொரு கக்ஷிக் கோயிலைச் சார்ந்த செங்குந்தன் போகக்கூடாது. இதுமாத்திரமா! மேற்கூறிய மூன்று கோயில்களுள் விநாயகர் கோயிலுக்கும், முருகர் கோயிலுக்கும் மாடவீதிகள் உண்டு. சிவபெருமான் கோயிலுக்கோ இரண்டே வீதிகள் இருக்கின்றன. உற்சவ காலங்களில் சிவபெருமான் திருவீதி வலம் வருகையில் விநாயகர் கோயிலைச் சார்ந்த ஒரு வீதி வழியாகவும், முருகர் கோயிலைச் சார்ந்த ஒரு வீதி வழியாகவும் வரவேண்டியிருக்கிறது அத்தகைய சந்தர்ப்பங்களில் இவ்விரு கோயிலைச் சார்ந்த செங்குந்தர்கள், சிவகுமாரர்கள் என்று சொல்லிக் கொள்ளும் செங்குந்தர்

கள், சிவபெருமானைத் தங்கள் வீதி வழியாகச் செல்ல விடமாட்டார்கள். ஆக்ஷேபிக்கும் இவ்விரு வீதிகள் வழியாகப் பிற இனத்தவர்க்குரிய மாரியம்மன், காளியம்மன், மதுரைவீரன் முதலிய எல்லாச் சாமிகளும் போகலாம். இந்தச் சிவபெருமான் மாத்திரம் போகக்கூடாது. சிவன் கோயில் கக்ஷியாரும் இவ்வீதிகள் வழியாகவே கொண்டுபோக வேண்டும் என்று சபதம் செய்து கொள்வார்கள். வந்தாலோ தடியடியும், கல்லடியும் கிடைக்கும். யாருக்கு? சிவபெருமானுக்கும் உடன் வந்த அடியார்களுக்கும். இந்த மூர்த்திக்கு எதிர்கக்ஷி யடியார்கள் செய்யும் உபசாரத்தையும் அபிஷேகத்தையும் என்வாயால் சொல்லிப் பெரும் பாபத்தைச் சம்பாதித்துக் கொள்ளமாட்டேன்.

இதற்காக இரு பக்கத்து அடியார்களும் 30 அல்லது 40 ஆயிரம் வரையில் செலவிட்டுப் பூலோகத்தில் எத்தனை நியாய ஸ்தலங்கள் உண்டோ அத்தனைக்கும் செல்லுவார்கள். கடவுள் தங்கள் வீதிக்கு வரவேண்டுமென்று பணங் கொடுத்துக் கோயில் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வது எங்கும் சகசமாயிருக்க, சிவ பரம்பரையினர் என்று சொல்லிக் கொண்டு விபூதி உருத்திராக்கத்தை விடாது எப்போதும் தரித்துக்கொண்டிருக்கும் இவ்வடியார்கள் கடவுள் தங்கள் தெருவில் வரக்கூடாதென்று இவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். இவை யாவும் பத்திமேலீட்டால் கடவுளுக்காகச் செலவிட்டதெனக் கொள்ளலாமா? இது எந்தத்தெய்வத்திற்கு ஏற்கும்? சில தனித்த நபர்களுக்குள்ள பகையை முன்னிட்டு ஊரையும் கோயிலையும் கெடுப்பதா? அதனோடு போயிற்றா? குலப் பெயருங் கெடுகிறதல்லவா? தங்களைப் போன்ற குல முதல்வர்களையும் பாதிக்கிறதல்லவா? இத்தகையோர்க்குச் சித்திக்க வேண்டியது நரகமா? கைலாயமா? வேதாகமங்களில் விதித்துள்ளவாறுதானே யான் செய்யவேண்டும்.

வீர:—நல்லது; இது ஒரு ஊரில் நடந்ததுதானே?

தரும:—ஒவ்வொரு ஊரிலும் இப்படித்தான் வெவ்வேறு விதமாக இருக்கும். கட்டளையிட்டால் சொல்லத் தயாராயிருக்கிறேன்.

வீர:—சொல்லும் பார்ப்போம்.

நாரதர்:—(வீரவாகு தேவரைப் பார்த்து) பார்த்தீர்களா! என்னை வீணாய்ப் பழித்தீர்களே!

வீர:—(பதிலில்லை.)

தரும:—இன்னொரு செங்குந்த கிராமத்தில் இரண்டுதேவார சபைகள் இருந்தன. ஒரு சிவராத்திரியன்று இரு கூட்டத்து அடியார்களும் சிவபெருமானே பல்லுருக்கொண்டு வந்தாற்போல உடல் முழுதும் விபூதி தரித்துப் பல அங்கங்களில் உருத்திராக்கங்கள் பூண்டு, தேவார மோதிக் கொண்டு வீதிவலம் வந்தார்கள். இரு சபையாரும் தங்கள் சபை முன்னே போகவேண்டும் என்று போட்டி போட்டுச் சண்டையிட்டு ஊரை இரண்டாக்கி வழக்குத் தொடுத்து 15-ஆயிரம் செலவிட்டார்கள். அந்தோ, பரிதாபம்! சண்டை ஆரம்பிக்கும்போது ஒருசபை அடியார்கள் 'எவரேனும் தாமாக விலாடத்திட்ட திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி, உவராதே அவரவரைக் கண்டபோது உகந்தடிமைத்திற நினைந்து அங்கு உவந்து நோக்கித் ...........தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே' என்னும் திருத்தாண்டகத்தையும் மற்றொரு சபையடியார்கள் 'சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து ........அங்கமெலாங் குறைந்து அழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே' என்னும் திருத்தாண்டகத்தையும் ஓதிக்கொண்டிருந்தார்கள். எவ்வளவு தூரம் தேவாரப் பாக்களின் கருத்துக் கிணங்க ஒழுகுகிறார்கள் பாருங்கள்!

மற்றொரு ஊரில் பகல் 12-மணிக்கு நடந்த உற்சவத்தில் பாணவேடிக்கை செய்தால் மிகப்பொருத்தமாயிருக்கு மென்றார் ஒருவர். இன்னொருவர் அது கூடாது வழக்கமில்லை என்றார். பேச்சுவளர்ந்தது. ஊர் இரண்டுபட்டது. ஏதோ குற்றங்கள் காட்டிக் கோர்ட்டுக்குப் போய் 20-ஆயிரம் செலவிட்டார்கள்.

சமீபத்தில் ஓர் ஊரில் ஒரு சிவாலயம் பலவாண்டுகளாகப் பூஜையின்றிச் சீரழிந்திருந்தது. அதைச் செப்பம் செய்து கும்பாபிஷேகம் செய்யத் தீர்மானமாயிற்று. தேவையான பொருள் சேகரிக்க ஒரு பத்திரிகை அச்சிட்டு அதனடியில் 25 பேர் தர்மகர்த்தாக்களெனக் கையொப்பமிட்டார்கள். இதைக் கண்ட வேறு மூன்று பிரமுகர்கள் தங்களையும் தர்மகர்த்தாக்களாக ஏன் அதில் சேர்க்கவில்லை என்று சண்டையிட்டு ஊரைக் கக்ஷியாக்கி வழக்கிட்டார்கள். வழக்கிற்குச் செலவிட்ட பணத்தில் ஐந்திலொருபங்கைக் கொண்டு கோயில் காரியத்தைப் பூர்த்தி செய்திருக்கலாம், பத்திரிகைப் போட்டு யாசிக்க வேண்டியதே இல்லை. கடைசியாகக் கோயில் இன்றும் பழைய ஸ்திதியிலேயே தான் இருந்து வருகிறது. இதை எந்தக் கணக்கில் எழுதலாம்? வருமானமும் பூஜையுமில்லாத கோயிலுக்கு 28 பேர் தர்மகர்த்தர்களென முன்வந்தால் நல்ல நிலைமையிலிருக்கும் கோயிலின் கதி என்னவாகும்? இவர்கள் புளியங்காயாம், புளிப்பேற்ற வேண்டாமாம்!

வீர:—சரி. இது இருக்கட்டும். குலத்துரோகம் எவ்வாறு செய்கிறார்கள்?

## குலாபிமானப் படலம்

தரும:—தாங்கள் தங்கள் சந்ததியாராகிய செங்குந்தர்களுக்கு சிவதீக்ஷை முதலிய செய்வித்து அவர்களை நல்லொழுக்கத்தினின்று பிறழாதவாறு பார்த்துக்கொள்ளும்படி நாட்டிற்கொன்றாக 72 குரு பீடங்களை ஸ்தாபித்து அவற்றிற்குப் போதிய வருவாய்க்கான ஏற்பாடுகளையும் செய்து வைத்தீர்களல்லவா? அந்த 72-ல் தற்போது ஒன்றோ இரண்டோதான் இருப்பதாகத் தெரிகிறது.



# நாவல் பகுதி

## மீனாட்சி சுந்தரம் (அல்லது) விவேகமுள்ளசுந்தரம்

[திருவாளர். டி. தட்சிணாமூர்த்தி முதலியார் அவர்கள், பி. ஏ.]

### முதலாவது அத்தியாயம்

மாலைக்காலத்தில் ஒருநாள் அதிக பிரகாச மற்று வானம் சற்று மேகமும் மந்தாரமுமாயிருந்தது. அப்பொழுது கடற்கரையில் சற்றுக் காற்றுவாங்க,! ஆடவர் தங்கள் மனைவிமாருடனும் குழந்தை குட்டிகளோடும் வந்திருந்தார்கள் இவர்களில் சிலர் சற்றுதூரம் நடந்து சென்று அமர்ந்தும், சிலர் நின்றுகொண்டும், மற்றும் பலர் அவ்விடத்திலேயே உட்கார்ந்தபடி ஏதோ குடும்ப விஷயங்களைப்பற்றிப் பேசியும், மற்றும் வீண் கதைகளைக் குறித்தும் ஒருவரோடு ஒருவர் வார்த்தை யாடியும், சல்லாபித்தும், குதூகலமாகச் சாய்ந்தபடியும் இருந்தார்கள். ஒரு புறம் ஒரு கல்லூரியில் வாசிக்கும் மாணவன் ஒருத்தன் ஏதோ நாவலை வைத்துக்கொண்டு வாசித்திருந்தான். அவனுக்குக் கொஞ்ச தூரத்தில், சில சிறுவர்கள் அதிக கூச்சலிட்டுக் கொண்டு கண்சுட்டி ஆட்டமும், சுண்ணாம்பூச்சியும் ஆடிக் கொண்டிருந்தார்கள். சில வாலிபர்கள் சுற்றிலும் என்ன நடக்கின்றது என்று கவனியாமல் அதிக ஊக்கத்தோடு சீட்டு ஆடிக்கொண் டிருந்தார்கள். மணல் நிறைந்த ஒரு இடத்தில் தொழிற் சாலையில் வேலை செய்யும் ஆட்கள் விடு முறையானதால் சற்று வேடிக்கையாய்க் காலம் கழிக்கலாம் என்று நினைத்துக் கடற்கரைக்கு வந்து பலிஞ்சப்பளான், குடு குடு, முதலிய ஆட்டங்களை ஆடிக்கொண்டிருந்தார்கள்.

இப்படி யிருக்கையில் கொஞ்ச தூரத்திற்கப்பால் நடுக்கடலில் சற்றுப் புகை வந்துகொண்டிருப்பதைக் கண்டு ஒரு நாட்டு புறத்தான் மிகவும் ஆச்சரியத்தோடு அதென்ன வென்று அந்தத்திக்கை நோக்கியே இமை கொட்டாமல் பார்த்திருந்தான். அப்புகை அப்பொழுது தான் துறைமுகத்திற்கு வந்து கொண்டிருக்கும் ஒரு வியாபாரக் கப்பலின் புகை. அதே சமயத்தில் துறை முகத்தை விட்டு, அதிக புகையுடனும் மிகுந்த சப்தத்துடனும் ஒரு மரக்கலம் வெளிக்கிளம்பிச் சென்றது. தூரதிருஷ்டி கண்ணாடியினால் ஒருவன் பார்ப்பானானால், கப்பலின் மேல்தளத்தில் பலர் நின்று கொண்டு கடற்கரையில் குழுமியிருக்கும் புருஷர்களையும் பெண்களையும் பார்ப்பதைக் காண்பான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கப்பல் மறைந்தது. வெய்யோனும் மேற்குத் திக்கில் தனது தேரை வேகமாய் ஓட்டி மறைந்தான். ரஸ்தாக்களில் போடப்பட்ட முனிசிபாலடியின் மின்சார விளக்குகள் எரிய ஆரம்பித்தன. ஒரு புறம் கடற்கரையிலிருந்து வீடு திரும்பும் ஜனங்கள் நடந்து கொண் டிருந்தார்கள். சாலையின் நடுவே மோட்டார் வண்டிகளும் குதிரை வண்டிகளும் அதிக வேகமாய் ஓடிக்கொண் டிருந்தன. ஒரு இடத்தில் தினசரி பத்திரிகையை ஒரு சிறுவன் கூச்சலிட்டுக் கொண்டு விற்றிருந்தான். ஒரு புறம் ரஸ்தாவின் ஓரத்தில் ஜனங்கள் அதிகமாக வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருந்தனர். ஒரு இடத்தில் உண்ண உணவு இன்றி உடுக்க உடையின்றி ஒருவன் அதிக நோயினால் வருந்தி தரைமீது உருண்டிருந்தான். கணவன் சுய நலத்தைக்கருதித் தன்னை அநாதையாய் விட்டுச் சென்ற ஒரு பாதகனின் மனைவி, இடுப்பில் ஒரு குழந்தையை வைத்துக் கொண்டும், வலது கையில் ஒரு குழந்தையைப் பிடித்துக் கொண்டும், மற்றொரு குழந்தையைப் பிடிக்க முடியாததினால் அது அவ

---

[404 வது பக்கத தொடர்ச்சி]

வீர:—அத்தனையும் அழிந்து போனதற்குக் காரணம் என்ன?

தரும:—ஒன்றும் அழியவில்லை. அப்படியேதான் இருக்கின்றன. பெயர் மாத்திரம் மாறிவிட்டது.

வீர:—என்ன பெயரால் மாறின?

தரும:—வேறு இனப்பெயரால். எவ்வினத்தின் பெயரால் மாற்றினார்களோ அவ்வினத்தவரோடு அவ்வாசாரிய குடும்பங்களும் கலந்துவிட்டன.

வீர:—இப்போது இருப்பது இரண்டொன்று தானா?

தரும:—சரியான விபரம் பிரமதேவருக்குத் தெரியும். இவர்கள் இவ்வாறு குலத்திற்கும் தங்களுக்கும் துரோகம் செய்து வேறினத்தவராக மாறியதைக் கண்ட சில செங்குந்த அறிஞர்கள் மத்திய காலத்தில் புதிதாகச் சில ஆசார்யபீடங்களை ஏற்படுத்தினார்கள்.

வீர:—(முருகப் பெருமானையும் துணைவரையும் பார்த்து கோபத்துடன்) என்ன குலத்துரோகம்! என்ன குலத்துரோகம்!!

(தருமராஜனைப் பார்த்து) பெயரை மாற்றிக் கொண்டவர்களுக்குச் சீடர்கள் யார்?

தரும:—முன்னே சொன்னபடி, அதிலொன்றும் மாறுதவில்லை. அதே ஆசாமிகள்தான்

வீர:—செங்குந்தர்கள் இதற்கு எப்படி இடங் கொடுத்தார்கள்? கொடுத்ததன்றி அவர்களை எப்படி குருமாராக ஏற்றுக்கொண்டார்கள்.

தரும:—கல்வியாகிய கண்ணில்லாதவர்களுக்கு என்ன தெரியும்? மீறிப் பேசினால் குருத்துரோகமாகிவிடும் என்று அஞ்சுகிறார்கள். இதற்குமேல் இது சம்பந்தமான விஷயங்களை இந்தப் பகிரங்கமான சபையில் பேச இயலாது. வேண்டுமாயின் தனியே சொல்லுகிறேன்.

ளுடைய கிழிந்த துகிலைப்பிடித்துக் கொண்டும், ஒரு வேளைக்குக் கூழ் குடித்துக் குழந்தைகளுக்கும் கூழ் ஊற்றிக் காப்பதற்காக அவள் தனவான்களைக் கண்டு கையேந்திப் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தாள். ஒருவன் கண் பொட்டையாய்ப் போனதாலும், காது செவிடாக ஆகிவிட்டதாலும், மற்றும் ஊமையாயிருந்ததாலும், கைகால் முடமாயிருந்ததாலும், ஒரு வேலையும் செய்யச் சக்தியற்றவனாகி நிலத்தில் புரண்டு கதறிக்கொண்டிருந்தான்.

எப்படி நல்லவர்கள் தீயவர்களைக் கண்டால் ஓடிவிடுவார்களோ, அதுபோல் நல்லவர்கள் போல் பிறருக்கு நன்மை செய்யும் ஒளி, தீயவர்களாகிய இருளைக் கண்டு ஓடி மறைந்தது. வானத்தில் அதிக மேகங்கள் கூடி யிருந்ததால், எங்கும் இருண்டு விட்டது. இச்சமயத்தில் ஒரு வாலிபன் டம்பமாக உடுக்காமலும், கொர்வத்தோடு நடக்காமலும், அரையில் சாதாரண வஸ்திரம் ஒன்றையும், உடலில் ஒருமெல்லிய சொக்காயையும், அதன் மேல் ஒரு குட்டையையும் அணிந்து கொண்டு, நிலத்தைப் பார்த்தவண்ணம், ஏதோ யோசித்துக் கொண்டு, தலை குனிந்து மெதுவாக ரஸ்தாவின் இடது பக்கத்தில் வந்துகொண்டிருந்தான். அந்தச் சிறுவனை யார் பார்த்த போதிலும், அவன் மனம் வருந்தி ஏதோ ஒன்றைக் குறித்து ஆழ்ந்து யோசிக்கிறான் என்று கூறுவார்கள். காளைப் பருவத்தில் நன்றாய் டம்பமாக உடுத்து, இன்பத்தோடு அறு சுவையும் உண்டு, கண்குளிரக் காட்சிகளைக் கண்டு மகிழாமல் ஏன் இச்சிறுவன் உடல் மெலிந்து, கம்பீர நடையற்று, கூனி, உன்மத்தம் பிடித்தவன் போல் செல்லவேண்டும். ஓடும் பாம்பைக் காலால் மிதிக்கக் கூடிய இத்திசையில், வேகமாய் எதையும் கவனியாமல் நடக்க கூடிய இத்திசையில், இவன் ஏன் கால் தடுக்கி விழவேண்டும்? இது இவன் கால வித்தியாசமோ? அல்ல உடல் நிலையோ?—அல்ல. பின் என்ன? அவன் மன நிலையோ? ஆம், சற்றும் சந்தேகமில்லை. அவன் மனதில் பல பாசங்கள் கூடி அவனை வருத்துகின்றன. ஒரு புறம் பல ஆசைகள் தோன்றித் துன்புறுத்துகின்றன. மற்றொரு புறம் பல எண்ணங்கள் தோன்றி முரண்பட்டு ஊசலாடிக்கொண் டிருக்கின்றன. இவ்வித நிலையில், அவன் என்ன செய்வதென்று தெரியாமல் மயங்கி நின்றான். இப்படியிருக்கும்போது சந்திர சேகரன் சந்தித்தான்.

சந்-சே:—ஆ! மீனாட்சி சுந்தரா! என்ன இவ்வளவுநேரம்? தீபம் ஏற்றி விட்டார்கள். நாங்கள் எல்லோரும் கடற்கரையை விட்டுத் திரும்பி வருகிறோம். நீ என்ன இப்பொழுதுதான் காற்று வாங்கச் செல்கிறாய்?

மீனா-சுந்:—"சந்திரசேகரா! நீ வந்து விட்டாயா. ஆனால் நானும் திரும்பி உன்னுடன் வருகிறேன். இருவரும் வீடு போய்ச் சேரலாம். ஒருவேளை மழை பிடித்துக் கொண்டாலும் பிடித்துக் கொள்ளும். நான் குடை கொண்டுவர மறந்தேன். நாம் வீட்டிற்குச் சீக்கிரம் போகலாம்" என்று நண்பனை அழைத்தான்.

சந்திர சேகரன் மீனாட்சி சுந்தரத்தின் ஆப்த நண்பன்; உடல் இரண்டு உயிர் ஒன்று ஒத்த சிநேகிதன். ஆகையால் தோழன் மாறுதல் அடைந்து வருந்தி இருப்பதைக் கண்டு, மனம் பொறாமல், அவன் மனதில் யாது குடிகொண்டிருக்கிறது என்று அதை அறிய எண்ணி, மீண்டும் மீனாட்சி சுந்தரத்துடன் கடற்கரைக்குச் சென்றான்.

மீனா-சுந்:—நேசா! கடற்கரைக் காட்சி என்ன ரமணியமாயிருக்கிறது பார். அதோ சில வலைஞர்கள் கட்டு மரத்தில் ஏறிக் கொண்டு வலையில் மீன்களைக் கொண்டு வருகிறார்கள். ஆ! அவர்கள் எவ்வளவு இன்பமாகக் காலம் கழித்துவருகிறார்கள்.

சந்:—மீனாட்சி சுந்தரா! அதிருக்கட்டும்.--என்ன உன் முகம் ஒருவாறு யிருக்கிறது?

மீனா-சு:—நண்பா! மனம் சற்றுச் சஞ்சலமுற்றிருக்கிறது.

அதிக வருத்தத்தைக் கொடுக்கக் கூடிய ஏதோ சில விஷயம் ஒன்று மீனாட்சி சுந்தரத்தின் மனதில் குடிகொண்டிருப்பதாகச் சந்திர சேகரன் நன்றாய் அறிந்தான். ஆகையால் அவன் வார்த்தையை வேறு துறையில் திருப்பினான்.

சந்:—நண்பா! நீ பரீக்ஷையில் தேறினதும் இராஜாதானிக் கல்லூரியில் சேர்ந்து வாசிக்கப் போகிறாயா? அல்லது சட்டக் கல்லூரியில் சேர்ந்து வாசிக்கப் போகிறாயா? உனக்கென்ன உத்தியோகம் செய்து சாப்பிடவேண்டும் என்று எண்ணமிருக்கிறதா? அல்லது வியாபாரம் கைத்தொழில் முதலியவைகள் செய்ய வேண்டுமா? என்ன பணம் இல்லையா? அல்லது வாசிப்பதற்குத் தேக வலியில்லையா?

மீனா-சு:—நண்பா, அதைப்பற்றி இப்பொழுது என்ன கவலை?

ஒவ்வொருவரும் பிறர் இந்த வாழ்வைத்தான் வாழ்வார்கள் என்று எண்ணுவது மூடத்தனமே. காலவித்தியாசத்தினாலும் அல்லது குடும்ப சச்சரவுகளினாலும் ஒருவர் நிலை மாறுவதுண்டு. ஆகையால் என்றும் சுகம் அனுபவிப்போம் என்று மனப்பால் குடித்திருந்தவர்களும் மற்றும் நாம் உன்னத பதவியில் இருப்போம் என்று மனக்கோட்டைக் கட்டி வருபவர்களும் படமுடியாத துன்பத்திற்குப் பாத்திரமாவார்கள். அது போல், நமது மீனாட்சிசுந்தரம் சந்திரசேகரன் எண்ணியவாறு கல்வி கற்கக் கூடிய நிலையில் இல்லை.

இப்படி யிருக்கையில் ஆகாயத்தில் இருள் மூடிக்கொண்டது. எங்கும் மேகங்கள் பரவிக் கொண்டன. மின்னல்கள் மின்னின, இடி இடித்தது கடற்கரையில் கூடி யிருந்த மாதர்கள் எல்லோரும் வெகு பரபரப்புடன் குழந்தைகளை வேகமாய் நடத்திச் சென்றும், மற்றும் இடுப்பில் இடுக்கிக் கொண்டும் தூக்கிக் கொண்டும் துரிதமாக வீடு நடந்தார்கள். மழை சிறு சிறு துளியாகவே பெய்தது. மீனாட்சி



சுந்தரமும் சந்திரசேகரனும் வீட்டிற்குப் புறப்பட்டார்கள்.

மீனாட்சி சுந்தரம் நனைந்த உடையுடன் வீடுவந்து சேர்ந்ததும், அவன் தாய் நாகரத்தினம் மெல்லிய குரலோடு, "மைந்தா! என்ன மழை பெய்யும்போது வேலை? ஏன் சற்று நிதானித்து வருவதுதானே? —இந்த உடையை அகற்றி வேறு உடையைத் தரித்துக்கொள்" என்றாள்.

## இரண்டாவது அத்தியாயம்

மீனாட்சி சுந்தரம் தன் அறைக்குட் சென்று உடை தரித்து விளக்கை யேற்றி நாற்காலியில் சாய்ந்து ஏதோ புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினான். அவன் பார்வை மாத்திரம் புத்தகத்தில் இருந்ததே தவிர மனம் அவ்விடத்திலில்லை. மீனாட்சி சுந்தரம் இவ்வாறிருக்க, வெளிச் சென்ற அவன் தந்தை கருணாகரர் அதிக கோபத்தோடு வீடுவந்து சேர்ந்தார். அவர் வந்ததும் நாகரத்தினத்தைப் பார்த்து, "அவன் வந்தானா? மழை பெய்யும் போதும் கடற்கரைக்குச் செல்ல வேண்டுமா? எத்தனை முறை சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறான். வீட்டில் உட்கார்ந்து கொண்டு ஏதோ காலத்தைக் கழிக்காமல் சபையென்ன? நண்பரென்ன? கடற்கரை காட்சி யென்ன? சரி, வந்தானா?" என்று கர்ச்சித்தார்.

நாக:—அதோ சற்று முன்பாகத்தான் வந்தான். அறையில் வாசித்துக் கொண்டிருக்கிறான். பாவம் நனைந்து வந்தான். அவனுக்கு குடைகூட யில்லாமல் போயிற்றே?

கருணா:—இப்படி பரிந்து பேசிவந்து அவனைக் கெடுத்து வருகிறாய். ஏன் வீடு தங்காமல் திரிகிறாய் என்று அவனைக் கேட்காமல் குடை வாங்கித் தரக் கூடாதா என்று என்னைக் கேட்கிறாய். இன்னும் மழையிலும் வெயிலிலும் திரிவதற்கா?

நாக:—படிக்கிற பிள்ளை எப்பொழுதும் வீட்டிலேயே இருக்குமா? வெளிசெல்ல வேண்டாமா?

கருணா:—ஆம், இவன் தான் படித்துவிட்டானா? எதிர் வீட்டு இராமசாமி படிக்கவில்லையா? நான் படிக்கவில்லையா? அப்படி வெளிச் சென்றாலும் ஒருவரிடமும் வீண் வார்த்தையாடாமல் வர வில்லையா? விளக்கு வைத்ததும் வந்து சேரவில்லையா? இவனுக் கென்ன வேலை இருக்கிறது?

நாக:—படிக்கிறவர்களுக்கு ஏதாவது வேலை இருந்துகொண்டே யிருக்கும் என்பது தாங்கள் அறிந்ததுதானே?

கருணா:—சரி; அவன் கெட்டால் யர்ரைப் பழிப்பார்கள்?

நாக:—நம் மைந்தன் மீது அவ்வளவு சந்தேகமா? என்ன வர வர அவ்வளவு கடினமாய் நடத்துகிறீர்கள். பாவம், படிக்கிறவன் எவ்வளவு உற்சாகத்தில் இருக்க வேண்டும். அதை விட்டு மனம் வருந்தி நிற்கிறான்.

கருணா:—அவன் பிறர் பேச்சைக் கேட்கும் வரையில் இப்படித் தான் கஷ்டப்படுவான்.

நாக:—மீண்டும் அவனை ஏன் பழிக்கிறீர்கள்? அவன் என்ன செய்தான்? நீங்கள் சொல்கிறபடி தான் செய்து வருகிறான். ஏதோ கடற்கரைக்குச் செல்கிறானே, அது தவறாகப் போய்விட்டதா?

கருணா:—அது தானா? இன்னும் அதிகமாக யிருக்கிறது. என் பேச்சைக் கேட்டால் சுகம் பெறுவான்.

நாக:—மீண்டும் அதே வார்த்தை கூறுகிறீர்கள். உங்கள் சொல்லைக் கேளாது என்ன செய்கிறான்?

கருணா:—"உனக்குத் தெரியாது. அவன் பிறர் சொல்லைக் கேட்டுக் கெடுகிறான்" என்றுகூறிவிட்டு அறைக்குச் சென்றார்.

கருணாகரர் பண்டைக்காலத்து மக்களில் ஒருத்தர். அவருக்குத் தற்காலத்திய நாகரிகத்தைக் கண்டால் தலை நோய் வந்து விடும். அவர் பாட்டன் முப்பாட்டன் ஆகிய இவர்களின் காலத்துப் பழக்க வழக்கங்களை விடாது அனுசரித்து வந்தார். யாராவது அவருக்குக் குறுக்குப் பேசினால் அளவு கடந்த கோபம் பொங்கி, அவன் எத்தனைக் கல்விமானா யிருந்தபோதிலும் சரி, அவன் எவ்வளவு புத்தி சாதுர்யம் உள்ளவனாயினும் சரி, அவன் நாகரீகத்தில் எவ்வளவு சிறந்து விளங்கினாலும் சரி, அவன் செல்வத்தில் எத்தனைச் செழித்துச் செழுங்கிளை தாங்குபவனானாலும் சரி, அவர்கள் எல்லோரும் மொட்டைப் பிள்ளைகள் ஆகி விடுவார்கள். யாராவது புதிய விஷயத்தைப்பற்றி கூறவந்தால் அவர்களிடம் செவி கொடார். தான் பிடித்ததே பிடிவாதம். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால். எவ்வளவு தடியனா யிருந்தாலும் சரி, எவ்வளவு கெட்ட நடவடிக்கை யுடையவனாயிருந்தாலும் சரி, அவன் எவ்வளவு கல்வி அறிவில்லா முழு மூடனானாலும் சரி, அவன் வயதில் பெரியவனாயிருந்தால் போதும். அவனே எல்லோருக்கும் பெரியவன், அனுபோகத்தில் சிறந்தவன் என்னும் தூர் அபிப்பிராய முள்ளவர்.

ஒருநாள் மீனாட்சிசுந்தரம் பிதாவைக் காஞ்சியில் கூடும் சபைக்குப் போக அனுமதிக் கேட்டான் உடனே கருணாகரர், "அங்கு போகக் கூடாது." என்றார்.

மீனா-சு:—"தந்தையே அந்த சபையில் பல கற்றறிந்தோர் வந்திருப்பதால் பிரசங்கம் அருமையாயிருக்கும். அருமையான விஷயங்களைக் கற்றறிவேன். பல பெரியவர் அறிமுகமாவார்கள். நான் வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டுவிட்டான்.

மீனாட்சி சுந்தரம் சென்றதும் கருணாகரின் கோபம் பொங்கி எழுந்தது. நாகரத்தினத்தைப் பார்த்து, "அவன் கர்வத்தைப் பார்த்தாயா. சரி

இன்றோடு என் கவலை முடிந்தது. அவன் உண்டு, நீ உண்டு. இனி ஒரு க்ஷணமும் இவ்வீட்டில் இருக்கமாட்டேன்" என்று கூறி வீட்டைவிட்டுப் புறப்பட்டார். உடனே நாகரத்தினம் அவரைத் தொடர்ந்து, "நீங்கள் போய்விட்டால் நான் என்ன செய்வேன்? நானும் கூடவருகிறேன்" என்று கூறித் தொடர்ந்தாள்.

கருணா:—(சண்பகத்தைப் பார்த்து) ஏன் மரப்பலகையின் மீது சாய்ந்து கொண்டு அழுகிறாய்? உனக்காக நான் இவ்வளவு பாடு படுகிறேன். இன்னும் கொஞ்ச காலம். செல்ல மனம் வரவில்லை. ஆசை அடித்துக் கொண்டிருக்கிறது.

நாக:-ஆமாம், அவள் பொருட்டுத்தான் கொஞ்ச காலம் இருங்கள். ஆண்டிக்கும் ஒரு பெண் இருந்தால் அதைச் சரியான இடத்தில் கட்டிக்கொடுத்துத்தான் செல்வான்.—அதிருக்கட்டும் எப்பொழுது பார்த்தாலும் ஆண்டியாய்ப் போகிறேன், காஷாயம் வாங்கிக் கொள்ளுகிறேன் என்று கூறுகிறீர்களே. அப்படிப் போய்ப் பார்ப்பது தானே? போய்த் திரும்பினவர்களை நான் பார்த்தேன். வேளைக்குப் போஜனம் வேண்டுமே; படுக்கப் பஞ்சணை வேண்டுமே. நீர் சந்நியாசியாய் போனால் இதெல்லாம் எப்படி கூடும்?

கருணா:—ஆமாம், இந்த சனியங்களெல்லாம் இருக்கும் வரையில் நான் எங்கு செல்ல முடியும்? கால் கட்டுகள்.

நாகரத்தினம்மாள் உடனே கருணாகரருக்குப் போஜனம் பரிமாறினாள். அவள் அன்று அடிக்கவிருந்த புயல்காற்றுச் சற்று மேல்காற்றாக மாறினதற்காக மனதில் சந்தோஷமடைந்தாள். கருணாகரர் உண்டு உறங்கினார். சித்திராதேவி அவர் முனிவைத் தணித்து அவருக்குச் சாந்தத்தை யுண்டு பண்ணினாள். சண்பகம் தன் தாய் தந்தையர் சமாதானமுற்று உறங்குவதைக் கண்டு களித்து வாசித்து காலத்தைக் கழித்து வந்தாள்.

மீனாட்சி சுந்தரம் இயற்கையில் சுயேச்சையை நாடுபவன். அவன் பிறர் என்ன சொன்னாலும் கேளான். விஷயங்களை, ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்து, அது பிறரால் ஒப்ப முடியுமோ அல்லது தன்னால் முடியுமோ என்பதை யோசித்துத் தன் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் காரியத்தைச் செய்துவந்தான். இவன் நன்றாய்க் கற்றறிந்த சீலன். படித்தவர்களிடம் சாவகாசம் செய்வான். பிரபுக்களையும், பெரியவர்களையும், கற்றுணர்ந்தவர்களையும் அறிமுக மாக்கிக்கொள்வான். இவன் வாசித்த கல்லூரியில் இவனை மெச்சாதவர் இல்லை. இவன் குணத்தைப் புகழாத, இவன் கல்வி அறிவிற்கு உயர்த்திப் பேசாத, இவன் நட்பைக் கண்டு வியக்காத, மகிழாத, விரும்பாத, இறும்பூதெய்தாத, ஆசிரியரும் இல்லை; மாணவரும் இல்லை. அக்கல்லூரியில் ஒவ்வொரு வகுப்பிலும் பிரசித்தி பெற்று விளங்கினான். எல்லோருடைய புகழ்ச்சிக்கும் அருகனானான். நாவன்மைக்காகவும் வியாசம் வரையும் திறத்திற்காகவும் அநேக பரிசுகளைப் பெற்றான். தேகப் பயிற்சியில் சிறந்து நின்று வெகுமதிகளைப் பெற்றான். அக்கல்லூரியின் ஆசிரியர்களிடமிருந்து இதுவரையில் எவரும் பெறாத நற்சாட்சிப் பத்திரங்கள் நற்குணப் பத்திரங்கள் முதலியனவைகளை பெற்றான். பலருடைய அபிப்பிராயங்களைச் சபையில் கேட்டுத் தர்க்கித்து இவன் அபிப்பிராயத்தை ஊர்ஜிதப்படுத்தி வெற்றி பெற்றுக் கரகோஷத்துடன் மீண்டு வருவான். மற்றும் பெண் கல்வியைப்பற்றி ஒரு வியாசம் எழுதி, அறிவைகளால் புகழப்பட்டு, தெரிவைகளை அடிமைத்தனத்தினின்றும் நீக்கத் தோன்றிய மகாபுருஷனாக மதிக்கப்பட்டான். இவன் பெண்களும் ஆண்களைப்போல் கற்கவேண்டும் என்றும், பெண்களை அறையில் அடைத்து வைக்காமல் அவர்களுக்கும் சுயேச்சை கொடுக்க வேண்டும் என்றும், ஆண்களைப்போல் சமமான சுதந்திரம் உரிமைகள் கொடுக்கவேண்டும் என்றும் ஒவ்வொரு சபையிலும் கூறித் தர்க்கித்து மன்றாடி வெற்றிபெற்று வருவான். மேலும், கல்வி வாசனையுடைய ஒருவன் கல்வி மணக்ககூடிய ஒருத்தியை தன் ஆசை நாயகியாக அடையவேண்டும் என்றும், பெண்களுக்குத் தங்கள் இஷ்டம்போல் நாயகனை அடையச் சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்றும் கூறுவான். பால்ய விவாகத்தைக் கண்டித்து, அதனால் வரும் தீமைகளை விளக்கி, இளமையில் கைம்பெண் ஆவதும், அவள் ஆதரவின்றி வருந்திக் காலத்தைக் கழித்து வருவதும், அவள் புருஷன் பொருளுக்குப் பாத்தியதை அற்றவளாய் இருப்பதும், அவளைப் பலர் ஏசி நிற்பதும், அவள் பல ஆசைகளுக்கு ஈடுபட்டுக் கெடுவதும், மனம் நோவதும், பிறர் நகைக்கத் தெருவில் நிற்பதும், உறவினர் கொடுமை சகியாது தற்கொலை புரிந்துகொள்வதும் ஆகிய இக்கொடுமைகளைப் பலருக்கு விளக்கிக் காட்டி விதவா விவாகம் அவசியம் என்றும், அதனால் நாட்டில் கண்ணீர் விட்டுக் கலங்கிநிற்கும் பெண்கள் களிப்புறுவதும், அவர்கள் இன்புற நாடு க்ஷேமமடைவதும் ஆகிய நல்ல முடிவுகளை, எடுத்துக் காட்டி நின்றான்.

மீனாட்சி சுந்தரம் தன் தங்கையிடத்தில் வெகு அன்புடையவனா யிருந்தான். தன் தங்கை தன்னைப்போல் கற்றவனையே மணக்க வேண்டும் என்பது அவன் கோரிக்கை. தங்கைக்குத் தன்னால் கூடிய வரையில் போதுமான கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டான். தங்கைக்கோ நாகரீகத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்று அளவு கடந்த பிரீதி உண்டு. தகப்பனாருக்குப் பயந்து சற்று ஆசையை உள் அடக்கி வருந்திக் காலத்தைக் கழித்து வந்தாள். கற்றுத் தேர்ந்தவனையே மணக்க அவள் விரும்பினாள். தானும் ஆங்கில பாஷையைக் கற்றுப் பாண்டித்தியம் அடைய, பகீரத பிரயத்தனம் செய்தாள். அவளுக்குக் அந்தரங்கமாக, கருணாகரர் பழக்க வழக்கங்களை அனுசரித்து வருவது பிடிக்கவில்லை.

(தொடரும்.)



# நிருபங்கள்

## அம்மாபேட்டை செங்குந்த முதலாளிகளுக்கு ஒரு வேண்டுகோள்

சேலம் டவுன் அம்மாபேட்டை நெசவுத்தொழில் செங்குந்த முதலாளிகளே! கனவான்களே!

உங்களிடத்தில் பட்டுச் சரிகை புட்டாச் சேலைகள் நெய்து வரும் தொழிலாளர்களின் கூலியைப் பல தடவை குறைத்து வந்ததுமல்லாமல், இனியும் குறைக்க ஏற்பாடு செய்திருப்பதானது, ஈரோட்டில் கூடிய நம்மவர் முதலாவது மகா நாட்டின் தீர்மானத்திற்கு முற்றிலும் விரோதமாயிருப்பதோடு, நமது சமூக முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள ஒவ்வொரு செங்குந்தனும் மனவருத்தமடையச் செய்கிறது.

அவர்கள் (நெசவுத் தொழிலாளர்கள்), நெற்றி வியர்வை நிலத்தில்சொட்ட, ஒவ்வொரு இழையாக நெய்யக் கஷ்டப்பட்டுச் செய்யும் வேலையைப் பார்த்துக் சேலைக்கு 35 ரூபாய் வீதம் கூலி கொடுத்து வந்தீர்கள். அந்தச்சேலைகளைக் கிராக்கிகளிடத்தில் விற்பனை செய்யுங் காலங்களில் சேலைகளின் கொள் முதலைக் கவனித்து கூறர் விலைக்கு விற்காமல், பண நிர்ப்பந்தமுள்ள சில்லரை வியாபாரிகள் விற்கும் குறைந்த விலைக்கே அனைவரும் விற்று வந்தீர்கள். யாதொரு திட்டமும் செய்யவில்லை. நாளுக்கு நாள் பஜார் நிலவரம் குறையலாயிற்று. அதன் பயனாய் உங்களுக்குப் போதிய லாபமில்லாதது கண்டு, தொழிலாளர்களின் கூலியைக் குறைக்கவேண்டுமென்று நீங்கள் கட்டுப்பாடாக இருந்து, 2 தடவைகளில் 5 ரூபாய் வீதம் குறைத்து, தற்போது சேலைக்கு 25-ரூபாய் வீதம் கூலி கொடுத்து வருகிறீர்கள். ஏழைத் தொழிலாளர்கள் குறைந்த கூலிக்கும் நெய்துதான் வருகிறார்கள். நிற்க;

தொழிலாளர்களின் கூலியைக் குறைக்கும் விஷயத்தில்தான் ஒற்றுமையாக இருந்து வருகிறீர்களே தவிர, சேலைகளை விற்பனை செய்யும் விஷயத்தில் கடுகளவாவது ஒற்றுமையில்லாமல், மறுபடியும் (தொழிலாளர்களின் கூலியை ஈடு செய்த பிறகும்) நாளுக்கு நாள் விலையைக் குறைத்துக் குறைத்தே விற்றுவந்ததினால் உங்களுக்குப் போதியவூதியமின்மையால், * மீண்டும் தொழிலாளர்களின் கூலியைக் குறைக்க ஏற்பாடு செய்துவருகிறீர்கள். அந்தோ பாவம்! உங்களின் ஒற்றுமையின்மையால் தக்க வூதியத்திற்குச் சேலைகளை விற்க முடியாமைக்கு, அன்றாடம் உதயமுதல் அந்திவரையில் இடைவிடாது வேலை செய்து ஜீவிக்கும் ஏழைத் தொழிலாளர்களா காரணம்? தொழிலாளர் அரசாங்கம் வேண்டுமென்று பல்லாயிரக்கணக்கான நம் இந்திய மக்கள் சிறைக்கூடம் ஏகிவருமிக்காலத்தில், அவர்களின் கூலியைக் குறைத்துவரும் வழக்கமானது உங்களின் நன்மதிப்பிற்கு விரோதமாகும்.

ஆதலின் முதலாளிகளே! கூலியை ஈடுசெய்யும் வழக்கத்தை அடியோடு யொழித்துவிட்டு, சேலைகளைக் குறைந்த விலைக்கு விற்காமலிருக்கும்படி நீங்கள் ஒன்றுகூடி ஒரு † திட்டம் வகுத்துக்கொள்வது சாலச் சிறந்ததாகும். இன்றேல், தொழிலாளர்களுக்கு உங்களிடத்தில் அதிருப்தி ஏற்படுவதுடன், பிற்கால நிலைமை சீர்குலைந்து போகுமென்பதை கவனிக்க வேண்டுகிறேன்.

ஓர் அம்மாபேட்டை செங்குந்தர்.

* இதற்குத் தற்காலம் நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சட்டமறுப் பியக்கத்தையே ஒரு காரணமாகக் கூறுவார்களாயின், சட்டமறுப்பிற்கு முன் இரண்டு தடவைகளில் கூலியை ஈடு செய்து கொடுத்தது எக்காரணம்பற்றி?

---

## நாயக்கன்பேட்டை கிராமவாசிகளுக்கு ஒரு வணக்கமார்ந்த வேண்டுகோள்

அன்பிற் சிறந்த பெரியீர்!

அறிவிற் சிறந்த சான்றோர் பலர் வாசஞ் செய்து வந்த இத் தொண்டைமண்டலத்திற்குத் திலகமென விளங்குவது காஞ்சிமா நகரமாகும். இந்நகரத்தில் உமாதேவியார் முப்பத்திரண்டறத்தையும் வளர்த்ததாகச் சொல்லப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கச்சியம்பதியில் சிலகாலங்களுக்கு முன்னர்ச் சில அம்மன்களைப் போலி முன்னிலைகளாகக் கொண்டு பலி முதலியன செய்து வந்தனர். ஆனால் இக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் ஜீவகாருண்ய உணர்ச்சியினால் அங்குள்ள பல கோயில்களில் பலி கொடுப்பதை யகற்றிப் பாவமில்லாததாகிய பாற்பூஜை முதலானவைகளையே செய்துவருகின்றனர். இத்துடன் நில்லாது, கோயில் அதிகாரிகள் பலியிடக் கூடாதென்று உத்திர விட்டும் அவ்விதஞ் செய்கிறவர்களுக்குத் தண்டனை விதித்தும் வருகிறார்கள். அதன் பயனாக அம்மனின் பேரைச் சொல்லி அநியாயமாகச் செய்யப்படும் ஆடுகோழிகளின் கொலைகள் பல கடை பெறாமல் நின்றுவிட்டன. இவ்விதமான ஏற்பாடுகளைச் செய்தவர்களின் ஜீவகாருண்யத்தை யாம் எவ்விதம் எடுத்துரைப்பது!

குறிப்பு:— † இது சம்பந்தமாக 1929ஆ டிசம்பர் மீ நடைபெற்ற அம்மாபேட்டை செங்குந்த மகா ஜன சங்க முதலாண்டு நிறைவு விழாவில் செங்குந்தர் கோ ஆபரேடிவ் சொஸைடி ஒன்று ஏற்படுத்தும் பொருட்டு ஆலோசிக்குமாறு சில மதிப்பு வாய்ந்த கனவான்கள் அடங்கிய ஒரு கமிட்டியும் நியமிக்கப்பெற்றிருக்கிறது.

'அன்பே சிவம்' என்பதும், 'அன்பினாலேயன்றி வேறெவ்வகையிலும் நாம் உலகத்தில் செவ்வனே வாழ முடியாதென்பதும் கற்றறிந்த பல பெரியோர்களின் துணிபு. ஒருவன் தன்னை மாத்திரம் நேசித்துப் பிறரிடத்துச் சிறிதும் அன்புடையவனாயிராவிடில், அவன் மனிதப் பிறவி யெடுத்ததின் பயனை யடைந்தவனாகான்: தன்னையும் நேசித்துப் பிறரையும் நேசித்து மன்னுயிரைத் தன்னுயிரே போல் கருதிப் பொதுஜன சேவை புரியும் பெரியாரைச் சூரிய சந்திரர் உள்ள வரையில் யாவரும் போற்றுவர். நமது செங்குந்த சமூகத்தையே நெடுநாட்களாக இருந்த உறக்கத்தினின்றும் தட்டி யெழுப்பின 'செங்குந்த மித்திரன்' பத்திரிகையைச் சிரமங் கருதாது அட்சிட்டு வெளியிட்ட சைவத் திருவாளர் தி. நா. சபாபதி வள்ளலாரும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சர்களாகிய திருவாளர்கள். ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ.,எல். டி., அவர்களும் பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்களும், இன்னும் ஏனைய செங்குந்த குலத் தொண்டர்களும் தாங்கள் நம் மீது கொண்டுள்ள அன்பினாலன்றோ தமது உடல் பொருளாவி மூன்றையும் உதவி அரும் பெரும் சமூகத் தொண்டை யாற்றி வருகிறார்கள்? யாவும் வன்பினாலன்றோ இம் மண்ணுலகத்திலுள்ள மாந்தரனைவரும் பிணைக்கப்பட்டிருக்கினர்!

இவ்வாறு போற்றப்படும் அன்பை மனிதரிடத்தேயன்றி ஏனைய ஐயறிவுடைய மிருகங்களிடத்தும் மற்றைய ஜீவ ஜெந்துகளிடத்தும் கொண்டிருத்தலே ஜீவகாருண்யமாகும். மனிதர்களும் மிருகங்களும் சகோதரர் போலவும், ஆனால் அவைகள் ஊமைச் சகோதரர் போலவும் தோன்றுகின்றன. ஊமைச் சகோதரர்களானால் அவர்களுக்கு இன்னல் புரிய முற்படுவோமா? அத்தகைய சகோதரனுக்கு யாதொரு சிறிய தீங்கை யாவது இழைக்க அறிவுடையார் கருதுவரோ? கருதார்: கனவிலும் நினையார். மேலும் கடவுளின் படைப்பில் அடங்கிய ஒவ்வொரு உயிர்ப்பிராணியும் அவரது வாசஸ்தல மாகும். ஆகையால் அப்பிராணியை வதைப்பது அதனிடம் வாசஞ் செய்யும் பகவானையே பாதிக்கும். கொலையே பஞ்சமா பாதகங்களுக்கு முதன்மையானது என்பதினால் 'கொல்லாமையே புண்ணியங்களுக்கு! முதன்மையானது' என்பது விளங்குகிறது. ஆகையினாலன்றோ பலர் தாம் புலாலுண்ணலை நீத்துப் பிறரும் அவ்வாறு செய்தலைத் தடுக்கப் பலவிதத்திலும் முயற்சித்து வருகின்றனர். பள்ளர், பறையர்களில் பல பேர் இப்பாவமான காரியத்தைச் செய்யாது விடுத்தனரெனின், நம்மில் 'ஜீவகாருண்யம்' வெகுவாக இருக்கவேண்டுமென்பதைச் சொல்லாமலே விளங்கும். 'அரிதரிது மானிடராதலரிது' எனப் புகழ்ந்துரைக்கப்பட்ட மானிட தேக மெடுத்த ஒவ்வொருவரும் தங்களின் நல்லொழுக்கத்தினின்றும் தவறாது நடத்தல் வேண்டும். 'கைக் கோளர்' என்ற பதத்திற்கே 'ஒழுக்கத்தின் கொள்கையோர்' எனப் பொருளாயின் நம்மிடமிருக்க வேண்டிய ஒழுக்கத்திற்கு ஓர் அளவும் வேண்டுமோ? நல்லொழுக்கத்திற் கறிகுறியான பலவற்றுள் சிறந்து விளங்குவது ஜீவகாருண்யமாகும்.

ஈனத்தை யுண்டாக்கி ஈரலைக் கெடுத்து ஜீரணக் கருவிகளுக்கும் இன்னல்களைத் தரும் நாற்றப் புலாலை ஒழித்து விடலே ஜீவகாருண்ய மெனவுணர்ந்த செங்குந்த சீலர்களே!

நீங்கள் 'கொலை செய்தல் தவறான காரியம், என உணர்ந்திருந்தும் அத்தகைய அநியாயக் கொலை நமது ஊரில் வருடா வருடந் தவறாது நடந்து வருவதைத் தடுக்க எவ்வித முயற்சியாவது செய்ததுண்டா? யாதொரு தீங்கையும் எண்ணியறியாத ஓர் உயிரைப் பிடித்துக் கொலை செய்யும் போது 'அம்மா' வென வலறும் சப்தம் கேட்டமாதவர்களுக்கும் 'நரகம் சித்திக்கும்' என நூல்கள் கூறுகின்றன. அப்படியானால் அவர்கள் செய்யும் அநியாயப் படுகொலையை வேடிக்கையாகப் பார்த்து நமக்கு என்ன'வென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். அம்மன் ஆடு கோழி தனக்கு வேண்டு மென்றால்,எங்காவது இஷ்டம்போல் எடுத்துப் புசிக்கக் கூடாதா? இவ்விதம் ஊரின்கண் (அதிலும் செங்குந்தர்களுக்கே குறைவை விளைக்க இவ்வூரின்கண்) திக்கற்ற ஆட்டைக் கொண்டு வந்து அம்மனின் உருவத்திற்கு முன்பாக நிறுத்தி இவை யிரண்டிற்கும் இடையில் ஒரு திரையிட்டு, உடலம் சிலிர்க்க, தனது உயிர் பிரியப் போவதை முன்னிட்டு வருந்தி நிற்கும் அந்த ஏழைப் பிராணியை வெட்டி மாய்ப்பது உங்களுக்குப் பரிதாபமாகத் தோன்றவில்லையா? அம்மன் பூஜைக்காரருக்கு ஊரில் யாதொரு பாத்தியதையு மில்லாமலிருக்க, கிராம வாசிகளாகிய நீங்கள் மனது வைப்பின், இவ்விதக் கொலையை நிறுத்திப் புண்ணியத்தைப் பெறலாகாதா? 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு' என்பது போன்று நீங்கள் ஒன்று சேர்ந்தால், வீர செங்குந்தர்களாகிய நம்மால் ஆகாத காரியம் யாதாவது இருக்குமா? கேள்வி முறையில்லாமல் தங்கள் துயரைச் செப்ப முடியாத ஊமைப் பிராணியை வெட்டுவதைப் பார்க்கிற உங்கள் மனதில் இரக்கமென்பதில்லையா? பொங்கல் பழமில்லையா? பூ தேங்காய் முதலியன இல்லையா? இவைகளைக் கொண்டு பாற்பூசை போடுதல் சங்கரிக்குச் சம்மத மாகாதோ?

ஆகையினால் நாய்க்கன் பேட்டைச் செங்குந்த குலப் பெரியோர்களே! சகோதர சகோதரிகளே!

பல ஊர்களில் பலர் செய்தது போன்று நீங்களும் ஒன்று சேர்ந்து இங்கு (நாய்க்கன் பேட்டையில்) நடத்தி வரும் படு கொலையை நிறுத்தி அதற்குப் பதிலாகப் பாற்பூசை போடச் செய்து செங்குந்த கிராமத்தை ஜீவகாருண்ய முள்ள கிராமமாகும்படி செய்ய வேண்டுமெனக் உங்களை மிகவும் வணக்கமாய் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

N. P, தணிகைராயன்.
K. O. துரைசாமி.



## ஓர் ஐய வினா

இராமநாதபுரம் ஜில்லா முதுகுளத்தூர் தாலுக்காவைச் சார்ந்த அபிராமம் என்னும் எனது பிறப்பிடமாகிய ஊரில் நம் குலத்தவர் இருபிரிவினராக இருந்து வருகிறார்கள். இவ்விரு பிரிவினருக்குள்ள வித்தியாசம் என்னவென்றால் கலியாணமான பெண்களுள் ஒரு வகுப்பார் உருவத்துடன் சற்று பெரிதான மாங்கல்யத்தை அணிந்துகொள்வதும் மற்றொரு வகுப்பார் உருவமில்லாமல் வட்டமாய்ச் செய்த மாங்கல்யத்தை அணிந்துகொள்வதும் தான். சடங்குகள் முதலியவற்றுள் வேறு யாதொரு வித்தியாசமும் கிடையாது.

இவ்விரு பிரிவினருக்குள் அடிக்கடி கக்ஷிகள் தோன்றுவதும் மறைவதுமாக இருந்து வருகிறது. ஆகையால் செங்குந்தர்கள் இருவகையினர் என்பதற்கு ஆதாரம் ஏதாவது உண்டா? இல்லையேல் இவ்வித்தியாசத்திற்குக் காரணம் என்ன என்பதை விளக்குமாறு மித்திரன் வாசகர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

தொ. வ. நா. வயிரவ முதலியார்
அரிசி வியாபாரம்.
நெ. 389, சூரத்து A பஜார், ரங்கோன்.

---

## ஒரு வேண்டுகோள்

திருநெல்வேலி ஜில்லா கோவில்பட்டி தாலுக்காவைச் சேர்ந்த அயன் பொம்மையாபுரம் கிராமச் செங்குந்தர்களுக்கும் எட்டியாபுரம் ஜமீன் கரிசல்குளம் வனிதம் கஸ்பா கரிசல்குளம் கிராமத்து நாடார்களுக்கும் 106-வது ஆண்டு ஆவணி 10௳ கலகம் நடந்து பலருக்குக் காயம் பட்டதாகவும், இது சம்பந்தமாகச் சில நாடார்கள் அரஸ்ட் செய்யப்பட்டுச் செங்குந்தர்கள் வாதிகளாக இருந்து கேஸ் நடந்து வருவதாகவும் கேள்விப்பட்டு மிகவும் வருந்துவதோடு, ஒவ்வொரு சமூகத்தவரும் தங்கள் தங்கள் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் இடைவிடாது உழைக்கவேண்டி யிருப்பதால், நம் நாட்டில் உள்ள எல்லாச் சமூகத்தவரும் சகோதர பான்மையோடு ஒத்துழைக்க வேண்டியது அவசியமென்னும் எண்ணம் மிகுந்து வரும் இக்காலத்தில் இத்தகைய சச்சரவுகளுக்கு இடந்தரலாகாதென்றும், திருநெல்வேலி ராமநாதபுரம் ஜில்லாக்களில் அநேக இடங்களில் இருப்பதுபோல நம்மவர்களும் நாடார் சகோதரர்களும் சிநேகபான்மையோடு இருந்து கூடிய சீக்கிரம் முன்னேற்றமடைவதில் தங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டுமெனவும் விரும்புகிறோம்.

---

## ஓர் ஐயவினா

எங்கள் ஊர்களிலெல்லாம் பொன்னம்பலத்தார், ஒண்டிப்புலியர் என்ற வகையார்கள் வந்து வருஷம் ஒரு முறை மங்கிலியத்துக்கு 4-அணா 1-அணா முறையே வசூல் செய்கின்றனர். ஆனால் பெரியோர்கள் காலத்திலிருந்து கொடுத்துவந்ததாகவும் சொல்கிறார்கள்.

இவர்களுக்குக் கொடுக்கவேண்டிய காரணம என்ன? இந்த வரி எல்லா ஜில்லாக்களிலும் செங்குந்தர்கள் கொடுத்து வருகிறார்களா? என்ற விபரத்தை அறியாதவனாயிருக்கிறேன். ஆகையால் தெரிந்த பெரியோர்கள் மித்திரன் மூலமாய் வெளியிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளும்

கோதவாடி
11—1—30

K. அப்பாச்சி முதலியார்
உபாத்தியாயர்,
கோதவாடி.

---

## அநுதாபம்

இலங்கை, யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு வாசியும், வெளி நாடுகளிலும் பிரசித்தி வாய்ந்தவரும், பொது நலத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் தியாகம் செய்தவரும் வாலையம்மன் கோவில் பராமரிப்புக்காரரும், நெடுநாட்களாய்ச் செங்குந்தர்களுக்கு அரசர் போன்றவரும், அரசாங்க உத்தியோகத்திலிருந்து இளைப்பாறியவரும், திரு. பி. க. கணேச முதலியார், திரு. D. G. P. ராஜேஸ்வர முதலியார் தாய் மாமனாரும், திரு. மு. கி. கார்த்திக்கேசு முதலியார் தந்தையுமாகிய திருவாளர் மு. கிருட்டின பிள்ளை முதலியார் அவர்கள் சென்ற புரட்டாசி 29௳ அதிகாலையில் விண்ணுல கெய்தினார். அன்னாரின் பிரிவாற்றாமையால் துயரத்திலாழும் குடும்பத்தவர்க்கு நம் சமூகத்தவரின் அநுதாபம் உரியதாகுக.

க. பொன்னுதுரை முதலியார்
நல்லூர்.




## சென்னை சட்டசபையில் அடியில் கண்டவர்களுக்கு நாமிநேஷன் கிடைத்திருக்கிறது.

### தாழ்த்தப்பட்ட வகுப்பு

திரு. ஆர். சீனிவாசன், திரு. என். சிவராஜ், திரு. வி. ஜி. வாசுதேவபிள்ளை, திரு. ஹச் எ. ஜெகனுதன் சுவாமி, சகஜானந்தம், திரு. வி. ஐ. முனுசாமிபிள்ளை, திரு. ஜி. ஆர். பிரமய்யா, திரு. பி. வி. ராஜகோபால் பிள்ளை, திரு. எக. தேவதா தாசன் (பாளையங் கோட்டை), திரு. வி. தர்மலிங் கம் பிள்ளை.

### மற்ற வகுப்புக்கள்

ஜெய்ப்பூர் மகாராஜா, திரு. ராபர்ட் பவுல்க்ஸ், திரு. எஸ். என். துரைராஜ, திரு. டப்ளியு. பி. சௌந்திரபாண்டிய நாடார், பண்டித ஜி. ராமமூர்த்தி (ராஜமகேந்திரம்), திரு. பிஞ்சலா சுப்பிரமனியம் செட்டி, திரு. டி. கிருஷ்ணமூர்த்தி (காக்கிஞடா), திரு. வி. வாசுதேவ், திரு. வி. டி. அரசு, ஸ்ரீமதி அலமேலுமங்கைத் தாயாரம்மாள், திரு. மாத சுதனன், தங்கள் (நம்பூதரி), திரு ஸீ. கிருஷ்ணன் (நீயர்), திரு. ஜி. ஸ்ரீராமுலு (செட்டி பலிஜா), இவர்களில் 9 பேர் சென்ற சட்ட சபையில் ஸ்தானம் பெற்றவாகள்.

---

## பெரு வெள்ளக் கொடுமை

### மாயவரம் தாலூகாவில் ஒருவர் நேரில் கண்ட காட்சி

[திராவிடனில் கண்டது]

பழவாற்றுக்குத் தென்பாகத்திலுள்ள அநேக கிராமங்களும் அநேக நெல் வயல்களுக்கும் வெள்ளத்தால் சூழப்பெற்று நெல்பயிர்களெல்லாம் சதா நீரில் மூழ்கி இருந்தமையால் பூராவும் அழுகிப் போய் எங்கோ ஒன்றிரண்டு நாத்துக்கள் தவிர மீதி எல்லால் நாசமாய் விட்டன. இப்பொழுது அறுவடைக்குத் தயாராக இருந்த குருவை மாகுலும் நீரில் மூழ்கிப்போய் நெற்களெல்லாம் முளை கண்டு பெரும் நஷ்டத்தை உண்டாக்கி இருக்கின்றன. ஏழைக் குடியர்கள் தங்களுடைய பெண்டு பிள்ளைகளுடன் வரம்புகளில் வந்து நின்றுகொண்டு நீரில் மூழ்கிக் கிடக்கும் நெற்பயிர்களை அறுக்கப்பார்க்க எல்லாம் முளைத்துப்போயிருப்பதைக் காண அவர்கள் நீண்ட காலமாகக் கஷ்டப்பட்டுப் பயிர் செய்துப் பயனற்றுப்போனக் கொடுமையால் கண்ணீர் விட்டுக் கதரும் காக்ஷி செப்பத்தரமன்று. இன்னும் பல இடங்களில் அறுக்க முடியாமலே பயிர்கள் பெரு வெள்ளத்தில் மூழ்கி இருப்பதையும் பார்த்தேன். பழவாற்றுக்கு வடபுரத்தில் எங்கு பார்க்கினும் வெள்ள மயமாகவே தான் தென்பட்டது. இங்குள்ள வயல்களுக்கு மேல் 1, 2-அடி தண்ணீர் நின்றமையால் பயிர்கள் இருக்கின்றனவோ இல்லையோ வென்ற சந்தேக முண்டாகி விட்டது. வரப்பு ஓரங்களிலிருந்த கருவை மரங்களெல்லாம் கடலில், செடி முளைத்ததைப் போலவே தென்பட்டது.

கொள்ளிடத்திற்கு முன்ஞடி இருந்த ராஜன் வாய்க்கால் என்ற ஒரு ஆற்றில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் கரையையே பார்க்கமுடியவில்லை. ராஜன் வாய்க்காலிலிருந்து கொள்ளிடத்திற்கு வடபுறத்தில் சுமார் 3-மைல் தூரம்வரையில் சமுத்திரம் போலவே தென்பட்டது: இவ்வெள்ளத்தில் எங்கிருந்தோ அடித்துக் கொண்டுவரும் வீட்டுக் கூரைகளும், மாடுகளும், வைக்கோல் போர்களும், தட்டுமுட்டுச் சாமான்களும், துணிமணிகளும் ஆடுமாடுகளும் இவ்வளவு அவ்வளவென்று சொல்வதற்கில்லை. தலையன் நரை என்னும் இடத்தில் பல ஆதித்திராவிடர்கள் மிகவும் தைரியமாக இருந்துகொண்டு மேற்படி சாமான்களில் சிலவற்றைக் கரையேற்றிக்கொண்டிருப்பதாகக் கேள்விப் பட்டோம். அந்தோ! பரிதாபம்! எவ்வளவு கிராமங்கள், எவ்வளவு ஜனங்கள், எவ்வளவு ஆடுமாடுகள், எங்கெங்கு சேதமோ, என்ற கவலையே எங்களைப்போன்ற அனேகருக்கு ஏற்படலாயிற்று. பழவாற்றுக்குத் தென்பாகத்தைவிட வடபாகத்தில்தான் அதிககமாக வெள்ளச் சேதமேற்பட்டிருக்கின்றது. கொள்ளிடமும் ராஜன் வாய்க்காலும் ஒன்ருகிவிட்டமையால் இப்பாகமுள்ள சாகுபடிகளுக்கெல்லாம் நாசம் ஏற்பட்டுவிட்டது.

அந்தோ! கொடுமை!! கொடுமை!!! அநேகஏழை ஆதித்திராவிட இல்லங்களை எல்லாம் இப்பாழும் வெள்ளம் நாசஞ் செய்துள்ள கொடுமையை இங்கு எழுத முடியாது. அவர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் எவ்வித ஆதரவுமில்லாது ஓடோடி வந்து ரோட்டோரங்களிலும் மேட்டுப் பாங்கான இடங்களிலும் இருந்து மழையில் நனையும் கொடூரத்தைக் கண்ணுரக்கண்டு சகிக்க முடியவில்லை. மழை விட்டு விட்டுப் பெய்தாலும் வெள்ளம் வடியாதிருப்பதாலும் ஆடு மாடுகளெல்லாம் வெள்ளம் ஏருத இடங்களில் போய் நின்றுகொண்டு மழையினுலும் குளிரினுலும் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தன.



### லங்காஷயர் துணி இறக்குமதி குறைவு

1929ம் வருஷம் லங்காஷயரிலுருந்து 165 லக்ஷம் ரூபாய்க்குக் கச்சை துணிகளும், 198 லக்ஷம் ரூபாய்க்கு வெளுப்பு துணிகளும், 153 லக்ஷம் ரூபாய்க்குக் கலர் துணிகளும் இறக்குமதி செய்யப்பட்டன. ஆனுல் 1930ல் 33 லக்ஷம் ரூபா கச்சை துணிகளும், 30 லக்ஷம் ரூபா வெளுப்பு துணிகளும், 54 லக்ஷம் ரூபா கலர் துணிகளும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

---

## 12—11—30 லண்டனில் கூடிய இந்திய அரசியல் சம்பந்தமான வட்டமேஜை மகாநாடு திறப்புவிழா

### சக்கரவர்த்தியார் பேச்சு

வட்டமேஜை மகா நாட்டைத் திறந்து வைக்கையில் சக்கரவர்த்தி பெருமான் பேசியதாவது:—இந்திய மன்னர்கள், ஜமீன்தார்கள், இந்தியப் பொது மக்கள் முதலியோரின் பிரதிநிதிகளை இந்தப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் தலைநகருக்கு வரவேற்கவும், அவர்கள் பிரிட்டிஷ் மந்திரிகள், பார்லி மெண்டுப் பிரதி நிதிகள் முதலியவர்களோடு நடத்தப் போகும் சமரச மகாநாட்டைத் திறந்து வைக்கவும் எனக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததைப்பற்றி மிகவும் திருப்தியடைகிறேன். இந்தியாவிலே எத்தனையோ முடி மன்னர்கள் சரித்திரப் பிரதானமான கூட்டங்களைக் கூட்டியிருக்கிறார்கள். எதிர்கால இந்திய அரசியல் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்ய எனது பார்லிமெண்டுக்கு உதவியாயிருக்கும்படி ஒரு சமரச மகா நாடு கூடி யோசித்து ஒரு திட்டம் வகுக்கப் பிரிட்டிஷ் பிரதிநிதிகளும், இந்தியப் பிரதிநிதிகளும், இந்திய மன்னர்களும் இங்கே இதுசாறும் கூடியது கிடையாது. சுமார் பத்து வருஷங்களுக்குமுன் இந்தியச் சட்டசபைக்கு நான் அனுப்பிய ஒரு செய்தியில் சட்ட வரம்புக்குட்பட்ட இந்திய அரசியல் முன்னேற்றத்துக்கு அந்தச் சீர்திருத்தம் எவ்வளவு தூரம் உதவிபுரியக்கூடுமென்று நான் குறிப்பிட்டிருந்தேன். ஒரு தேசத்தார் வாழ் நாளில் பத்து வருஷம் மிக்க சொற்பமான காலமாகும். ஆனுல் இந்தப் பத்து வருஷகாலத்திலும் இந்தியாவில் மட்டுமன்றி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குட்பட்ட தேசங்களிலெல்லாம் காலவரையறைக் கடங்காத ஒரு தேசிய உணர்ச்சியும் அபிலாஷைகளும் விரைவாக உதயமாயிருக்கின்றன. அப்பொழுது குறிப்பிட்டிருந்தபடி சென்ற 10வருஷகாலத்தில் அந்தச் சீர்திருத்தங்கள் எவ்வாறு நடைபெற்றிருக்கின்றனவென்று நிர்ணயம்செய்து, எதிர்காலத்துக்குத் தேவையான ஒரு திட்டத்தை உருப்படுத்துவது மிக முக்கியமானதாகும். அத்தகைய வேலை நான் நியமனம் செய்த சைமன்கமிஷனர்கள் செய்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள். அந்த அறிக்கையையும் மற்றும் தஸ்தாவேஜிகளையும் நீங்கள் பரிசீலனை செய்து எதிர்கால அரசியல் திட்டத்தை உருப்படுத்த வேண்டும்.

நீங்கள் தலையிட்டிருக்கும் வேலை எவ்வளவு முக்கியமானதென நான் விளக்கிக்கூறத் தேவையில்லை. நீங்கள் கூடிச்செய்யப்போகும் முடிவிற்ருன் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் க்ஷேமம் அடங்கியிருக்கிறது. சாம்ராஜ்யப் பொது நல உணர்ச்சி உங்களுக்குத் தோன்றியிருப்பது ஒரு நற்சகுனமென்றே தோற்றுகிறது. சாம்ராஜ்யத்தில் உட்பட்ட சகோதர தேசப் பிரதி நிதிகள் எல்லாம் இங்கு விஜயம் செய்திருப்பதும் ஒரு நற்சகுனமேயாகும். உங்கள் மகாநாட்டு நடவடிக்கைகளை மிகக் கவலையோடும் நம்பிக்கையோடும் கருத்தூன்றிக் கவனித்துக் கொண்டிருப்பேன். எனது இந்தியப் பிரஜைகளின் லௌகீக க்ஷேமத்தில் நான் மிக்க கவலையுடையவனு யிருக்கிறேன். உங்கள் மகாநாடு நடைபெறும் காலங்களில் இந்தியப் பிரஜைகளின் லௌகீக க்ஷேமத்தைப் பற்றிய கவலையே என் மனதில் முனைந்து நிற்கும். மெஜாரட்டி வகுப்பார், மைனுரட்டி வகுப்பார், புருஷர்கள், ஸ்திரீகள், பட்டணவாசிகள், கிராமவாசிகள், மிராசுதார்கள், குடியானவர்கள், வாலிபர், எளியார், தனவந்தர், ஏழைகள், பல ஜாதியார், பல மதத்தார் முதலியோரும் தத்தம் நியாயமான உரிமைகள் பெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இவ் விஷயத்தில் நான் மிக்க கவலையுடையவனு யிருக்கிறேன். இந்த பலதிறப்பட்ட உரிமைகளைச் சமரசப் படுத்தி ஒற்றுமை காண்பதே உண்மை சுயராஜ்யத்தின் அடிப்படை என்பதை நான் உணர்வேன். அத்தகைய அடிப்படையுடன் அமைக்கப்பட்ட எதிர்கால அரசியல் அமைப்பு இந்தியாவின் நியாயமான கோரிக்கையைப் பூர்த்தி செய்யப் போதியதா யிருக்குமென்று நம்புகிறேன். அத்தகைய ஒரு திட்டத்தை உருப்படுத்த உங்கள் மகாநாடு உதவி புரிவதாக. நீங்கள் எல்லாம் இந்திய க்ஷேமத்துக்காக உண்மையாக உழைத்தவர்கள் என்றும் எனது பிரஜைகளின் க்ஷேமாபிவிர்த்திக்குப் பாடுபட்டவர்கள் என்றும் பிற்கால சந்ததிகளால் வாழ்த்தப்படுவீர்களாக! உங்களுக்குத் தேவையான ஞானத்தையும் பொறுமையையும் நல்லெண்ணத்தையும் சர்வ வல்லமையுள்ள கடவுள் அளிப்பாராக!

# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

## 9—11—30 காலை 8-மணிக்குத் திரு. S. குழந்தைவேலு முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய நிருவாக சபையில் கீழ்க்காணும் தீர்மானங்கள்* நிறைவேறியுள்ளன:—

1. காரைக்கால், ஸ்ரீவில்லிபுத்தூர், இராமேஸ்வரம் இம் மூன்று இடங்களிலுள்ள செங்குந்தர் சங்கங்கள் தலைச் சங்கத்தின் அங்கங்களாக அங்கீகரிக்கப்பெற்றன.

2. அக்டோபரில் அனுப்பியுள்ள ப்ராக்ரஸ் ரிபோர்ட்டின்படி குறைவாக மார்க் வாங்கிய மாணுக்கர்கள் இரண்டாவது தவணையாக உபகாரச் சம்பளம் வாங்குவதற்குள் மார்க்கு குறைந்த பாடங்களில் திருப்திகரமான அபிவிருத்தியைக் காட்டாவிட்டால் அவர்களுக்கு அனுமதித்துள்ள உபகாரச் சம்பளத்தின் இரண்டாவது மூன்றாவது தவணைகள் நிறுத்திவிடப்படும் என அவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

3. பா. பொன்னுசாமிக்கு (திருநெல்வேலி இந்து காலேஜ் மாணவர்) முன்னமே அனுமதியாயுள்ள 48 ரூபாயோடு மேலும் 16 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

4. மயிலாப்பூரில் பென்னாத்தூர் ஹைஸ்கூலில் மூன்றாவது பாரத்தில் வாசிக்கும் த. சம்பந்தனுக்கு 11 ரூபாய் உபகாரச் சம்பளமாகக் கொடுக்க வேண்டும்.

5. கணக்குக்களைப் பரிசீலனை செய்த சப் கமிடியார் அபிப்பிராயங்களைத் தழுவிச் சங்க லாட்டரி கணக்குகளைப் பாகுபடுத்தி அடுத்த நிருவாக சபைக் கூட்டத்தின் பார்வைக்குக் கொண்டு வர வேண்டும்.

6. சென்னை பவழக்காரத் தெருவிலுள்ள 17-வது எண் இல்லத்தின் மேல் மாடியிலுள்ள அறையைச் சங்கத்தின் காரியாலயத்திற்காக மாதம் ஐந்து ரூபாய் வாடகைக்கு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

7. ஷை காரியாலயத்திலிருந்து கொண்டு காலை 8மணி முதல் 9-30 வரையிலும், மாலை 5-30 முதல் 7 மணி வரைக்கும் அலுவல் பார்க்கத் திரு. தி. சண்முக முதலியார் அவர்களை மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்துக்கு நியமிக்க வேண்டும்.

8. காஞ்சிபுரத்தில் கூடவிருக்கும் இரண்டாவது மகா நாட்டினை ஒழுங்கான முறையில் நடத்தி வைப்பதற்கு நமது சங்கத்தின் பிரதிநிதியாக இருந்து கொண்டு ஷை மகாநாட்டின் வரவேற்புச் சபையினரோடு ஒத்துழைக்கத் திருவாளர் மா. அ. கனகசபை முதலியார் அவர்களை வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

9. 18-9-30-ல் கூடிய அவசர நிருவாக சபைக் கூட்டத்தில் நிறைவேறிய சட்டசபை நியமன சம்பந்தமான தீர்மானங்களைச் செங்குந்த உலகமனைத்தும் அமோதித்துத் தந்தி தபால் மனுக்களாகிய முறைகளில் தக்க சமயத்தில் தெரிவித்திருந்தும் அவற்றைச் சிறிதும் கவனிக்காமல் செங்குந்த சமூகத்திற்கு நியமன மூலம் இவ்வருஷமும் சென்னைச் சட்ட சபையில் பிரதிநிதித்துவம் வழங்காமைக்கு இச்சபை செங்குந்த சமூகத்தின் சார்பாக மிக்க வருத்தத்தையும் அதிருப்தியையும் சென்னை அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

10. செங்குந்தர் கல்வி நிதியைப் பராமரிப்பதற்குச் சப் கமிட்டியார் தயாரித்துள்ள திட்டத்தினை இக்கூட்டம் அங்கீகரித்து (இதை அடுத்த பக்கத்தில் பார்க்க) அத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி கீழ்க்காணும் பதினைந்து கனவான்களை நமது செங்குந்தர் கல்வி நிதியைப் பராமரிப்பதற்குரிய சாசுவத காப்பாளர்சபையின் அங்கத்தினர்களாக நியமிக்கின்றது:—

திருவாளர் ஆ. வே. முத்தையமுதலியார் அவர்கள், பி.ஏ. பி.எல்., புதுவை.
" சு. குழந்தைவேல் முதலியார், அவர்கள், திருமயிலாப்பூர்.
" தி. நா. சபாபதி முதலியார் அவர்கள், திருவாரூர்.
" தெ. ப. கு. ஆறுமுக முதலியார் அவர்கள், தென்காசி.
" வ. மு. மொட்டையப்ப முதலியார் அவர்கள், ஈரோடு.
" வீ. இரத்தின முதலியார் அவர்கள், பி.ஏ. பி.எல், கொரநாடு.
" மா. அ. கனகசபை முதலியார் அவர்கள், கோடம்பாக்கம்.
" M. V. பீமராஜ முதலியார் அவர்கள், குடியாத்தம்.
" R. மாணிக்க முதலியார் அவர்கள், உன்னியூர்.
" மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள், பி.ஏ., பி.இ, திருவல்லிக்கேணி.
" அ. கு. சி சிவசுப்பிரமணிய முதலியார் அவர்கள், அருப்புக்கோட்டை.
" K. மாரிமுத்து முதலியார் அவர்கள், சேலம், அம்மாபேட்டை.
" S. இலக்ஷ்மண முதலியார் அவர்கள், ஐயங்கார்குளம்
" K. V. இராமசாமி முதலியார் அவர்கள், வேலாயுதம்பாளையம், புஞ்சை.
" ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், எம்.ஏ. எல்.டி., சென்னை (Convener)

* முக்கியமான தீர்மானங்களே இங்குப் பிரசுரிக்கப் பெற்றன.





# செங்குந்தர் கல்வி நிதி, சென்னை.

## நிதியையும் அதன் காப்பாளர் சபையின் அமைப்பையும் பற்றிய திட்டங்கள்.

பெயர்:—இந்நிதி 'செங்குந்தர் கல்வி நிதி' என்னும் பெயரோடு விளங்குதல் வேண்டும்.

நோக்கம்:—தகுதியுள்ள செங்குந்த இளைஞர்களைப் பல கலைகளிலும் தொழில்களிலும் உயர்தர படிப்பையும் பயிற்சியையும் அடையத் தூண்டுவதே இந்நிதியின் நோக்கமா யிருத்தல்வேண்டும்.

நன்கொடை, தானம், மகமை உண்டி வசூலாதிய சாதனங்களால் ஒரு நிலையான நிதியினைத் திரட்டிச் சேமித்து வைத்து அதற்கு வருஷா வருஷம் வரும் வட்டித் தொகையிலிருந்து தகுதியுள்ள செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச்சம்பளங் கொடுத்துதவுதலே இந்நிதியின் நோக்கத்தினை நிறைவேற்றும் வழியாயிருத்தல் வேண்டும்.

காரியாலயம்:—இந்நிதியின் காரியாலயம் சென்னையில் இருத்தல் வேண்டும்.

காப்பாளர் சபை:—இந்நிதியைப் பராமரித்தற்குப் பதினைந்து கண்ணியமுள்ள செங்குந்த கனவான்களடங்கிய ஒரு காப்பாளர் சபை "செங்குந்தர் கல்வி நிதியின் காப்பாளர் சபை" என்னும் பெயருடன் இருத்தல் வேண்டும்.

இக் காப்பாளர் சபையின் முதல் பதினைந்து அங்கத்தினர்களும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிருவாக சபையால் நியமிக்கப்பெறல் வேண்டும்.

காப்பாளர் சபையின் பதினைந்து அங்கத்தினருள் ஒருவர் தலைவராகவும், ஒருவர் துணைத்தலைவராகவும், ஒருவர் அமைச்சராகவும், ஒருவர் பொருட்காப்பாளராகவும், இச்சபையினாலேயே ஐந்து வருஷத்துக்கொருமுறை தேர்ந்தெடுக்கப் பெறுதல் வேண்டும்.

இக்காப்பாளர் சபையின் அங்கத்தினர்கள் தமது ஆயுள் பரியந்தம் அங்கத்தினர்களாக இருக்க உரிமை பெற்றவராவர். எவரேனும் ஒரு அங்கத்தினர் இறப்பதினாலோ தாமாக விட்டுவிடுவதினாலோ காப்பாளர் சபையில் அங்கத்தினர் இடம் காலியாகுமாயின், மிகுதியுள்ள அங்கத்தினரே ஒரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்து இதை நிரப்ப உரிமை பெற்றவராவர்.

கூட்டங்கள்:—காப்பாளர் சபைக் கூட்டங்கள் மூன்று மாதத்திற் கொருமுறை பிப்ரவரி, மே, ஆகஸ்டு, நவம்பர் மாதங்களின் முதல் ஞாயிற்றுக்கிழமை நிதியின் காரியாலயத்தில் கூடுதல் வேண்டும்.

காப்பாளர் சபைக் கூட்டம் முறையானதென்று ஒப்புக்கொள்ள அங்கத்தினருள் ஐயவர் கூட்டத்திற்கு வந்திருந்தால் போதுமானது. கோர(quorum) மில்லாத கூட்டம் அதற்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்குத் தள்ளிவைக்கப்பெற்று அப்பொழுது கோரத்தைக் கவனிக்காமலே நடைபெறும்.

நிதி:—நிதியைச் சேர்ந்த பணங்களெல்லாம் சென்னையிலுள்ள பாங்கிகளிலோ, துரைத்தனத்தார் கடன் பத்திரங்களிலோ, வேறு பத்திரமான வகையிலோ காப்பாளர் சபை அப்போதைக்கப்போது தீர்மானிக்கும் வண்ணம் அமைச்சர் பொருட்காப்பாளர் இவர்களின் பெயர்களில் சேமித்து வைக்கப்பெறுதல் வேண்டும்.

காப்பாளர் சபையின் கடமைகளும் உரிமைகளும்:—நிதியைப் பாதுகாப்பதோடு அதைப்பெருக்குவதற்கான முயற்சிகளைச்செய்வதும், நிதியினின்றும் வருஷா வருஷம் வரும் வட்டித்தொகையிலிருந்து தகுதியுள்ள செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளங் கொடுப்பதும், ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல்மீ 30-ந்தேதி வரைக்குமான வரவு செலவு கணக்குக்களை ஜூன்மாதம் வெளியிடுவதும், நிதியின் பராமரிப்பைப் பற்றிய ஒரு அறிக்கையைத் தென்னிந்திய செங்குந்தர் மகாநாடுகள் கூடும் பொழுதெல்லாம் அம்மகாநாட்டின் முன் சமர்ப்பிப்பதும் காப்பாளர் சபையின் கடமைகளாம்.

இக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கான சட்டதிட்டங்களை அப்போதைக்கப்போது அமைத்துக் கொள்வதற்குக் காப்பாளர் சபைக்கு உரிமையுண்டு.

செலவு:—நிதியின் பராமரிப்புக்காகும் செலவுகளுக்கு நிதியின் வட்டி வருவாயினின்றும் எடுத்துச்செலவு செய்துகொள்ளக் காப்பாளர் சபைக்கு உரிமையுண்டு. நிதியின் வட்டி வருவாயே அதன் சாதாரண வருவாயெனக் கருதப்பெறும்.

உத்தியோகஸ்தர்களின் கடமைகள் :—தலைவர் காப்பாளர் சபைக் கூட்டங்களில் தலைமை வகிக்கக் கடமைப்பட்டவராவார்.

தலைவர் கூட்டத்துக்கு வர முடியாத சமயங்களில் துணைத் தலைவர் அக்கூட்டங்களில் தலைமை வகிக்கக் கடமைப்பட்டவராவார்.

அமைச்சர், காப்பாளர் சபைக் கூட்டங்களைக் கூட்டி அவற்றின் தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் பதிவுசெய்து வைப்பதோடு, நிதியைப் பராமரித்தல் சம்பந்தமான கடிதப் போக்குவரவுகளைக் கவனித்துக் கொள்ளக் கடமைப்பட்டவராவார்.

பொருட்காப்பாளர், நிதியின்சொத்துக்களைப் பாதுகாக்கும் பொறுப்பினை யேற்றுக்கொள்வதோடு அதன் கணக்குக்களைச் சரிவர வைக்கக் கடமைப் பட்டவராவார்.

ஒழுங்காகப் பராமரித்து இந்நிதியை நிர்வகிக்க முடியாத சமயம் நேரும் போது, அது வரையில் இதற்குச் சேர்ந்துள்ள சொத்துக்களை யெல்லாம், செங்குந்த மாணுக்கர்கள் நன்மைக்கென அப்போதுஉசிதமாகத் தோன்றும் நிபந்தனைகளுடன், சென்னைச் சர்வகலாசாலை யதிகாரிகளிடம் ஒப்படைத்து அவர்கள் வாயிலாக இந்நிதியின் நோக்கம் நிறைவேறும் வழியைக் காப்பாளர் சபையினர் தேடல் வேண்டும்.

## தலைச்சங்கத்திற்கு வந்த வளையற்காப்பு நன்கொடைகள்

(மாயவரந்தாலுக்கா ஜைழயூர் திரு. அ. சொக்கலிங்க முதலியார் அவர்கள் மூலம் வசூலானவை)

(1-வது) பிரமோதூதஹூ ஐப்பிசிமீ 17உ ஆதிவாரம் செம்பனார்கோவில் திரு. வே. கோவிந்தசாமி முதலியாரவர்களின் குமாரத்தி ஸ்ரீமதி மகாலெக்ஷிமி அம்மாளுக்கு நடைபெற்ற வளையற்காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பெற்றது ரூ. 1—0—0. (ஒன்று)

(2-வது; பிரமோதூதஹூ ஐப்பபிசிமீ 18உ சோமவாரம்செம்பனார் கோவில் கீழ்த்தெருவு திரு. சு. க கோவிந்தசாமி முதலியாரவர்களின் தங்கை ஸ்ரீமதி அசுபதி அம்மாளுக்கு நடைப்பெற்ற வளையற்காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடையளித்தது ரூ. 1—0—0 (ஒன்று)

(3-வது) பிரமோதூதஹூ ஐப்பிசிமீ 18உ திங்கட்கிழமை கூரைநாடு குமரக்கட்டளைத் தெருவு திரு.செ. பழனி முதலியாரவர்களின் குமாரத்தி ஸ்ரீமதி வேலாயி அம்மாளுக்கு நடந்தேறிய வளையற்காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச்சங்கத்திறகு நன்கொடையளிக்கப் பெற்றது ரூ 1—0—0 (ஒன்று)

| | | | |
|---|---|---|---|
| கலவை. திரு. S. அருணகிரி முதலியார் அவர்கள் மூலம் திருமண நன்கொடை | 1 | 8 | 0 |
| திரு. ஆ. வே. முத்தையய முதலியார் அவர்கள் நன்கொடை | 5 | 0 | 0 |
| மதராஸ் பாளையகாட் கம்பெனி உண்டியல் வரவு (ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களுக்கு) | 44 | 12 | 0 |

## 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

பிரமோதூதஹூ கார்த்திகைமீ (1930ஹூ நவம்பர்மீ-டிசம்பர்மீ) தக்ஷிணாயனம், சரத்ருது

15893

| மாதம் | இங்கிலீஷ் | மாதம் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | வாசிய கிரகம் | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நவம்பர் | 16 | பிரமோதூத கார்த்திகை | 1 | ஞா | ஏகா 40-45 | உத் 28-33 | அ 60சி | 1 | ½ | சூன் | மேற்கு | |
| | 17 | | 2 | திங் | துவா 35-44 | அஸ் 25-13 | சி 25-13 பி | 0 | ½ | துவா | வடமே | |
| | 18 | | 3 | செ | திர 31-5 | சித் 22-15 | சி 60 | 0 | ½ | திர | வடகிழ | |
| | 19 | | 4 | புத | சது 27-5 | சு 19-53 | சி 60 | 0 | 0 | சது | ஆகாச | |
| | 20 | | 5 | வியா | அ● 24-3 | விசா 18-20 | சி 60 | 0 | 0 | அமா | பூமி | அமாவாசை |
| | 21 | | 6 | வெ | பிர 22-10 | அனு 17-55 | சி 17-55 ம | 0 | 0 | பிர | கிழக்கு | |
| | 22 | | 7 | சனி | துதி 21-35 | கே 18-43 | சி 60 | 0 | 0 | துதி | வடக்கு | |
| | 23 | | 8 | ஞா | திரி 22-25 | மூ 21-0 | அ 21-0 சி | 0 | ½ | திரி | தென்கி | |
| | 24 | | 9 | திங் | சது 24-53 | பூர 24-48 | ம 60 | 0 | ½ | சது | தெமே | |
| | 25 | | 10 | செ | பஞ் 28-58 | உத் 30-3 | அ 30-3 சி | 1 | ½ | பஞ் | தெற்கு | |
| | 26 | | 11 | புத | சஷ் 34-18 | தி 36-35 | சி 36-35 பி | 1 | ½ | சஷ் | மேற்கு | |
| | 27 | | 12 | வியா | சப் 40-33 | அவி 43-55 | சி 43-55 ம | 1 | ½ | சப் | வடமே | |
| | 28 | | 13 | வெ | அஷ் 46-55 | ச 51-28 | சி 60 | 1 | ½ | அஷ் | வடகிழ | |
| | 29 | | 14 | சனி | நவ 53-0 | பூர 58-40 | ம 58-40 சி | 2 | 0 | நவ | ஆகாசம் | |
| | 30 | | 15 | ஞா | தச 58-10 | உத் 60... | அ 60 | 2 | | தச | பூமி | |
| டிசம்பர் | 1 | | 16 | திங் | ஏகா 60... | உத் 4-50 | சி 60 | 2 | 0 | ஏகா | கிழக்கு | |
| | 2 | | 17 | செ | ஏகா 1-50 | ரேவ 9-40 | சி 60 | 2 | 1 | துவா | கிழக்கு | |
| | 3 | | 18 | புத | துவா 4-50 | அ 12-48 | ம 12-48 சி | 2 | 1 | திர | வடக்கு | |
| | 4 | | 19 | வியா | திர 4-0 | பர※ 14-10 | சி 14-10 ம | 2 | 1 | சது | தெகிழ | கிருத்திகை அண்ணாமலை [தீபம் |
| | 5 | | 20 | வெ | ச○ 2-25 பௌ 59-55 | கிரு 13-50 | சி 13-50 ம | 2 | 1 | பௌ | தெமே | பௌர்ணமி |
| | 6 | | 21 | சனி | பிர 55-0 | ரோ 12-0 | அ 12-0 சி | 2 | 1 | பிர | மேற்கு | |
| | 7 | | 22 | ஞா | துதி 49-43 | மிரு 9-5 | சி 60 | 2 | 1 | துவி | வடமே | |
| | 8 | | 23 | திங் | திரி 43-53 | திரு 5-20 | சி 5-20 அ | 2 | 1 | திரி | வடகி | |
| | 9 | | 24 | செ | சது 37-48 | புன 1-5 பூச 56-45 | சி 60 | 2 | 1 | சது | ஆகாசம் | |
| | 10 | | 25 | புத | பஞ் 31-40 | ஆ 52-28 | சி 60 | 2 | 0 | பஞ் | பூமி | |
| | 11 | | 26 | வியா | சஷ் 25-50 | ம 48-33 | அ 48-33 சி | 2 | ½ | சஷ் | கிழக்கு | |
| | 12 | | 27 | வெ | சப் 20-28 | பூர 45-8 | சி 60 | 1 | ½ | சப் | வடக்கு | |
| | 13 | | 28 | சனி | அஷ் 15-40 | உத் 42-15 | ம 60 | 1 | ½ | அஷ் நவ | தென்கி | |
| | 14 | | 29 | ஞாய | நவ 11-30 | அஸ் 40-0 | அ 40-0 சி | 1 | ½ | தச | தெமே | |
| | 15 | | 30 | திங் | தச 7-55 | சித் 38-20 | பி 38-20 அ. | 1 | ½ | ஏகா | தெற்கு | |




# மின்சார ரசம்

சகல வியாதிகட்கும் தேவாம்ருதம் போன்றது.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது.

**7 வருஷ பார்ச வாய்வு.**

* மின்சார ரசத்தை 2 நாள் சாப்பிட்டேன். எனக்கு 7 வருஷகாலமாய் இருந்த பார்ச வாய்வு உபாதி சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிச்சுகமடைந்ததைப் பற்றி நான் சந்தோஷமடைந்தேன்.

N. S. ராமசாமி ரெட்டியார்,
ஹெட்மாஸ்டர்,
எம். கரட்டிப்பட்டி.
17—10—29.

**25 வருஷ க்ஷயம்.**

** ஒருவர் சுமார் 25 வருஷகாலமாய் க்ஷயம், பெரும் சுவாசம், அதிக இருமல். இருமும்போது இரத்தம் கட்டி கட்டியாக வருவதுமாக மிக்க பாதை பட்டுக்கொண்டிருந்தார். மின்சார ரசத்தைக் கொடுத்துப் பூர்ண சௌக்கியமாய்ச் சுகமாக இருக்கிறது.

கிருஷ்ணசாமி முதலியார்,
வியாபாரம், 38/78, பிடாரியார்கோவில் தெரு, சென்னை.
15-4-29.

ஒவ்வோரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம்.

ஒரேமுறை பரீக்ஷியுங்கள்.

கேட்லாக் இனும்.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.

மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்.



## மதன சுந்தரி மாத்திரைகள்

இம்மாத்திரையை உட்கொண்டவர்களுக்கு சிற்றின்பம் இன்னதெனப் பூர்த்தியாய் விளங்கும். இந்திரபோகத்தைத் தரும். ஆண் தன்மை குன்றியவர்களுக்கும் சந்ததி இல்லாதவர்களுக்கும் இதுசஞ்சீவிபொன்றது. தேகவலிமை நரம்புகளுக்குச் சக்தியும் உண்டாக்குவதன்றி இருபாலார்க்கும் இன்பத்தையுண்டாக்கும். ஒரு தடவை இம்மாத்திரைகளை உண்டு அனுபவித்தவர்களுக்கு நாங்கள் மறுபடியும் சொல்ல வேண்டுவது இல்லை. வே தேவாமிர்தம்.

இதன் விலை டப்பி 1-க்கு ரூ. 1—0—0

தபால் செலவு பிரத்தியேகம்

ரூபிஸ் பெஸிபிக் ஔஷதாலயம்,

நெ. 30, நம்மாழ்வார் தெரு, மதராஸ்.



## நமது தலைவர்களின் அழகிய போட்டோ படங்கள்

| தபாற்செலவு உள்பட விலை | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஒட்டக்கூத்தர் ... | 1 | 4 | 0 |
| தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22-பேர் கொண்ட படம்) .... | 2 | 8 | 0 |
| ம. சண்முக சுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் .... | 1 | 8 | 0 |

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத்தெருவு, சென்னை.